பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

w.tamilnenjam.com

ஜனவரி 2022



நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸூர் ரஹ்மான்

கவிஞர் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

கவிஞர் தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் அ. முத்துசாமி

கவிஞர் ஈழபாரதி

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி



# சங்கே முழங்கு

எங்கும் எதிலும்
எவ்விடம் தன்னிலும்
எந்தமிழ் மொழியே
முதலென்று முழங்கு
பொங்கும் அமுதம்
தன்னுள் கொண்டு
புவனம் ஆளுதென
சங்கே முழங்கு

வங்கக் கடலின்
ஆழமும் குறைவே
வண்டமிழ் மொழியே
வளமென்று முழங்கு
தங்கத்தை விடவும்
தரத்திற் சிறந்தது
தமிழென்று உரக்க
சங்கே முழங்கு

எட்டுத் திக்கிலும்
எங்கு தேடியும்
இணையது இல்லாத
மொழியென்று முழங்கு
கொட்டும் முரசது
சொல்லிடும் தரத்தைக்
குவலயம் உணர
சங்கே முழங்கு

பட்டுப் போலவே
பாங்கும் உள்ளதே
பாரினில் உயர்ந்தது
தமிழென்று முழங்கு
தொட்டுத் தொடர்ந்திட
தொடுவோம் விண்ணையும்
துவளாத தமிழென்று
சங்கே முழங்கு

பா.ச.கண்ணன்
நரசிங்கபுரம் - 636108

# தமிழ்ப்புத்தாண்டே வருக

வழிபிறக்க வந்திடுவாள் தையெனும் பெண்ணாள்
வளம்கொடுக்கக் கரந்தருவாள் தமிழரின் கண்ணாள்
எழுகதிரை வணங்கிடவே பொங்கலும் வைப்பாள்
ஏழ்மையெலாம் விரட்டிடவே நம்மனை பூப்பாள்
உழவரெலாம் மகிழ்ந்திடவே நன்றியும் சொல்வாள்
ஊர்மக்கள் முன்னிலையில் காளையை வெல்வாள்
தொழுதெழுவோம் தைமகளின் குழந்தைகள் நாமே
தொண்டுசெய்தே நாமுயர்வோம் தாயவள் முன்னே!

மஞ்சளுடன் இஞ்சியோடு பாடுவாள் பாரீர்
மாவிலைகள் தோரணங்கள் தேடுவாள் வாரீர்
கொஞ்சிடவே வாழைவரும் கரும்புட னாங்கே!
கொலுவிருக்க மலர்களெலாம் பூத்தெழும் பாங்காய்!
அஞ்சிடாத இளங்கன்றாய்க் குழந்தைகள் ஓட
அன்னையவள் விரைந்திடுவாள் தோகையைத் தேட
நெஞ்சினிக்கக் காய்கனிகள் வீட்டினில் சேர
நேயமெலாம் பெருகிடுமே தமிழக மெங்கும்!

நன்றியினைப் பாராட்டும் நாளிது போல
நாட்டினிலே கண்டீரோ நவில்கவே தோழா!
மன்றினிலே தமிழரெலாம் தலைநிமிர்ந் தாட
மாத்தமிழர்ப் புத்தாண்டாய் மலர்ந்தவள் தையே
நன்றிதுவாம் என்போமே நற்றமிழ் நாட்டில்
நலம்பெருக்கும் தைமகளை வாழ்த்துவோம் பாட்டில்
ஒன்றாகத் தமிழ்நாட்டில்  ஒற்றுமை ஓங்க
கொண்டாடி மகிழ்ந்திடுவோம் தலைமகள் என்றே!

**இராம வேல்முருகன்**
வலங்கைமான்

# வழிகாட்டியாய் வாழ்ந்தவர் !

உண்பதற்கும் பருகுதற்கும்
உடுப்பதற்கும் படிப்பதற்கும்
கண்போல காத்துவந்து
கடமைகளை ஒவ்வொன்றாய்
மண்மீது மக்கட்கு
மறவாமல் கற்பித்தார்
பொன்போன்ற தந்தையிவர்
பொறுப்போடு வாழ்வதற்கே !

நீச்சலுமே பயிற்றுவிக்க
நீந்தியுமே காட்டுவித்தார் ,
கூச்சலிட்டு அடம்பிடிக்க
கூறினாரே அறிவுரையை !
பேச்சினையே கேட்காவிடில்
பிரம்பினையே எடுத்திட்டார் ,
மூச்சடைக்கி தண்ணீரில்
முறையாக நீந்தவைத்தார் .

மிதிவண்டி ஓட்டுதற்கும்
மின்னலாகப் பறப்பதற்கும்
மதிநுட்பத் தந்தையோ
மனத்தினிலே பதியவைத்தார் ,
விதிவழியே வாழ்வில்லை
வியனுலகோ பேரெல்லை !
நதிபோல விரைவதற்கு
நடந்தோடி வந்திட்டார் .

தொழில்செய்து பிழைப்பதற்கும்
தூயமனம் கொள்வதற்கும்
எளிமையாய்ப் புரியவைத்து
எடுத்துக்காட் டாயிருந்து
வலிமையுடன் எதையும்நாம்
வாழ்க்கையில் எதிர்கொள்ள
விழிவைத்து நமக்கிவரோ
வித்தைகளை ஊட்டினாரே !

திருமணமும் செய்துவித்துத்
திருவிழாபோல் நடத்திவைத்து
நறுமணமாய் நம்வாழ்க்கை
நானிலத்தில் தழைப்பதற்குப்
பெருஞ்சுமையைத் தாங்கியிவர்
பொறுப்புடனே நடப்பதாலே
வருங்காலம் எளிதாக்கி
வழிகாட்டும் துணையானார்.

பிறந்தவுயிர் அத்தனையும்
பிறிதொருகால் இவ்வுலகில்
இறந்துபட வேண்டுமென
இயற்கையின் நியதியாகும்,
கறந்தபாலும் முலைபுகாது
கடைந்தவெண்ணெய் மோர்புகாது
திறந்தவெளி சித்தர்கள்
திருவாயும் மலர்ந்தனரே !

எப்படித்தான் நடக்குமென்று
இறப்பினையே நினைப்போர்க்கு
இப்படித்தான் இருக்குமென்று
இறந்துகூட காட்டிட்டார் !
உப்பைக்காண் நீர்போல
உயிருமதைக் கரைத்திட்டார் ,
தப்பான வழிசொல்லார்
தன்னைத்தான் வென்றதாலே !

கவிஞர்.அ.முத்துசாமி
தாரமங்கலம்





# கவிக்கோ அப்துல் ரகுமான்

## நினைவு ஹைக்கூ கவிதைப் போட்டி

## பரிசு

# ரூபாய் 1 லட்சம்



வணக்கம் கவிஞர்களே!,

தமிழ்க் கவிதை உலகின் தனித்த அடையாளமான கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் பெயரில், ரூபாய் ஒரு லட்சம் பரிசுத் தொகையுடன் இந்த ஹைக்கூ கவிதைப் போட்டி அறிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1) முதல் பரிசு | ரூ.25,000 |
| 2) இரண்டாம் பரிசு | ரூ.15,000 |
| 3) மூன்றாம் பரிசு | ரூ.10,000 |
| 4) வெளியிடத் தேர்வு செய்யப்படும் 50 கவிதைகளுக்கு தலா | ரூ.1,000 |

**போட்டிக்கான விதிமுறைகள்:**

1) ஹைக்கூ கவிதை இலக்கணப்படி, மூன்று வரிகளுக்குள் எழுதப்பட்டிருக்கும் கவிதைகள் மட்டுமே ஏற்கப்படும்.
2) கவிதைகள், தங்கள் சொந்தக் கற்பனையில் எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். இதழ்கள், இணையத்தளங்கள் மற்றும் சமூக வலைத்தளங்கள் போன்ற எவற்றிலும் வெளியிடப்பட்டதாக இருக்கக்கூடாது.
3) கருப்பொருள் உங்கள் விருப்பப்படி எதுவாகவும் இருக்கலாம்.
4) தமிழில் 'யூனிகோட்' எழுத்துருவில், கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்பட வேண்டும்.
5) ஒருவர் அதிகபட்சமாக இரண்டு கவிதைகள் மட்டும் அனுப்பலாம்.
6) கவிதைகளை 15-02-2022-க்குள் அனுப்பவேண்டும். குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் வந்து சேராத கவிதைகள் போட்டிக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.
7) கவிதைகள் தேர்வில் நடுவர் குழுவின் முடிவே இறுதியானது.
8) போட்டி முடிவுகள் 2022 மார்ச் மாதம் வெளியாகும்.
9) கவிதைகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: kavikohaikupotti@gmail.com

குறிப்பு:
பரிசளிப்பு மற்றும் பரிசுபெற்ற கவிதைகள் அடங்கிய நூல் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெறும். தேதி மற்றும் பிற விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**என்.லிங்குசாமி / ஆர்.சிவக்குமார்**

ஒருங்கிணைப்பு: **டிஸ்கவரி புக் பேலஸ்**, கே.கே.நகர், சென்னை -78

# அவரவர்க்கு உரியது

- நீடூர் அ.முஹம்மது நிஜாமுத்தீன்
பேங்காக்.



எல்லா வேலைகளையும் முடித்து விட்டு அலுவலகத்திலிருந்து சிராஜுத்தீன் வெளியில் வந்தபோது நேரம் மணி ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது. அலுவலகக் கட்டடத்தின் வாயிலருகிலேயே இருந்த பஸ் ஸ்டாண்டுக்கு வந்து பஸ்ஸுக்காக காத்திருந்தான்.

பஸ் வரக்காணோம்.

அப்பொழுது தரையில் கிடந்த கலர் பேப்பரை எடுத்துப்பார்த்தான். அட! ரிசர்வ் பேங்க் கவர்னர் கையெழுத்துப் போட்டிருந்த 500 ரூபாய் தாள்!

சிராஜுத்தீனுடைய டூ வீலர் பழுதாகி, உதிரி பாகங்கள் மாற்ற 450 ரூபாய் ஆகும் என்று பழுது நீக்குநர் சொன்னதால் அவன் இன்று பஸ்ஸில் அலுவலகத்திற்கு வந்திருந்தான்.

கைவசம் இருப்பதோ 500 ரூபாய் மட்டிலுமே. இன்னும் இந்த மாதத்தின் ஐந்து நாட்களை ஓட்டவேண்டும். இந்த நிலையில்தான் அந்த பஸ் ஸ்டாண்டில் 500 ரூபாய் கிடக்கிறது.

சிராஜுத்தீன் சுற்றும் முற்றும் பார்த்தான். ‘இது யாருடைய பணம்? இதை எப்படி உரியவரிடம் சேர்ப்பது? காவல் நிலையத்தில் கொடுத்தாலும் அது எங்கு போய் சேரும்?’ என்பதை யோசித்தான்.

‘சரி, இந்த பணத்தை பள்ளிவாசலின் உண்டியலில் சேர்த்துவிடுவோம்’ என்ற முடிவுடன், வந்த பஸ்ஸில் ஏறினான்.

கடைத்தெரு பஸ் ஸ்டாப்பில் இறங்கி, ஐந்து வயது மகள் ஜன்னத்திற்கு மிகவும் பிடித்த மாதுளம் பழம் வாங்கிக் கொண்டு வீட்டினுள் நுழைந்தான்.

“அத்தா” என்று மகிழ்வோடு ஓடி வந்தவளை தூக்கி கன்னத்தில் முத்தமிட்டு, கீழே இறக்கியபோது, “அத்தா, அத்தா, ஒரு காரு வேகமா என்மேலே மோத வந்துச்சித்தா...” என்றாள் ஜன்னத்.

“பஸ்ஸிலே வந்து ரொம்ப களைப்பா இருக்கீங்க, இந்த டீயைக் குடிங்க” என்று சொல்லி டீயைக் கொடுத்த அவன் மனைவி ஆபிதா, “நம்ம ஜன்னத் சாயங்காலம் தெருவிலே விளையாடிக்கிட்டிருக்கும் போது யாரோ ஒருத்தன், என்னத்தையோக் குடிச்சிருந்தான்போல... தாறுமாறாக் காரை வளைச்சி, வளைச்சி ஓட்டிட்டு வந்திருக்கான். அப்போ எதிர்வீட்டுக்கு வந்து வெயிட்டிங்ல இருந்த ஆட்டோ டிரைவர் அபுல்ஹஸன் பாய்ஞ்சி புள்ளையைத் தூக்கிக்கிட்டு உருண்டு சின்ன காயம்கூட படாம புள்ளயக் காப்பாத்திட்டான். ஆனால் அவனுக்குத்தான் கை, காலெல்லாம் அடி. அப்படியும் அவன் உடனே சவாரிக்குப் போயிட்டான்” என்று விளக்கமாகச் சொல்லி முடித்தாள்.

ஆட்டோ டிரைவர் அபுல்ஹஸன் நாணயமானவன். சரியானகட்டணம்தான் வாங்குவான். இருப்பினும் கஷ்டப்படும் குடும்பம்தான்.

“அல்ஹம்துலில்லாஹ்!” (அல்லாஹ்வுக்கு நன்றி!) என்று கூறி எழுந்தவன், “இதோ அஞ்சி நிமிஷத்துலே வந்திடுறேன், ஆபிதா” என்றவண்ணம் செருப்பினுள் காலை நுழைத்தான்.

அந்த ஐனூறு ரூபாயை எங்கே, யாரிடம் கொடுக்கவேண்டும் என்பதை அவன் முடிவு செய்துவிட்டான். ‘சம்பளம் வந்ததும் பள்ளிவாசல் பைத்துல்மால் உண்டியலில் முன்பு நினைத்த ஐநூறு ரூபாயைப் போடணும்’ என்று நிய்யத் (நேர்ச்சை) செய்துகொண்டான்.

# மனிதனின் மகத்துவம்



விதவிதமாய்க் கோடி உயிர்கள் அகிலத்தில்
மிகச் சிறப்பாய் மனித உயிரோ உச்சத்தில்

வியப்பாய் ஆயிரம் திறமைகள் புதைந்திருக்கும்
சிறப்பாய்த் தனித்துவம் கொண்டே நிறைந்திருக்கும்

மனிதன் மதியால் உலகை ஆளுகின்றான்
யுத்தம் மனதில் கொண்டே வாழுகின்றான்

சிறகுகளின்றி வானில் உயரே பறக்கின்றான்
வாழ்வில் உன்னத உறவில் சிறக்கின்றான்

விஞ்ஞான உலகினில் கால் பதித்தான்
விசித்திரப் படைப்புக்கள் படைக்கின்றான்

காலத்தை நேரத்தை கணக்கில் வைத்தான்
கடமையைத் தனக்குள்ளே வழிவகுத்தான்

சிந்தனை உலகை ஆட்சி செய்வான்
சிந்தித்துச் செயலில் செய்தே முடிப்பான்

அந்த வானமே உயரமாய் தெரிந்திருந்தும்
துணிவாய் நிலவினில் அவனே கால் பதித்தான்

கடல் ஆழமே என்பது தெரிந்திருந்தும்
மூச்சடக்கி முத்துக்கள் நிறைய சேகரித்தான்

புயல் காற்றினில் வேகமே புதைந்திருக்கும்
மனிதன் மூளையோ அதைவிட சிறந்திருக்கும்

உயிர்கள் அனைத்தையும் அன்பினில் நேசிப்பான்
நட்பில் உரிமையாய் உதவிட சுவாசிப்பான்

அழகாய் மனிதன் சிறப்பதோ மனிதத்தில்
மனிதம் மறவாமல் வாழ்வோம் உலகத்தில்

வாழ்வியல் கவி **சா. நாகூர் பிச்சை**
திண்டுக்கல்



# அழகிய ஏழை

வானவில்லின் வண்ணம் அவள்
வதனத்தில் மின்னக் கண்டேன்.

ஆறாம் பிறையினை அவள்
நெற்றியில் ஒட்டக் கண்டேன்.

விற்களின் வித்தைகள் அவள்
இமைகளில் விளையாடக் கண்டேன்.

மான்களின் விழிகள் அவள்
மயக்கும் கண்களிற் கண்டேன்.

ஆரஞ்சுச் சுளைகள் அவள்
அதரங்களில் அசையக் கண்டேன்.

முத்துக்கள் அவள் பற்களிலும்
பவளங்களாய் விரல் நகங்கள்.

மலை முகடுகள் அவள்
மார்புகளாய் அசையக் கண்டேன்.

வறுமையின் வடிவம் அவள்
வயிற்றில் உப்பக் கண்டேன்.

இடுக்கியின் இயல்பு அவள்
இடையில் இணையக் கண்டேன்.

இன்னும் நான் காணவில்லை
அவளுக் கோர் துணையினை

இன்றும் அவள் ஏழைதான்
என்றும் இனி இப்படித்தான்

– கவிஞர் எஸ். ஏ. கப்பார்
மருதமுனை. (இலங்கை )

# உயிரும் நானும்

உள்ளும் புறமும்
ஆயிர வேதனைகளை
அப்பறப்படுத்தி
உள்ளிருந்த
இருட்டறையிலே
வெளிச்சம் கண்டேன்
அவளின் இரகசிய
மொழியியல் நுட்பத்தில்..

பல்கலைக்கழகம்
பார்வையில் கூட
காணாத
அதிசயங்கற்ற
அதிநுட்ப மாணவி
என்னப்பாவின்
மனைவி..

புகழ்ந்து புறந்தள்ளாது
கருவறைக்குள்
நேரில் காட்சிதரும்
என்னுயிர் அம்மா..

முகவரிச் சுருக்கம்
முடிந்து கொண்டது
அவளின் அனுபவங்கள்
அனைத்தையும்
உள்ளிருந்த மேடு
பள்ளங்களில்..

**- விஜி கல்யாணி**
கோவை..

# திண்டுக்கல் மாவட்டச் சிறப்புகள்!

வெண்பா

1.
கொண்டல் தவழ்ந்து குறும்பைத் தழுவுமே
தண்டலை மஞ்ஞை தளுக்காக ஆடுமே
கண்ணைக் கவர்ந்து கருத்தை நிறைக்குமே
திண்டி நகரின் திறம்!

2.
அருளைப் பொழியும் அபிராமி அன்னை
திருக்கண் எதிரில் திருமணம் செய்தால்
இருமனம் சேர்ந்து இறுதிவரை வாழும்
திருவடி பணிவோம் தினம்.

3.
கோட்டைக்கு மாரியே காவலாய் நிற்கிற
பூட்டு நகரிலே பூமணத் தூறலாய்
ஊட்டம் அளிக்கிற ஊண்சோறைத் தேடியே
நாட்டம் மிகவே நாடு!

4.
மேடையான பர்வதத்தின் ஆடையாம் குறிஞ்சியும்!
சாடையாய் வாவென்கும் செண்பகப் பூக்களும்
வாடையில் சில்லிடும் வெள்ளி அருவியும்
கோடை விடுமுறையில் காண்!

5.
கொஞ்சும் எழிலில் கண்கள் நிறையுமே
சஞ்சீவிக் குன்றின் சிதறிய பாகம்
சிறுமலை ஆகிச் செழித்துத் திகழும்
குறுமிளகு காய்க்கின்ற கோடு!

**- இரா. கவிதா,**
திண்டுக்கல்

# நங்கூரம்

**- திருமாமகள்**

எல்லாம் முடிந்து விட்டது. என் கணவரைப் பொறுத்துத்தான் சொல்கிறேன். இப்போது தான் கண் எதிரே மூச்சை நிறுத்தியது போல இருக்க, இதோ பத்தாவது நாளும் முடிந்துவிட்டது.

பத்து நாள் முன்னோக்கி சென்றது என் நினைவலைகள். காசு பணமற்ற பயணம், நினைவுப் பயணம் தான், சில சமயம் துயரப் பயணமாய்.

இப்படி நடக்கும் என்று யாரும் நினைக்கவில்லை. நானும். நினைக்கவில்லை. நாம் நினைக்க தெய்வமொன்று நினைப்ப தில்லையா? என் எண்ணத்தை புரிந்து கொண்டது போல் 'நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை' என்று பக்கத்து வீட்டு தொலைக்காட்சியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

பத்து நாள் முன்பு நான் இந்த நிலத்தை முடித்து தருகிறேன் என்று சொன்னவர்தான். கிளம்ப ஆயத்தமாகி காபியையும் கொடுத்தாகிவிட்டது.

"என்னவோ தெரியலமா... கொஞ்சம் படுத்துக்கிறேன்... கொஞ்ச நாழில கிளம்பறேன்" சொல்லி படுத்தவர் தான்.

அடுத்த அரைமணி நேரத்தில் அவர் இல்லை. மாரடைப்பு என்று காரணம் சொன்னார்கள் மருத்துவர்கள்.

"அரை மணி முன்ன வரைக்கும் பேசிட்டு இருந்தார். எனக்கு மூச்சு திணறுது என்று சொன்னவர்தான் திரும்பி வந்து பார்த்த போது உயிர் இல்லை"

இதையே சாவி கொடுத்த பொம்மை போல சொல்லிக் கொண்டு இருந்தது எனக்கு புரிந்தது. கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை அப்போது.

மகளை பார்த்தேன். அவள் அலை பேசியில் யாருடனோ பேசிகொண்டிருந்தாள், அவள் அப்பாவின் மரணம் குறித்து. எனக்கு ஒரு ஆச்சரியம். என்ன தெரியும் இந்த குழந்தைகளுக்கு என்று நினைத்துக் கொண்டிருப்பவர்கள், சமயம் வரும்போது அவர்களின் நடத்தையில் ஏற்படும் மாற்றம் நமக்குள் மிகுந்த அதிர்ச்சியை தோற்றுவிக்கும். எனக்கு அப்படித்தான் ஆச்சர்யமும் கூடவே மேலிட்டது.

புரோகிதர் என்னைப் பார்த்தார்.

"நீங்க தான் பாரியாளாம், இங்க வாங்கோம்மா கைப்புல்லை தொட்டு குடுங்கோ. பையன் இல்லையோனோ?" புரோகிதர் மந்திரம் சொல்ல ஆரம்பித்து விட்டார். வரும் போதே விவரம் தெரிந்து கொண்டு வருகிறார்கள்.

"குழந்தை இங்க வாம்மா, கொடத்து தண்ணியை அப்படியே காலிலிருந்து இருந்து தலை வரைக்கும் கொட்டிட்டு, தலைமாட்டில் கவுத்து வெச்சுடு."

என் பெண் அவர் சொன்னதைச் செய்ய இப்போதும் அந்தக் காட்சி மனதில் ஓடியது.

தண்ணீர் கொட்டும் போது அவருக்கு மூச்சுத்திணறுவது போன்ற ஒரு பிரமை எனக்கு இருக்கத்தான் செய்தது. பிற்பாடு என் மகளும் அதையே தான் சொன்னாள்.

கூட்டம் போகப்போக அதிகரித்துக் கொண்டே போனது. மருத்துவரின் சான்றிதழ் வாங்க மீண்டும் பரபரப்பில். ஆதார் கார்டு ரேஷன் கார்டு எங்கே என்று தேட ஆரம்பித்த பொழுது அலுவலக நண்பர்கள் வந்து கை கொடுத்தது ஆறுதலாய் இருந்தது.

மாடியை விட்டு கீழே இறங்கி வந்த போது தான் தெரிந்தது அப்படி ஒரு கூட்டம் வீட்டு வாசலிலும். எல்லாம் தயாராய். முப்பதாயிரம் கொடுத்துடுங்க. எல்லாம் நாங்க கான்ட்ராக்ட்ல முடிச்சுடுவோம்.

சொன்னது போல் சரியாகத்தான் செய்து இருந்தார்கள். வேறு எந்தவித பதட்டமும் இல்லாத வகைக்கு எல்லாம் தயாராக இருந்தது.

சரியான சமயத்தில் மருத்துவரின் சான்றிதழை கையில் கொடுத்துவிட்டு நண்பர்கள் அடுத்து என்ன என்பது போல நின்றார்கள்.

மனித நேயம் இல்லை என்று யார் சொன்னது அங்கங்கே கையில் தினிக்கப்பட்ட ஐநூறு, ஆயிரம் எல்லாம் சேர்ந்து பத்தாயிரம். பிறகு யார் யார் கொடுத்தார்கள் என்று கேட்டுவிட்டு அதை எல்லாம் அடைக்க வேண்டும்.

நடுத்தரவர்க்கத்தின் புத்தி. அப்பொழுது கூட கை நீட்ட பிடிக்காமல் மனதுக்குள் வந்து போனது.

''யாரெல்லாம் கீழ விழுந்து கும்பிடணுமோ வாங்க''. புரோகிதர் கூப்பிட தெருவில் விழுந்து கும்பிட்டு விட்டு வேனில் ஏறினோம்.

அம்மா வேனில் நானும் ஏறிக் கொள்கிறேன் என்ற மகளைப் பார்த்தேன். ஆச்சர்யம் எனக்கு. எப்படி இது சாத்தியம். பேசும்போது குரல் கூட வெளி வராது அவளுக்கு. பெரிய மனுஷி போல் பக்கத்தில் அமர்ந்தாள். அவள் அப்பாவை பார்த்துக் கொண்டே வந்தாள். அவரின் முகத்தில் அப்படி ஒரு சாந்தம். எனக்கென்ன, இனி நீ பார்த்துக் கொள்வாய் என்பதாய்.

எப்போதும் அதைத் தானே செய்து கொண்டிருந்தேன். புதிதா என்ன? எனது மனது ஒரு விரக்தி ஆட்டம் போட்டது.

சிலரின் வாழ்க்கையில் எப்பொழுதுமே தனியாய் விடப்படுவது போல ஒரு உணர்வு என்னுடைய விஷயத்திலும் அப்படித்தான் இருந்தது. சிறுவயதிலிருந்தே எல்லாவற்றையும்நானாகவே பார்த்துக்கொண்டு. போதாக்குறைக்கு எப்போதும் ஒரு குழந்தை யைப் போல் ஒரு கணவர் எனக்கு. தாயின் வளர்ப்பு சரியில்லை என்றால் கஷ்டம் யாருக்கு?

வியாபாரம் வியாபாரம் என்று சொல்லி அவர் ஏமாந்து போனது தான் மிச்சம். சாமர்த்தியம் எதுவும் கிடையாது. வீட்டில் மட்டும் சத்தம் அதிகமாக இருக்கும். கடைசி வரை வேலைக்கே போகாமல், இருந்ததையும் விட்டு விட்டு, என்னவோ என் சம்பாத்தியத்தில் வாழ்க்கை ஓடிக்கொண்டு தான் இருக்கிறது இன்னும், இனியும் அப்படித்தான்.

உறவினர்கள் நண்பர்கள் எல்லாம் புடைசூழ ஐந்தாவது மணிக்கு நெருப்புக்கு வாரிக் கொடுத்தாகிவிட்டது.

வீட்டுக்குள் வந்து நுழைந்ததும் வீடு சுத்தமாக இருந்தது. என் மகளின் தோழி «அம்மா, முதல்ல உட்காருங்க நான் எல்லாத்தையும் பார்த்துக்குறேன்» என்று சொன்னது அந்த சமயத்துக்கு ஆறுதலாகத் தான் இருந்தது.

எட்டுமணிக்கு பிறகு எல்லோரும் போனதும் வீடு வெறிச்சோடி விட்டது.



மரணம் நிகழ்ந்த வீடு இப்படித் தான் இருக்குமோ? அடுத்து அடுத்து அலைபேசி அழைப்பு. எனக்கு பேசிப்பேசி தொண்டை கட்டி விட்டது. குமுறிக்குமுறி அழுகை பீறிட்டுக்கொண்டு வந்தது. அழ அழத்தான் துக்கம் அடங்கும் என்பார்கள். அது என்னை பொறுத்தவரை உண்மை தான். அடுத்து என்ன செய்யப்போகிறேன் எதுவும் புரியவில்லை.

சொத்து, சுகம் எதுவும் பிரிக்க வில்லை. ரிடையர் ஆன பிறகு என்ன செய்வது எதுவும் புரிபடவில்லை. பெண்ணும் வேலை தேடிக்கொண்டு தான் இருக்கிறாள்.

அலுவலகத்துக்கு பதின்மூன்று நாள் விடுப்பு போட்டாகிவிட்டது.

“அம்மா உங்க ஹஸ்பண்ட், காரியம் முடிகிற வரைக்கும் அடுப்பு கிட்ட போகக்கூடாது. பொண்ணு வேணா நாலு நாளுக்கு அப்புறம் காபி டீ போட்டுக் கொடுக்கலாம். பக்கத்துல யாரும் சொந்தக் காரங்க இருந்தா சாப்பாடு வர வைங்க''. புரோகிதர் சொல்லிவிட்டு சென்று விட வீடு வெறிச்சென்று ஆனது.

கிளம்பும் பொழுது புரோகிதர் சொன்னது ஒருமுறை வயிற்றில் புளியை கரைக்க தான் செய்தது. ஒன்பதாம் நாளிலிருந்து பதின்மூன்றாம் நாள் வரைக்கும் எண்பதாயிரம் எடுத்து வைத்துவிடுங்கள் எல்லாம் காண்ட்ராக்டில் முடிச்சுடுவோம்.

அந்தக் காலங்களில் சாரிட்டி என்று ஒன்று செய்வதற்காக ஊரை கூட்டி ஏழைகளுக்கு சாப்பாடு போடுவதற்காக வைக்கப்பட்ட அந்த சடங்குகள் இப்போது நடுத்தர வர்க்கத்தினரை மூச்சுத்திணற செய்கிறது என்பதில் மிகையேதுமில்லை.

''அம்மா என்னது? எண்பதாயி ரத்துக்கு எங்கம்மா போறது'' என்ற மகளை பார்த்தேன். கைவளையல்களை பார்த்து கொண்டே சொன்னேன்.

“அடகுக் கடைக்கு போய் கொஞ்சம் படிச்சிட்டு வரட்டும்''

புரோகிதர் சிலபல அறிவுரைகளை கொடுத்து விட்டு நகர்ந்தார்.

“லாந்தர் விளக்கு காரியம் முடிகிற வரைக்கும் அணையக் கூடாது. மண் ணெண்ணெய் வாங்கிட்டு வர சொல்லுங்க”. சொல்லிவிட்டு கிளம்பிவிட்டார்.

இரவு அத்தனை அலுப்பிலும் தூக்கம் வருமா என்று அடம்பிடித்தது. மன உளைச்சல் கண்களை விழித்துக் கொண்டே இருக்கச் செய்தது.

“கேள்விப்பட்டேன் மேடம் அதிர்ச்சி யாக இருந்தது''

''என்ன சொல்ல சொல்றீங்க யாருக்கு எப்ப என்ன நடக்கும்னு தெரியல''

“என்னம்மா உனக்கு இப்படி ஒரு கஷ்டம்''

வந்த அனைவரும் ஒருவரை ஒருவர் சைகை செய்து கொண்டு கிளம்பினர். ஒரு வீட்டில் இழப்பு இருந்தால் யாரும் சொல்லிக் கொள்ள கூடாது என்ற கொள்கைகளை அவர்கள் அனுசரிப்பது புரியத்தான் செய்கிறது. இதையேதான் நானும் செய்திருக்கிறேன்.

எல்லாம் வரிசையாக ஒன்றன்பின் ஒன்றாய் ஓடி தூக்கத்தை கெடுத்து கொண்டிருந்தது. சரியாக நாலு மணிக்கு விழிப்பு வந்து விட வயிறு பசியில் சத்தம் போட்டுக் கொண்டிருந்தது.

எல்லாமே மசான வைராக்கியம் தான். இடுகாட்டுக்கு போகும்போது இருக்கும் ஒளிவட்டம் திரும்பும்போது இருப்பதில்லை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உப்பும் தண்ணீரும் இறங்க துக்கம்போகும் என்பார்கள். தேனீர் கடையில் இருந்து வந்தது தொண்டையில் இறங்கியது கொஞ்சம் பரவாயில்லை போலிருந்தது.

இதோ ஒன்பது நாள் ஓட்டமாய் ஓடி பத்தாம் நாள் முடிந்து விட்டது.

பத்து நாட்களுக்கும் சகோதரன் வீட்டிலிருந்து வேளா வேளைக்கு சாப்பாடு. முதன் முறையாய் உடன் பிறந்த வீட்டை கஷ்டப்படுத்தியிருக்கிறேன். வீட்டில் வேலை எதுவும் இல்லாததால் கிழக்கும் மேற்கும் பார்த்துக் கொண்டு, வந்த அலைபேசியில் அழைப்பினை ஏற்றுக் கொள்ளுவதுதான் வேலையாக இருந்தது.

பத்தாம் நாள் காரியம் காலையில் இருந்து ஆரம்பித்து மூன்று மணி வரை ஓட்டியது தலையைச் சுற்றத் தான் செய்தது.

எல்லோரும் கிளம்பி விட புரோகிதர் என்னை தனியாக அழைத்தார்.

அதற்கு முன் என் மைத்துனர் என்னிடம் வந்து அதெல்லாம் நீ ஒன்னும் எடுக்க வேண்டாம் திருமாங்கல்யத்தை எல்லாம். அவன் எப்பவும் இருக்கான் உன் கூடவே என்று சம்பிரதாயமாக சொல்லிவிட்டு ஊருக்கு கிளம்பி விட்டார். நானும் என் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டோம். வேறு என்ன செய்வது. அசட்டு சாம்பிரதாய வார்த்தைகள்.

"பாரும்மா உனக்கு பொண்ணு இருக்கு. அதனால ஆயிரம் பேர் ஆயிரம் சொல்லலாம். புரட்சி பேசலாம். ஆனா தோஷம் போகணுமா, நீங்க திருமாங்கல் யத்தை எடுத்துடணும். மத்தபடி மூக்குத்தி எல்லாம் போட்டுக் கொள்ளலாம்'' சாஸ்திரங்களை சொல்லிவிட்டு கிளம்பி விட்டார் புரோகிதர்.

அவரவருக்கு அவரவர் வேலை எல்லாரும் சென்று விட நானும் என் மகளும் மட்டும் தான் வீட்டில். இதை வேறு, புரோகிதர் சொல்லிவிட்டார். மூன்று மணிக்கு எழுந்து கொள்ள வேண்டும். பிறகு நீங்கள் மாங்கல்யத்தை கழற்றி பாலில் போட்டு விட்டு ஏதாவது சாப்பிட வேண்டும். பிறகு உங்கள் மகளும் ஏதாவது சாப்பிட்டு விட்டு,. அந்த பாலில் நனைத்த மாங்கல்யத்தை பார்த்துவிட்டு அதன் பிறகு தான் உங்கள் முகத்தில் விழிக்க வேண்டும். இந்த சாஸ்திரங்கள் ஒருபுறம் நம்பத்தான் வேண்டியிருக்கிறது.

யாரை கூப்பிடுவது என்று ஒரு கணம் மனதுக்குள் படபடப்பு. சகோதரன் இரவு வந்து தங்க கூடாது. ஒரு சகோதரி கண் ஆபரேஷன் செய்து கொண்டதால் வர இயலவில்லை என்று முன் கூட்டியே சொல்லிவிட்டாள். கூப்பிட முடியாது. பிற்பாடு தெரிந்தது அவள் ஆபரேஷன் ஒத்திப்போடப் பட்டது என்று. வர விருப்பமில்லாதவர்களை கயிறு கட்டி இழுக்க முடியுமா?

ஒரு சகோதரிக்கு சர்க்கரை நோய். ஒருத்தி கனடாவில். உடன்பிறப்புகள் இருந்தும் சமயத்துக்கு எதுவும் கை

# கொடுத்துப் பெறு

அகிலம் ஆண்டவனின்
அற்புத படைப்பு
அதில் அன்பொன்றே
அகிலத்தின் மையக்கருத்து
அன்பு ஆண்டவன்
அளித்த பரிசு
அதை வேண்டாதோர்
அகிலத்தில் அரிது
அறப்போர் தராத
அகமகிழ்வையும்
அன்பால் ஜெயித்து
அடைந்திட முடியும்
அனைத்து உயிரும்
அடைய நினைப்பது
அன்பொன்றைத்தான்
அன்பு இல்லையேல்
அகிலம் கூட வெற்று
கிண்ணம்தான்

அன்பு கொண்ட சக்தி
அகிலத்திடம் இல்லை
அதனாலோ என்னவோ
அகிலம் கூட
அடிமையானது
அன்பின் அரவணைப்பில்
அகிலமே அடிமையான பின்
அதில் வாழும் நாம் எம்மாத்திரம்
அன்பை பகிர்வோம்
அன்புடன் வாழ்வோம்
அன்பான உலகமொன்றை
அன்பாலே அமைப்போம்
அனைவரும் வாரீர்

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம்

கொடுக்கவில்லை. அவர்கள் கவலைப் பட்டதாகவும் தெரியவில்லை. கஷ்டத்தில் பழகி விட்ட எனக்கு இது என்ன பெரிய விஷயம் என்று கூட இருக்கலாம். இல்லை இவள் வீட்டிற்கு போகாவிட்டால் கேட்க நாதியில்லை என்றும் கூட தோன்றலாம். மேலும் அருகாமையில் இருந்து யாரையும் கூப்பிட முடியாது. இந்த கலியுகத்தில் அடுத்த பிளாட்டில் யார் இருக்கிறார்கள் என்பதே தெரியாத பட்சத்தில் இது எல்லாம் சாத்தியம் இல்லை. சொந்தங்களே கண்டு கொள்ளாத போது அவர்களை எல்லாவற்றிக்கும் எதிர்பார்க்கவும் முடியாது என்று பேசியவாறு நானும் என் மகளும் ஒரு கணம் கலங்கி விட்டு யோசித்துக் கொண்டிருந்தோம்.

என் கணவர் வீட்டில் இருந்து அவருடையதங்கைகள்ஒருவருக்கும்திரும்பிப் பார்க்க நேரம் இல்லை. அவரவர்களுக்கு அவரவர்கள் வேலை. சொந்தங்களின் பாசம் நன்றாகவே புரிந்தது கஷ்ட சமயத்தில்.

''இப்படி.. விட்டுட்டாங்களே மா.. நம்மை...'' என்ற மகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை.

தூங்காமல் அப்படியே அதிகாலை மூன்று ஆகிவிட்டது.

என் மகளும் தூங்கவில்லை. சரியாய் மூன்று மணிக்கு கையை தட்ட, என் மனதில் இடி விழுந்தது போல இருந்தது.

அந்த ஒரு கணம் இப்படித் தோன்றி யது. இவ்வளவு பேர் நம்முடன் கூட இருந்தும் நமக்கு வேண்டும் போது, எதுவும் நடக்காத போது, எத்தனை காசு இருந்தென்ன. பணம் இருந்தென்ன? எத்தனை உறவுகள் இருந்தென்ன இல்லாமல் என்ன?

''அம்மா நான் சென்று டீ போடுகிற போது, அந்த உள்ளுக்குள் சென்று விடு'' என்றாள்.

என் கண்களை கண்ணீர் மறைத்தது.

பிறகு அவள் டீ சாப்பிட்டு விட்டு என்னைஅழைக்க,நான்திருமாங்கல்யத்தை பாலில் கழட்டி போட்டுவிட்டு நானும் டீயை கொடுத்துவிட்டு பின்னர் தலையை குளித்துவிட்டு அவள் முகத்தைப் பார்க்க எல்லாம் நடந்தேறிவிட்டது.

பத்தாம் நாளன்று பிண்டம் வைத்த வுடன், அது வரைக்கும் வாசல்படியில் நின்று கொண்டிருக்கும் அந்த ஆத்மாவை கதறக்கதற பாசக் கயிறு போட்டு எமதர்மன் இழுத்துச் செல்வாராம். மனமின்றி அங்கிருந்து அந்த ஆன்மா செல்லுமாம். சாஸ்திரங்களை நம்பத்தான் வேண்டி யிருக்கிறது. போனவர் போய்விட்டார் இனி நடப்பதை தானே பார்க்கவேண்டி யிருக்கிறது.

சுபமும் முடிந்து வந்த விருந்தினர்கள் எல்லாம் சென்றுவிட, அவ்வப்போது ஒளி பரப்பப்படும் பழைய பாடல்களிலும் அவ்வப் போது அவருடைய சாயலில் மகள் செய்யும் செய்கை களும், சில சமயம் வடிவேலுவின் ஜோக்குக்கு இருவரும் சிரித்ததும், சில சமயம் அர்த்தமற்று நடந்த சச்சரவுகளுடன் சண்டைகளும் அவரை நினைவு படுத்திக் கொண்டே இருக்கத்தான் செய்தது. அவ்வப்போது தொண்டையில் துக்க பந்து இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தது. அதற்கு ஆகாரமாய் தண்ணீரை கொடுக்க வேண்டியிருந்தது.

'உப்பும் தண்ணீரும் இறங்க இறங்க துக்கம் போகுமாம்'

திடீரென மின்சாரம் நின்று விட்டது. அடடா என்ன தலையெழுத்து இம்சை இது என தெரியவில்லை. வீட்டில் சில இழப்புகள் ஏற்படும்போது மின்சாரம் நின்றால் கூட ஏதோ ஒருவித பயம் ஆட்கொள்ள தான் செய்கிறது. எல்லாமே மனநிலையைப் பொறுத்தது தான்.

''ஒரு நிமிஷம் இரும்மா பேஸ் மாற்றி விடுகிறேன்'' என்று சொல்லிவிட்டு மின்சார போர்டின் அருகில் சென்று எதையோதிருப்ப மின்சாரம் வந்துவிட்டது.

''இதெல்லாம் உனக்கு எப்படி தெரியும்?'' என்ற பொழுது, ''அப்பாவை கவனிப்பேன் அவர் என்ன செய்வார் என்று''.

எப்படி நான் கவனிக்கத் தவறி விட்டேன்.

காலிங் பெல் அடித்தது. என் மகள் சென்று கதவைத் திறந்தாள்.

''சாமி.. சாமி.. போய்ட்டாரா பார்க்க வந்தோம்'', கதறி அழுதபடி. வாசலில் ஏதோ ஒரு கூட்டம் வந்து இருக்க அப்போதுதான் பார்த்தேன். கிராமத்து கூட்டம்.

“பாப்பா ஐயரு மாதிரியே இருக்குதுமா.. அப்படியே அதே மாதிரி தான் பார்ப்பாரு... குறுகுறுன்னு....”

“பாப்பா அப்பா போய்ட்டார்னு கவலைப் படாதம்மா, அம்மாவை நீ தான் பார்த்துக்கணும் ராசாத்தி. இந்த சமயத்தில் நீதாம்மா ஆறுதலா இருக்கணும் தாயீ.. இந்தா.. இந்த பணத்தை வச்சிக்க கை செலவுக்கு... சாமி எங்களுக்கு குல தெய்வம் மாதிரி... நாங்க கஷ்டப்பட்டு இருந்தப்பல்லாம் அப்படி ஆறுதல் சொல்லி இருக்காரு அப்படியிருக்கிறப்ப அவரு இல்லாதப்ப நாங்க சொல்ல மாட்டோமா..தாயீ?”

‘என்னை பார்த்துக்கொண்டு கண் ஜாடை காண்பித்தாள் சாப்பிட ஏதானு கொண்டுவா’ அவளின் பெரிய மனுஷத்தனம் என்னை இன்னும் ஆச்சர்யப் படுத்தியது.

“சொல்லுங்க ஐயா..” என் மகள் தான் பேசினாள்.

“அந்த... வாளாந்தூருக்கு கிழக்கால இருக்கிற அந்த நன்செய் நிலத்தை கிரயம் பண்ணி கொடுக்கிறேனு அய்யா சொன்னாரு... இப்போ அவரு உயிரோட இல்ல.. இப்போதைக்கு அது நன்செய் நிலமாக இருந்தாலும் மழை இல்லீங்களா... அதனால வானம் பார்த்த பூமி ஆயிடும் போல இருக்கு... மொத்தமா எல்லாம் சேர்ந்து ஒரு ஏக்கரையும் ஒரு லட்சத்துக்கு கிரையம் செஞ்சி கொடுத்தீங்கன்னா நல்லா இருக்கும்....”

“அப்ப இந்த ஐயாயிரம்”

“இதுக்கு அச்சாராமா...”

“நான் யோசிச்சு சொல்றேன்... இப்போதைக்கு இந்த பணம் உங்க கிட்டயே இருக்கட்டும்...”

அந்த குரலில் இருந்த உறுதி என் கணவரிடம் நான் பார்க்காதது, மீதி நான் இருக்கிறேன் அம்மா உனக்கு என்பதாய்.

அவர் என்னை எவ்வளவோ விட்டுக் கொடுத்தாலும், இவள் என்னை பாதுகாப்பாள். அவரின் உறுதியை விட மேலாக இவள். பெருமிதமாக பார்த்தேன். உதட்டு சுழிப்பில் என் கணவரின் ஜாடை தெரிய என்னுள் தைரியம் நங்கூரம் போட்டது. இதுவும் கடந்து போகும் என்பதாய். ■

# நீரைச் சேமிப்போம்

நீர் வாழ உயிர் வேண்டும்
உயிர் நீள நீர் வேண்டும்

தேவையனைத்தும் நீரில்
தேங்கி நிற்பதனை
நீர் - அறிய வேண்டும்

தரணியிலே தாகித்து
நீருக்கு பாடுபட்டு
தடம்புரளுவதனை
நீர் அறியமாட்டீரோ

விற்பனையில் தலைதூக்கி
இருக்கிறது இவ்விந்தை மிக்க
உலகில் இந்நன்னீர்
இதனை நீர் உணர வேண்டும்

பன்னீராய்ப் பார்க்கும்
இப் பஞ்சம் பிடித்த
பாரினிலே படைத்தவனைப்
பற்றி சற்று சிந்திக்க
வந்ததுவோ இப்பஞ்சமென
நீர் உணர வேண்டும்

குளமும் குட்டையும்
வற்றித் தவம், கிடக்கின்ற
காலமும்
இல்லாமலில்லை இந்நீருக்காய்

நீரில்லாப் போராட்டம்
நீர் காணும் முன்
வீண்விரயத்தை
விரட்டியடிப்போம் வாரீர்

- நிஸா இஸ்மாயில்
இலங்கை

# மேகம்



எழுசீர் விருத்தம்
சீர் வரையறை
விளம் மா விளம் மா
விளம் விளம் மா.

வகைவகை யாக வர்ணமே மிதக்கும்
வரிசையாய் காட்சியே வானில்
புகையென  வண்ணம் புனைந்திடும் அழகாய்
பூவினைப் போலவே தோற்றம்..
பகையென யாரும் பார்த்திட மாட்டார்
பஞ்சென எண்ணியே ரசிப்பார்..
நகைமுகம் தானே நல்கிட நிலவின்
நடுவெளி தன்னிலே மேகம்.

கருத்திடும் மேகம் கனிவையே அளித்துக்
களிநடம் புரியுமே காற்றாய்.
பெருவெளி எங்கும் பேரிகை முழக்கம்
பெருகிடும் சத்தமும் பெரிதே.
வருணனைத் தேடி வறுமையில் ஏங்கும்
வளமிலாப் பார்வையில் விடியல்
வரும்பகல் தன்னில் வாட்டிடும் வெயிலும்
வருத்தமும் போக்கவே நன்றாம் .

கண்ணனின் வண்ணம் கருமையும்  தானே
கண்ணெதிர் தோன்றிடும் முன்னே.
மண்ணிலே பொழிய மாசிலா நீரை
மழையெனத் தந்ததே மேகம்.
பண்ணுமே இசைத்துப் பரவசத் தோடு
பாடிடும் குயிலுமே உன்னால்
வண்ணமாய் நீயும் வானவில் போலே
வகையுறத் தோகையை விரிக்கும்..

இந்திராணி தங்கவேல்



# தொடர்வோம் பயணம்

அலைமேலே  நின்ற போதும்
அயராமல் பயணம் செய்வோம்
மலைபோலத் துயரம் வரினும்
மயங்காமல் பயணம் செய்வோம்
நிலைமாறும் நிலைவந் தாலும்
நிற்காமல் பயணம் செய்வோம்
கலைத்தாயைத் துணையாய்க் கொண்டு
தயங்காமல் பயணம் செய்வோம்

சரியான பாதை தேர்ந்து
சமத்துவத்தை மொழியில் காட்டிப்
பெரியோரின் கைகள் பற்றிப்
பெருமைமிகு தமிழ்த்தாய்ப் பின்னே
விரிவானின் எல்லை தாண்டி
விதைப்போமே வழிகள் நூறு
அரிதான பாதை கண்டே
அயராது தொடர்வோம் பயணம்

# பெண்ணே..

கட்டி வைத்த கைகளை வெட்டிவிடடி
வெட்டி விட்ட சிறகினை
ஒட்டிவையடி - பெண்ணே

சித்திரப் பாவையென சிரித்து வாழடி
நித்திரை யில்கூட நினைவில்
இருடி - பெண்ணே

கத்திகளை வீசிடுவார் கலங்காதடி
புத்தியினை கொண்டே
எதிர்கொள்ளடி - பெண்ணே

வித்தையினை காட்டுவார் வீழ்ந்து விடாதேடி
மத்தை மதியாலே
வீழ்த்தி விடடி - பெண்ணே

அன்பென் றுருகுவார் அறிவிலக்காதேடி
பண்பொன்று பேணி
வம்புவிலக்கடி - பெண்ணே

சாதிக்க பிறந்தவள் பூமியில் நீ
பொதி சுமக்க இல்லையென
புரிந்து கொள்ளடி - பெண்ணே

மருத்துவர் தேவி



# உன்னில் சரணடைந்தேன்

உன் ஒற்றைச் சொல்லில்
என் உலகம் பிறக்கிறதே
உன் பாதம் பணிந்திட
நேசம் சிறகை விரிக்கிறதே

நிறம் மாறிப் போகுதே
வானத்தின் வண்ணம்
நினைவெல்லாம் இனிக்குதே
மெய்ஞானத்தின் திண்ணம்

பூவாசம் வீசும் பூந்தென்றலே
மழையோடு பாடும் கார்முகிலே
சுவாசத்தில் பேசும் சூட்சுமமே
சுவாதிஷ்டானத்தில் நடமாடும் பூரணமே

பேசும் மொழியை தொலைத்தேன்
பாதை மாறி அலைந்தேன்
வந்த வழியை மறந்தேன்
ஒருவழியாய் உன்னில் சரணடைந்தேன்

உள்ளத்தில் நிறைந்திருக்கும்
நான் இல்லையே
உன்னில் அமிழ்ந்திருக்கும்
நினைவுகள் வெள்ளையே
ஆதியும் அந்தமுமாய்
நீ உருவானாயே
ஆழ்மனத்தில் அருள்மழை
அனுதினம் பொழிந்தாயே

சரவிபி ரோசிசந்திரா

# புத்தாண்டு ஒளிரட்டும் புன்னகையால்..

உலகமக்கள் யாவராலும் பேத மற்றுக் கொண்டாடப்படும் புத்துணர்ச்சி தரும் ஒருநாள், புத்தாண்டு என்று ஒவ்வொரு வருடமும் சனவரி முதலாம் நாளினை வரவேற்கக் காத்திருக்கிறோம்...

வரையறைகளுக்கு உட்பட்டதுதான் வாழ்க்கை. ஆனால், நம்மை நாம் செதுக்கு வதற்காக நேரமும் பொருளும், இன்ன பிறரின் வரையறைக்காக என்று வாழ நேரிடும்போதே சுயத்தைத் தொலைத்த வராகிறோம்...

மகிழ்ச்சிக்காக உழைக்கிறோம் என்று சொல்வதை விட்டுவிடுங்கள்...

உண்மையில், மகிழ்ச்சி எங்கும் விற்கப்படுவதில்லை...

உங்களுக்குள் துவங்கும் அதற்கு எந்த விலையும் நிர்ணயம் செய்யப்படுவ தில்லை.. ஏனெனில் அது விற்பனைப் பொருள் அல்ல..

உங்களால் உங்களுக்காகவும் உங்களைச் சுற்றியுள்ளவர்களுக்காவும் ஒரு புன்னகை நிரப்பப்படுமாயின் அதைவிடப் பேறு எதுவுமில்லை.

அந்த மகிழ்ச்சி எங்கு கிடைக்கும்?

எப்படிக் கிடைக்கும்?

இவை தானே உங்கள் கேள்விகளாக இருக்கும்...

ஒவ்வொரு சூழலிலும் ஒவ்வொரு நாளிலும் ஒவ்வொரு நிகழ்விலும் உங்களுக் கான மகிழ்ச்சி பரவிக் கிடக்கிறது. ஆம், இருப்பதைக் கொண்டு நிறைவு பெறும் மனம் அதனைத்தாண்டி அடையும் திருப்தி தான் மகிழ்ச்சி. அடுத்தவரின் திணிப்பை நமக்கானதாக நாம் பார்க்கக் கற்றுக் கொண்டோமானால் அங்கு பரவும் மகிழ்ச்சி நிலையற்றதாகி விடும்.. அடுத்து அடுத்து என மனம் அலைமோதும்.. இன்னும் இன்னும் என ஏங்கிச் சாகும்.. இதழ்கள் புன்னகைக்கும் ஆனால் மனம் கூச்சலிடும்...

இருப்பதைக் கொண்டு நிறைவு பெறுங்கள்..

இல்லாதவர்களுக்கு இயன்றதைச் செய்யுங்கள்..

உங்களால் யாரும் வருத்தப்படும் செயல்களைச் செய்யாதிருங்கள்..

இயற்கையும் சூழலும் இறையென் பதைத் தாண்டி மனிதர்களை நேசிக்கக் கற்றுக்கொண்டது போல், நீங்களும் சக மனிதர்களை மனிதர்களாய்ப் பேணுங்கள்..

பயனாய் வாழுவதற்குப் பிரதிபலன் எதிர்பாராதிருங்கள்...

வரலாறு மறந்து போகலாம்...

வருத்தங்கள் கூடிப் போகலாம்.. உளம் பூரித்துப்போன உங்கள் மகிழ்ச்சி நிலையாய் இருக்கும்..

உங்களைச் சுற்றியுள்ளவரிடத்து அது வாசம் பரப்பும்..

உங்கள் மனதின் மகிழ்ச்சி பிறருக்குப் பகிர்தலிலும், மனிதரை மதித்தலிலும் இருக்குமாயின் உங்கள் புன்னகையைப் பிறருக்குக் கடத்தும் வேலையை இயற்கை பார்த்துக்கொள்ளும்...

ஆம், புன்னகைக்கு விலையேதும் இல்லை..

புன்னகையுங்கள்...

புத்தாண்டு ஒளிரட்டும் புன்னகையால்..

தொற்றிக் கொள்ளட்டும் பிறருக்கும்..

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்!!

**ஷக்தி மித்ரா**

வானத்தை சுமந்து
ஒற்றை காலில் தவமிருந்து
அஞ்ஞானம் விலக்கி மெய்ஞானம்
கற்றுத்தருகிறது மரங்கள்.!

– த. ரவீந்திரன்..

## வாழியே தமிழ்நெஞ்சம் வாழியவே...

அருந்தமிழ்ப் பணியில்
ஆண்டுகள் ஐம்பது
அசத்தும் திறமை
அயரா உழைப்பு
தமிழைச் சுவாசித்துத்
தமிழை நேசித்து
நெஞ்சமே தமிழான
தமிழ்நெஞ்சம் இவரன்றோ...

அன்பான நட்பு
அகத்தினில் இனிப்பு
பண்பான கவிஞர்
பாசமுள்ள தமிழர்
மற்றவர் திறமையை
மதித்திடும் மாண்பு
மின்னிதழாலே கவிஞர்களை
முன்னணியில் சேர்ப்பார்...

கடல்கடந்தே போனாலும்
கன்னித் தமிழாளைக்
கைக்கொண்டு சென்றிட்டார்
கவிதைகளை விளைத்திட்டார்
தமிழறியா நாட்டினிலே
தமிழைநிலை நாட்டுகின்றார்
தமிழனென்று பெருமையுடன்
தலைநிமிர்ந்து வாழுகின்றார்...

முகநூலில் பலருக்கு
முகவரிகள் தந்திட்டார்
முகமறியா நிலையிலும்
அகமறிந்து ஆதரிப்பார்
தமிழ்த்தொண்டு ஆற்றுவதால்
தரணியில் சிறந்திட்டார்
தமிழர் நெஞ்சங்களில்
தனியொரு இடம்பிடித்தார்...

ஆண்டுகள் பலநூறு
தமிழோடு வாழ்ந்திட
ஆண்டவன் என்றும்
அருளினைப் பொழிவார்
தமிழை நாமுயர்த்த
தமிழ்நம்மை உயர்த்தும்
தமிழுடன் சேர்ந்து நீவிர்
தலைநிமிர்ந்து வாழ்கவே...

– இர.தர்மாம்பாள்

## வைரக்கூ

உழுத வயல்
இருட்டில் பயணித்து
ஒளியை விதைக்கும் மின்மினி

உடைந்தே விழுகிறது
அணில் கடித்த பழத்தின்
நிழல்.

வலையில் சிக்கிய மீன்
வெளியேறும் உமிழ்நீரில்
உப்போ? அச்சமோ?

விட்ட இடத்திலிருந்து
விண்மீன்களை எண்ண வேண்டும்
விலகிடு கார்முகிலினமே!

புது வீடு
தனி அறையில்லா அம்மா
சமையற்கட்டைப் பெரிதாக்கும் அப்பா.

வீட்டைப் பூட்டி நடக்கிறேன்
இருட்டையும் சில பல்லிகளையும்
உள்ளே விட்டு.

தென்றலாக மாறியது
சிலுவை கோபுரத்தைத் தாக்கிய
சூறாவளி.

மெல்ல மறைகிறது
மௌனத்தை இருளுடன் இணைத்து
மூன்றாம் பிறை.

கல்லறைச்சாலை முழுதும்
குற்றுயிரும் குலையுயிருமாய்
மயான வைராக்கியங்கள்.



**- முனைவர் வே. புகழேந்தி,**
பெங்களூரு.

# தமிழ்ப்பணி சிறக்க வாழ்த்துகள்

1.
தமிழை நெஞ்சில் சுமந்தவராம்!
தரணி வெல்ல அணிந்தவராம்!
அமிழ்தம் அவரின் நற்றமிழாம்!
ஆக்கம் பெற்ற வித்தகராம்!
இமியும் குறையா அன்பாளர்!
இனிமை ஆக்கும் பண்பாளர்!
உமியாய்ப் போகும் உறவுகளே
உண்மை காண்க இவரிடமே!

2.
ஐந்து பத்து ஆண்டுகளில்
ஆழ்ந்து தோய்ந்த ஆற்றலாலே
சிந்தும் வியர்வைத் துளிகளிலும்
சீர்மை  பெற்று வாழியவே!
சந்தை வணிகம் மத்தியிலே
சந்தத் தமிழால் உயர்ந்தாரே!
உந்தும் உமது எழுத்துகளே
ஊட்டச் சத்தாய் இனித்திடுதே!

3.
நெஞ்ச மலரில் பிணைத்திடவே
நேர்த்திச் செயலால் வாழ்ந்திடுவீர்!
கொஞ்சும் தமிழே உம்மால்தான்
கோள்கள்  கடந்து வாழ்கிறதோ?
பஞ்சின் உள்ளம் பெற்றவரே!
பாரே போற்றும் தமிழாலே!
விஞ்சும் செயல்கள் உம்மால்...தான்
வீறு கொள்ளச் செய்கிறதோ!

4.
சிறப்பாய்ப் பணிகள் ஆற்றுகவே!
சின்ன இதயம் வாழ்த்துகின்றேன்!
அறமே தழைத்து ஓங்கட்டும்!
ஆன்றோர் உம்மால் தழைக்கட்டும்!
திறத்தால் பெருமைப் பெற்றவரே!
திசைகள் நான்கும் வென்றவரே!
கறந்த பாலின் தன்மையினைக்
கனிவில் கொண்டாய் வாழ்கவாழ்க!

5.
வண்ண வண்ணப் புத்தகத்தை
வனப்பாய் ஆக்கும் செம்மல்...நீ!
பண்ணும் பாட்டில் யாவிலுமே
பயிலும் தமிழின் நாட்டியமே!
எண்ணம் எங்கும் நற்றமிழே
எதுகை பாடிக் கணைத் தொடுக்கும்!
மண்ணில் பெருமை பதித்திடவே
மாண்பாய்ச் செயலை ஆற்றுகின்றீர்!

6.
வாழ்க வாழ்க தமிழ்நெஞ்சம்!
வானில் புகழை நாட்டிடுக!
சூழ்ந்த உறவைப் போற்றிவரும்
சுடரின் ஆற்றல் பெற்றவரே!
ஆழ்ந்த சிந்தை கொண்டவரே!
அன்பின் வழியில் ஆள்பவரே!
யாழ்போல் இசையாய் இசைந்துமனம்
இன்பம் வாழ்வில் ஈட்டுகவே!

முனைவர் ம.தமிழ்ச்செல்வி
திருச்சி.

## அழகின் சிரிப்பு

( குறள் வெண்பா )

குளோரிசக்தி
கரூர்

வானில் உலவிடும் வட்ட நிலவொளி
கானில் ஒளிர்தல் கவின்.

தேனில் மலர்ந்த தெவிட்டா மலர்களோ
ஊனில் இனிக்கும் உயர்ந்து.

மீன்களின் துள்ளலில் மேலெழும் நீரினில்
தோன்றும் அழகினில் தோய்.

குருவிகள் கூடியே கூட்டமாய் வந்து
தருக்களில் சேரல்  தகை

மேகம்  பொழியும் மெல்லிய சாரலில்
தேகம் நனைவது தீம்.

வெள்ளி அலைகளின் வீழும் அழகினில்
உள்ளம் மகிழுமே உவந்து.

# இருப்பதோ ஒரு முகம் பார்ப்பதோ வேறு முகம்

விஜி கல்யாணி. கோவை..

கணவன் நடராசுக்கு 54 வயதும் வசந்தாவுக்கு 48 வயசுமாச்சு.. ஒரே குறை பிரபல டைலருக்கு ..

...

இளவயது திருமணம் முடிந்து 6வருடம் கழித்தே வசுமதி பிறந்தாள்..

பிறந்ததுமே கொழுகொழுவென அழகு.. சந்தோசத்துக்கு அளவே இல்லை..

ஆனா நாளாக மகள் மீது கவலையே கவலை.. எதுக்கெடுத்தாலும் பிடிவாதந்தான் அவளுக்கு..

தொடக்கக்கல்வி படிக்கும் போதே படிப்புல சுமார்தான்.. கேட்டது மட்டும் உடனே கிடைச்சிறனும்..

வசுமதி 9ம் வகுப்பில் பெரிய பெண்ணா ஆனதும் மணமகள் போல அலங்கரித்து மஞ்சள் நீராட்டு வைக்கனும் என்று ஆர்ப்பாட்டத்தில் அதையும் செய்தனர்..

பத்தாம் வகுப்பில் தேர்ச்சி.. குறைந்த மார்க்கு எடுத்து தான்.. அப்பாவுக்கு பொண்ணு டாக்டர் ஆகனும் என ஆசை..

தலையில அடிபட்ட மகளை மடில வச்சுட்டு ஏன்டா இப்படி பண்ணினே கேட்டஅப்பாகிட்டஉங்களஏமாத்ததாம்பா மாடில இருந்து குதிச்சேன் அப்பாவியா சொன்ன மகளின் பேச்ச கேட்ட நடராசு டாக்டர் பேச்சையே கைவுட்டாரு.

பக்கத்து வீட்டு சுமதியும் மஞ்சுவும் சாட பேசுவது வழக்கம்தான்.

அதுதான்டி முட்டு சந்துல புள்ளிங்கோ பயலுகள்ள ஒருத்தன் தான்..

கண்ணார பார்த்தேன்டி.. பொறுக்க முடியாம வசந்தா கேட்டே விட்டாள்.

யோக்கியமாபேசாதஒம்மவஅந்தநடேசன் மகனோட சுத்தறதத் தான் சொன்னோம்.. வம்புக்கு இழுத்தவள்கிட்ட சண்டையப் போட்டா வசந்தா.

நெஞ்சழுத்தத்தோட பதில் சொன்ன மக ஆமா காலேஜ் போகையில சந்திச்சோம்.

நீங்க சம்மதிக்கலைனா சாவு எங்கள சேத்து வைக்கும். மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறுச்சு.

வசுமதியோ மறுபடியும் பிடிவாதம். படிக்க பிடிக்கல. அவனத்தான் கட்டிப்பேன். இல்லைனா செத்துருவேன் என கூற ..

அப்பா அம்மா இருவரும் இது பொறக்காமலே இருந்திருக்கலாமே உயிர வாங்க பிறந்து தொலைச்சிருச்சு..

குமுறிக்கொண்டு வண்டியில் வந்த நடராசனுக்கு திடீரென நெஞ்சுவலி.. இருந்ததால் இரண்டு பசங்க வண்டியில வந்தவங்க அடடா அடுத்த வீதி டைலரே என உதவி செய்து ஆம்புலன்ஸ்ல ஆஸ்பத்திரி கொண்டு போனார்கள்..

பேசன்டு பேரு என்னப்பா? வாட்பாய் கேட்க.. கூட வந்த பசங்களில்



ஒருவன் பேரு தெரியலையே என முழிச்சான்..

வந்தவனின் கையில் டைலர் நடராசனின் செல் இருந்தது..

கடைசியாய் அவர் அழைத்த எண்ணுக்கு அழைத்து விபரத்தைக் கூறினான்..

உறவினர்கள் பதறியடித்து வர அவர்களுடன் வசுமதியும் வசந்தாவும் ஓவென அழுது ஓடியாந்தாங்க..

வந்தவளைக்கண்டதும்காப்பாற்றிய இளைஞர்களுக்கு ஆச்சரியம்..

வசுமதி நீ இங்கே ? கேட்டவனிடம் டேய் எங்கப்பாடா என்னாலதான் அவரு இப்படி ஆனாரு என கத்தினாள் வசுமதி..

தம்பிகளா வாங்க நீங்க இன்னும் கொஞ்ச நேரம் கழித்து வந்திருந்தாலும் இவரைக் காப்பாற்றி இருக்க முடியாது..

மருத்துவர் கூறியதும் வசுமதி டேய் அசோக்கு நீயாடா எங்கப்பாவ காப்பாத்துன.. கையைப்பிடித்து நன்றி சொல்ல வசந்தாவும் கண்கலங்குனா ...

ஊரே நல்லவன் இல்லைன்னு சொன்னாலும் அவன் மனசு எவ்வளவு பெரிசு.. மகனாய் வந்து விட்டவனை விடக்கூடாது என நினைக்கையிலே..

நடராசு. வசந்தாவை பார்த்து என்ன நினைக்கிறேன்னு தெரியுது..

முதல்ல அவன் ஒரு வேலைக்குப் போகட்டும் நானே நடேசன் கிட்ட பேசுறேன்..

ஒட்டுக்கேட்ட. வசுமதியின் காலு தரையில நிக்கல..

■

## ஆக்கங்கள் அனுப்பும் அன்பர்கள் கவனத்திற்கு...

எழுத்தாளத் தோழமைகளே... உங்களில் சிலர் ஆக்கங்களில் தங்களின் பெயரை பதிந்திட மறந்துவிடுகிறீர்கள், எழுதியவர் பெயர் இல்லாது எப்படி உங்கள் ஆக்கங்களை வெளியீடு செய்வது.? ஒவ்வொரு ஆக்கத்திற்குக் கீழும் தங்களின் பெயரைத் தமிழிலும், தொடர்புக்காக அலைபேசி எண்கள் அல்லது மினனஞ்சல் ஐடியையும் அவசியம் பதியவும்.

தவிர, ஒரே ஆக்கத்தை ஒரே நேரத்தில் இரண்டு அல்லது பல இதழ்களுக்கு அனுப்ப வேண்டாம். ஒரு இதழுக்கு ஆக்கத்தை அனுப்பிவிட்டு கொஞ்ச காலம் பொறுத்திருப்பது அவசியம். ஆக்கங்கள் கிடைக்கப் பெற்றதற்கு தனித்தனியே தகவல் தர இயலாமைக்கும் வருந்துகிறோம். அதற்கு போதிய நேரமின்மையேக் காரணமாகும்.

புதிய ஆக்கங்களும், விமர்சனங் களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின் கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

ஆக்கங்களை மின்னஞ்சல் முகவரிக்கே அனுப்புவது நல்லது. புலனம், முகநூல் உள்பெட்டிகளில் அனுப்புவது சில நேரங்களில் தேடுவதற்கு சிரமமாகிறது. தவறியும், விடுகிறது. எங்களுடன் கைகோர்த்துப் பயணிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நன்றி!

தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு,
நிர்வாகிகள்

# எனக்குள் ஏனோ இப்படி ஒரு எண்ணம்...

பகலில் வெயிலைப் பார்த்தால்;
நானொரு மேகமாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

இரவில் நிலவை பார்த்தால்,
நானொரு நட்சத்திரமாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

குழந்தைகளைப் பார்த்தால்,
நானொரு தாயாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

மாணவர்களைப் பார்த்தால்,
நானொரு ஆசிரியராக
இருக்க ஆசைப்படுகிறேன்...

வலியில் துடிப்பவர்களைப் பார்த்தால்,
நானொரு மருத்துவராக
இருக்க ஆசைப்படுகிறேன்...

நடுக்கடலில் மிதக்கும் கப்பலைப் பார்த்தால்,
நானொரு மாலுமியாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

உண்ணும் உணவைப் பார்த்தால்,
நானொரு உடல் வியர்க்க உழைக்கும் விவசாயியாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

ஏழையைப் பார்த்தால்,
நானொரு தனவந்தராக
இருக்க ஆசைப்படுகிறேன்...

பணக்காரனைப் பார்த்தால்,
நானொரு நடுத்தர குடும்பமாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

நிழலைப் பார்த்தால்,
நானொரு நிழல் கொடுக்கும்
மரமாக இருக்க ஆசைப்படுகிறேன்...

ஏமாற்றப்பட்டவர்களைப் பார்த்தால்,
நானொரு ஆறுதலாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

ஏமாற்றுபவர்களைப் பார்த்தால்,
நானொரு கல்நெஞ்சக்காரியாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

காகிதத்தைப் பார்த்தால்,
நானொரு கவிதையாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

கவிதையைப் பார்த்தால்,
நானொரு கவிஞனாக
இருக்க ஆசைப்படுகிறேன்...

முடங்கிக்கிடந்த நம் மனதைப் பார்த்தால்,
லட்சியம் எனும்
சுடர்ஒளியை ஏற்றிட ஆசைப்படுகிறேன்...

எதை எதையோ பார்த்தால்,
நம் விதியை உடைத்து,
தன்னம்பிக்கையுடன்
இருக்க ஆசைப்படுகிறேன்...

ஷஹ்னா ஸப்வான்
தர்கா நகர், இலங்கை

# நேரமே போதவில்லை...

**ஷப்ரா இல்முத்தீன்**
அட்டாளைச்சேனை

பொக்கிஷங்கள் எங்காவது இலவசமாக கிடைக்கின்றதென்றால் எந்தக் காரணத்துக்காகவும் அதனைத் தவற விட விரும்பாத நாங்கள் எம்மிடம் உள்ள மிகப் பெரிய பொக்கிஷத்தை அடிக்கடி தவற விடுகிறோம்.

எப்போதுமே இனி மீண்டு வராத அந்தப் பொக்கிஷம் நாம் கழித்துக் கொண்டிருக்கும் நேரம் தான் என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நேரம் எப்போதும் தவறாமல் தன் பணியை செய்கையிலும் அதனைத் தவற விடுவோர் ஏராளம்.

இங்கே நேரத்துக்கு ஒப்பாக எதுவொன்றுமில்லை இருப்பினும் அதன் மகிமை அதனைத் தவற விட்ட பின்னரேயே பெரும்பாலும் உணரப் படுகிறது.

உதாரணமாக தொலைபேசிக்கு தேவைக்காக நாங்கள் கொடுக்கும் நேரங்கள் குறைவாகவும் தேவையில்லாமல் கொடுக்கும் நேரங்கள் அதிகமாகவும் இருந்தால் அங்கே எமது பெறுமதியான நேரங்கள் அநியாயமாக வீணாக்கப்படுகின்றது. இதே போன்று எல்லா விடயங்களிலும் நாம் தேவைக்காக செலவழிக்கும் நேரங்களை கணித்துக் கொள்ள வேண்டும்.

அதிகமானோரின் ஆதங்கம், நேரம் மிக வேகமாக செல்கிறது என்பது தான். ஆனால் வேகமாக செல்லும் நேரத்திற் கேற்ப எங்களது செயற்பாடுகளும் நடை பெறுகின்றதா எனசிந்தித்தால்அதற்கானபதில்கேள்விக்குறிதான். எங்களது வழமையான அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு செயலுக்குமான நேரத்தை நாங்கள் பிரித்து வைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நாங்கள் செய்கையில் வீணாகும் அதிகமான நேரத்தை சேமித்துக் கொள்ள முடியும்.. ஏனெனில் கடந்திடும் ஒவ்வொரு நொடிகளின் பெறுமதியையும் தவற விட்ட பின்னர் கைசேதப்பட்டு எந்தப் பயனும் இல்லை. அவ்வாறு தொலைத்தவர்களின் நிலைகளும் மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

''நேரங்கள் நேர்மையானவை. அதனால்தான் யாருக்காகவும் அவை காத்திருப்பதில்லை''

“இன்னும் நல்லா நேரமிருக்கு. பொறவு செய்வோம்..”

“இன்னும் கொஞ்சம் தூங்கி எழும் பினா என்ன தான் கொறய போவுது...”

''இப்படியான ஒரு வாய்ப்பு இனிமே கெடக்கிமா..”

“இந்த வீக்க முழுசா ரெஸ்ட் எடுக்க யூஸ் பண்ணிட்டு அடுத்த வீக்ல இருந்து இனிமே டைம் வேஸ்ட் பண்ண கூடா....”

அன்றாட செயற்பாடுகளின் போது அழையா விருந்தாளியாக ஒட்டிக் கொள் கின்றது இவ்வாறான பொடுபோக்கான சிந்தனைகள்..

நேரத்தைவீணடிப்பதில்அளவில்லா சுகங்கள் இருப்பதாய் ஓர் உணர்வு...

நினைத்த நேரமெல்லாம் ஓய்வு, திட்டமில்லாத வாழ்க்கை, அதிக தூக்கத்தினால் கொள்ளையடிக்கப்படும் நிமிடங்கள், அலை அலையாய் ஒட்டிக் கொள்ளும் சோம்பல்கள், சின்ன சின்ன செயல்களும் பூதாகரமாய் தோன்றிடும் தருணங்கள் எல்லாமே என்றோ ஒருநாள் மாறி எதற்குமே நேரமில்லாத வாழ்க்கை மெல்லமாய் எம்மோடு இணைந்திடும் போது அது வரை தொலைத்திட்டதை நினைத்து ஏங்கத் தோன்றும் மனதளவில் மாத்திரமே... அதற்குள் நாம் தொலைத்துவிட்ட நிமிடங்கள் எமக்கு கைகாட்டி விட்டு சென்றிருக்கும் வெகு தூரத்திலே...

# ஹைக்கூ

1
தொடர் மழை
வீடு தேடி வருகின்றன
கம்மாய் மீன்கள்

2
சுழலும் மின்விசிறி
இறகு உடைந்து விழுகிறது
இரைதேடிய பறவை

4
உட் செவி
இரைச்சலாக இருக்கிறது
நுளம்பு பறக்க...

5
அனாதை இல்லங்கள்
ஆறுதல் தந்து கொண்டிருக்கும்
சிட்டுக்குருவிகள்

6
பூட்டிய வீடு
மெல்ல இடம் பெயர்ந்த படி
துவாரத்தில் வெளிச்சம்

7
போருக்குப் பின்னும்
போராடிக்கொண்டிருக்கும்
முள்வேலியில் சிறகு

8
அதிகாலைப் பனி
எழ முடியவில்லை
நுனிப்புல்...

9
ஆறிய குளம்பி
மிடறு மிடாறாகப் பருகுகின்றேன்
உதட்டுச் சாயம்

10
எழுதும் கவிதை
ஏறிட்டுப் பார்ப்பதே இல்லை
முன்னாள் காதலி

- தமிழ் தம்பி



# பெண்ணியம் போற்றுவோம்

பெண்ணாய் பிறந்தது
பெரும்பேறே அறிவீர்
பேருலகம் தன் கையால்
நெறிப்படுத்தும் கருவி
தன்னலமின்றித் தயவோடு
உழைப்பவள் அவளே
தளராத நம்பிக்கையில்
ஒளிரும் தாரகை
அன்பு மழையால்
ஆட்டிப் படைப்பாள்
கோபப் புயலாய்
மாறவும் செய்வாள்
இயற்கையின் சக்தி
இயல்பாய்க் கொண்டவள்
மலையின் உறுதி
மனத்தில் நிறுத்தியவள்
தாயாய் மனைவியாய்
மாற்றம் கொள்பவள்
உலகமே இயங்கும்
பெண்மையின் ஆட்சியில்
உன்னத வாழ்வின்
ஆணிவேர் அவள்தான்
வீடும் நாடும்
போற்ற வாழ்வாள்
துறைகள் தாண்டிச்
சாதனை புரிவாள்
மிளிரும் அழகில்
தேவதைகள் தோற்கும்
துளியும் குறையாத்
தியாகத்தின் இருப்பிடம்
பொறுமையில் பூமியை
மிஞ்சும் அரசி
பூவுலகிற்குக் கிடைத்த
அதிசய பரிசு
வெறும் போகப்பொருள்
அல்லவே பெண்கள்
போற்றுதற்குரிய செல்வமாய்
கொண்டாடுதல் நன்றே

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர், இலங்கை

# இதயத்தைப் பிசையும் இன்னிசை வெண்பா!

"மழைக்காலம் தோறும் மனத்துள் புகுந்து
தழைக்கும் தருவாய் தகிக்கும் அமுதமே!
நீ விட்டுச் சென்ற நினைவுக் குடைக்குள்ளே
தீ விட்டுப் போனதெ தற்கு?''

அகவை எத்தனை யானாலும் 'ஆத்மாவின் ராகம் காதல்! வேல்முருகன் என்பதன்றி இராம என்பது முன்னிற்றலின் வில் இராமன் என்பதும் இது முன்னெழுத் தாயினும் வந்தது கொண்டு வராதது முடித்தல். அந்த இருவரும் என்னென்ன செய்தார்கள் என்பதைக் கம்பன் பாடியிருக்கிறான். கழுகுமலை ரெட்டியாரும் பாடியிருக்கிறார்

முதலில் வடிவத்தைப் பற்றிச் சில! இப்படித்தான் வெண்பா அமைதல் வேண்டும். இப்படி அமைந்த வெண்பாவிற்கு இன்னிசை வெண்பா என்பது பெயர். இதுதான் இலக்கணம் கற்பிக்கின்ற நெறி. அதாவது வெண்பாவில் தளை சீர் அடி என்பதை மட்டும் வரையறுத்துத் தொடைவிகற்பங்களை வரையறைக்கு உட்படாமல் நெகிழச் செய்து கவிஞன் ஒருவனைப் பாடச் சொல்லி அப்படி; வருவதுதான் பாட்டு. அல்லது பா.

வக்கை நினைத்துக் கொக்கு பிடிப்பார் சிலர். நான் சொல்கிறேன். வேல்முருகன் பிடித்ததே வக்குதான்! இரு விகற்பங்களைக் கொண்டு அமைந்த இந்த வெண்பாவில் முதலடியிலும் மூன்றாம் அடியிலும் பொழிப்பு மோனை புன்னகையுடன் அமர்ந்திருக்கிறதே! வேல்முருகனுக்குத் தெரியாமலேயே அமைந்த விகற்பம் இது!

இரண்டாமடியில் நிரலாக மூன்று சீர்களில் கூழை மோனை குளிர்ந்து நிற்கிறது. இதுவும் கவிஞனுக்குத் தெரியாமல் அமைந்ததுதான்! மூன்றாம் அடியிலும் நான்காம் அடியிலும் நீவிட்டு தீவிட்டு என நிற்கும் எதுகை முற்றெதுகையாக இருந்தாலும் ஏக்கத்தைத்தான் வெளிப் படுத்தி நிற்கிறது?

நல்ல வெண்பாக்கள் வினாக்களில் முடியும்! அறிவார் சிலர்!

அமுதம் குளிர்ச்சியானது! ஆனால் அது தீயை விட்டுச் செல்கிறதாம்!

கவிதை எங்கே ஒளிந்திருக்கிறது பார்த்தீர்களா?

கடைக்குச் சென்றால் குடையை விட்டுவிட்டுத்தான் வருவோம். யாரும் மறந்துவிட்டுவருவதில்லை. இதுவழக்குஇந்த வழக்கிற்கு வாழ்வளிக்கிறார் வேல்முருகன்! நினைவாகிய குடையை விட்டுவிட்டுச் சென்றவள் விரித்துப் பாரத்தால் நெருப்பை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறாள்! 'அட்ட குழிசி அழல் பயந்த' கதை இது!

'தண்ணீருக்கே தாகம்!' என்று எழுதினால் அது புதுக்கவிதையாம்! காற்றுக்கே வேர்க்கிறது' என்று எழுதினால் ;அது புதுக்கவிதையாம்!

யாப்பிலே வந்து விழுகின்ற இந்த அற்புதக் கற்பனைக்கு என்ன பேரு வைக்கலாம்? எப்படி அழைக்கலாம்?

'தோறும்' என்ற சொல்லை பாரதி கையாண்டிருக்கிறார். கண்ணதாசன் கையாண் டிருக்கிறார். இருந்தாலும் இந்த உணர்ச்சிக்கு இந்த இடத்தில் அச்சொல் அவ்வளவு பொருத்தமானதா என்பதை என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை!.

பாவேந்தர் கூட இதனைச் செய்தி ருக்கிறார். "சித்திரச் சோலைகளே! உமைநன்கு திருத்த இப்பாரினிலே" என்னும் வரியில் 'உமை' என்பது கவிதைச் சொல் அல்ல! பொதுக்கூட்டத்தில் பேசுவது போல் உள்ளது!

விட்டிருக்க வேண்டியது நினைவு! விட்டுச் சென்றதோ நெருப்பு!

அமுதமே அழல் ஆலை ஆனால் ஆத்மா என்னாகும்?

முரண்களால் சிறக்கிற அருமையான கவிதை!

வேல்கொண்டு எழுதட்டும் முருகனார்! விருந்து அயரட்டும் தமிழர்கள்! வாழ்த்துக்கள்!

**முனைவர் ச.சுப்பிரமணியன்**
திருச்சி

## கண்ணுறங்கு

தூக்கமில்லா இரவுதான்
துக்கங்களின் சுமையினால்
கார்மேகக் குவியலில்
கட்டுண்ட நிலவுபோல

பின்னொரு நன்னாளில்
விலகலாம் கார்காலம்
மின்னெழில் காட்டி
பூக்கலாம் எழில்நிலவு

நமக்காக நான்பாடும்
உயிர்ப்பாடல் கேளாயோ
தென்றலே தாலாட்டி
கண்ணுறங்கச் செய்வாயோ

**மேரிரோஸ்**
மலேசியா



## பொன்விழா காணும் தமிழ்நெஞ்சம் இதழுக்கு வாழ்த்து!

முகவரி தெரியாத
பற்பல கவிஞரையும்
எழுத்தாளரையும்
தனக்குள் இணைத்தாய்
அவர்கள் உள்ளத்தில் தோன்றிய
உண்மைத் தகவல்களை
கற்பனைத் துளிகளை
காகிதமான அழிந்து போகாப்
பக்கத்திலே
எழுதி கடிதம் மூலம்
அனுப்பிய காலம்
தொடங்கி விஞ்ஞானம்
வளர்ந்துள்ள இன்றைய
மின்னஞ்சல் தகவல்
தொழில்நுட்பம் வரையிலும்
அடிமேல் அடியெடுத்து வைத்து
இன்று பொன்விழா காணும்
தமிழ்நெஞ்சமே நீயும் வாழ வேண்டும்
மண்ணிலே நீங்காது
உன்னையே தொடர்ந்து படிக்கும்
வாசகர்களும் பெருக வேண்டும்
குறையில்லாது

**ப.வெங்கட்ரமணன்**



# நல்வாழ்க்கை

சேர்ந்து வாழும் குணமே
　　　சோர்ந்து போகா நல்வாழ்க்கை
கூர்ந்து நாளும் கவனி
　　　குணமே உலகில் நனிசிறப்பு
ஊர்ந்து செல்லும் எறும்பும்
　　　ஒன்று சேரும் நற்பண்பே!
பார்த்து நாமும் வாழ்ந்தால்
　　　பரிவும் கூடி இணைந்திடுமே

அன்பு என்ற பண்பில்
　　　அனைத்தும் பொங்கி மிளிர்ந்திடுவீர்
இன்பம் பெற்று மகிழ்ந்தால்
　　　இதயம் என்றும் அணைத்திடுமே
துன்பம் போக்கி எழுந்தால்
　　　துயரம் நீக்கி உயர்வாகும்
நன்மை செய்தே உழைத்தால்
　　　நாளும் வெற்றி தந்திடுமே!

கூடும்  நல்ல உறவும்
　　　குடும்பம் மகிழும் நற்பேறு
தேடும் அறிவு சூழும்
　　　தேசம் மகிழும் மிகுவெற்றி
பாடும் பறவை போலே
　　　பாசம் சொரிந்து வரவேண்டும்
நாடும் நன்மை சேர்ந்து
　　　ஞான்றும் ஒளியே பெறவேண்டும்

**நகுலா சிவநாதன்**
யேர்மனி

# உயிரூட்டல்

அதிகாலைத் தூறலில்
நீராடும் மலர்கள்...
　　　மனம் நிறைக்கும்
மகரந்த வாசனை....

பனி பொழியும் ஈர இரவுகள்
பாலொளி பரப்பும்
　　　பௌர்ணமி நிலவு....
மின்மினியாய் கண் சிமிட்டும்
　　　வண்ண விண்மீன்கள்....

உயிருக்குள் ஊடுருவும்
உன் நினைவுகளின்
　　　உணர்வலைகள்....

விழி மூடியதும்
கண்ணெதிரே தோன்றும்
　　　உன் பொன் முகம்...

கலைந்து போன கனவுகளின்
கலையாத பிம்பமாய் ...
　　　‘ உயிர்  நீ ‘
எனைப் பிரிந்த பின்பும்
　　　　　உயிரூட்டிச் செல்கிறது ...

மாறாத.. மறையாத....
உன்  நினைவுகளின்
　　　தாக்கங்கள்!!!



– நிஷா ரஹ்மான்

# தேசத்தின் வெற்றி

மக்கொனையூரான்

எமது இலங்கைத் திரு நாடு பல இனத்தவர்களும் பல மதத்தவர்களும் வாழு கின்ற ஒரு பல்லின சமூகத்தைக் கொண்ட நாடாகும் பல்வேறு கலாசாரப் பண்புகளைக் கொண்ட சமூகம் பல்பண்பாட்டுச் சமூகமாக கருதப்படுகின்றது

இப் பல்பண்பாட்டுச் சமூகக் காரணி களில் தம்முடைய வாழ்க்கைக் கோலத்தை கொண்டுசெல்லும் மக்கள் தாங்களுக்கிடையே நிலவுகின்ற நல்லுறவிலேயே இத் தேசத்தின் மேம்பாடும் முன்னேற்றமும் தங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிடின் அனைவருக்கும் தாழ்வே" என்று பாடினார் பாரதியார் ஒரு தேசத்தின் வெற்றிக்கு ஒற்றுமை ஆணிவேராகக் காணப்படுகின்றது ஒவ்வொரு தனி மனிதனும் ஒற்றுமை எனும் கயிற்றைப் பலமாகப் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும் இதன் மூலம் குடும்பம் மற்றும் உறவினர்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படும் இந்நிலை ஊரில் சமூகத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும்

சமூகம் என்பது அனைத்து மக்களின் தொகுதியாகும். எனவே சமூகத்தில் நிலவுகின்ற ஒற்றுமை ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

'ஊர் கூடினால் தான் தேர் இழுக்க முடியும்'' என்பார்கள். மக்களின் கூட்டுறவுநிலைதான் இனநல்லுறவைச் சீரமைத்து ஒரு தேசத்தின் வளர்ச்சிக்கு சீரான பாதையைத் திட்டமிடுகிறது.

பரஸ்பரம் ஒருவருக்கொருவர் அன்பு காட்டுதல், உதவிபுரிதல் மற்றும் விட்டுக் கொடுப்புக்களுடன் வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு சமூகத்தினதும் தனித்துவம் மதிக்கப்பட்டு உணர்வுகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

வேற்றுமையில் ஒற்றுமை என்பதை தாரகமந்திரமாகக் கொள்வோமானால் வேறு பட்ட இன, மத, மொழிகளுடன் ஒற்றுமையைப் பேணி வளமான எதிர் காலத்தை நோக்கிப் பயணிக்கலாம்.

ஒன்றுபட்டுச் செயல்பட்டால்தான் அனைவரும் அழகாக வாழலாம் என்பதனை வலியுறுத்துவது போல பாகவதத்தில் பின்வரும் கதை இடம் பெற்றுள்ளது.

ஒருமுறை தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த பின்னர் விருந்து பசாரம் நடைபெற்றது. அப்போது கையினை மடக்காது விருந்துண்ண வேண்டும் என்று திருமால் நிபந்தனை விதித்தார். இதனை ஏற்காத அசுரர்கள் இது எப்படி முடியும் கையை மடக்காது யாராலும் உண்ண முடியாது இது வேண்டுமென்றே பழிவாங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட நிபந்தனை இதனை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று விருந்துண்ணாமல் சென்று விட்டனர். ஆனால் தேவர்கள் இதனை ஏற்றுக்கொண்டனர். எதிர் எதிர் இலைகளில் அமர்ந்து உணவைப் பிசைந்து தங்களுக்கு எதிரில் உள்ளவர் வாயில் கையை மடக்காது ஊட்டி விட்டனர்.ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டதனால் விருந்துண்டனர்கள் தேவர்கள். இந்தத் தேவருள்ளம் தான் இன்றைய தேவையாக இருக்கின்றது. சகலருக்கும் உதவும் மனமும் சகலரையும் மதிக்கும் குணமும் தலை தூக்கினால் போதும் எங்கள் தேசம் தலைநிமிர்ந்து வாழும்.

மனித குலத்துக்கு வழி காட்ட வந்த அத்தனை மதங்களுக்கும் ஒற்றுமை, சாந்தி, சமாதானம், விட்டுக்கொடுப்பு, மன்னிப்பு இவற்றைத் தான் வலியுறுத்துகின்றன.

இன நல்லிணக்கம் என்பது மிகவும் வலிமையானது. இதனை சின்னச் சின்ன தனிநபர்களின்சொந்தவிருப்புவெறுப்புகளுக்காக சிதறச்செய்துவிடாமல் காப்போம். தனிநபர்களின் அகந்தை ஆணவம் பதவி ஆகியவற்றை விட சமுதாய நல்லிணக்கமே இன்றியமையாதது என்பதை உணர்வோம். வளமான சுபீட்சமான ஆரோக்கியமான இலங்கைத் தேசத்தைக் கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்.

## வெண்பாப் பயணம் 2

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தை காட்டிநின்றால் என்செய்வீர் – அன்னவளை
பெண்டாட்டி தள்ளிவைத்து பேசாது சின்னவீடாய்
கண்ணாளம் செய்திடுவேன் கண்டு

**மன்னை மணிமாறன்**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – புன்னகையைக்
கண்டால் களித்துவப்பேன் காணாக்கால் காரணத்தைக்
கண்ணாலே கேட்பேன் கனிந்து!

**சுந்தர ராசன்**

முன்வந்து ஒருநாளுள் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – முன்னாலே
போய்நின்று நானோ புதுவாழ்வுப் பெண்போலே
பாய்கின்ற சந்தோசம் பார்

**பா. இந்திரன்**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் - சண்முகத்தைப்
பார்த்திடவே என்னவளைப் பைங்கிளியை எண்ணமெல்லாம்
வேர்க்க அணைப்பேன் வியந்து

**வா. சண்முகம்**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – என்செய்வேன்
சின்னதொரு புன்னகையைச் சிந்திவிட்டுக் கண்கலங்கி
அன்னவளை விட்டகல்வேன் ஆங்கு

**இரா. அழகர்சாமி**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – அன்றுபோல்
இன்றும்வி யந்துசொல் இல்லாது நிற்பேனோ
என்னுள்ளே காதல் எரிந்து

**சுரேஷ் சீனிவாசன்**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – என்னம்மா
கண்ணம்மா உன்பேரில் காணென் மகளம்மா
உண்டுன் நினைவென்பேன் ஊங்கு

**விசு. இம்மானுவேல்**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – என்றவுடன்
பொன்னூஞ்சல் செய்திடுவேன் புன்னகைத் தேரிலேறிப்
பொன்மனதைப் போற்றிடுவேன் பூத்து

**கவிஞர் வீக பொன்னையா**

முன்வந்(து) ஒருநாள் முன்னாளில் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் - என்செய்வேன்
என்னுயிரின் பாதிசென்று இன்னோர் உடல்தனைக்
கொண்டதென்று கொள்வேன் குளிர்ந்து.
**செந்தில் குமார்**

.

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? - என்செய்வேன்?
ஆனமட்டும் தின்பேன் அவளழகைக் கண்ணாலே
மோனமொழிப் பா(ர்)வை மொழிந்து
**ஞால ரவிச்சந்திரன்**

.

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? - என்செய?
பொன்முகம் பார்த்துப் பொறிகலங்கிப் போனாலும்
புன்முகம் காட்டேன் புறத்து
**க. சங்கரபாண்டியன்**

.

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – தன்மையாய்
அன்புநண்ப னாய்யென் அகமுருக உள்ளமர்த்தி
நன்நலம் ஆய்வேன் நயந்து.
**வானதி சந்திரசேகரன்**

.

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – தன்னெஞ்சில்
பொன்னான அந்நாளின் பொன்னெழிலால் தேடிவந்தாள்
என்னுள்ள ஏக்கம் அறிந்து...
**தங்கை பாலா ஆசினி**

.

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – அன்பேயென்
நெஞ்சில் நிறைந்திருந்தும் நேரில் சினந்துபின்
கொஞ்சுவேன் யானணைத்துக் கொண்டு
**செல்லப்பன்**

.

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – பின்னொருக்கால்
இப்படியோர் சூழ லினியமையா தாதலினால்
அப்படியே முத்தம் அணைத்து.
**கவிதை எனக்கு எதிரி**

.

முன்வந் தொருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – என்னாளும்
வஞ்சமில்லா உன்வடிவே வையகத்தில் காண்பதாக
நெஞ்சினிக்கச் சொல்வேன் நெகிழ்ந்து...!
**ஐ. க. நாகப்பன்**

## வெண்பாப் பயணம் 2

முன்வந் தொருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? - பொன்மானை
இல்லம் அழைத்துவந்து இல்லாள் அறியவைப்பேன்
வெல்லாத காதலதை வென்று

**தர்மராஜ் பாப்பண்ணன்**

முன்வந் தொருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – அன்றிரவே
சண்டாளி பாதகத்தி சந்தித்த நன்னிகழ்வைக்
கொண்டாடு வேன்கோட்டர் கொண்டு.

**வள்ளி முத்து**

முன்வந் தொருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்.! - கண்ணாளா!
நில்லாது தான்நடுங்கும் நின்காலை முன்வைத்துன்
இல்லாளைச் சேரென்பேன் ஏற்று!

**பொலிகையூர்க் கோகிலா**

முன்வந் தொருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – என்விழிகள்
பேச்சின்முன் வாயடைக்கப் பேச்சின் உணர்வுகளை
மூச்சங்கே காட்டுமவள் முன்!

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

முன்வந் தொருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றா லென்செய்வீர் – நன்றிபல
என்றிறைக்கே நானுரைப்பேன் இன்னும் மெருகேறி
முன்னினும் சீரேந்தக் காண்

**கணபதி சிவசண்முகம்**

முன்வத்(து) ஒருநாள்ளுன் முன்னாளின் காதலன்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – இன்னாளின்
வேலிதந்த நற்புனிதம் வேதனையைத் தாராது
தாலிக்குப் பின்னா தவிப்பு!!

**கிருஷ்டினா அருள்மொழி**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளில் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – கன்னல்
தலைவனின் கண்கள் தவிப்பதைக் கண்டு
சிலையாகி நிற்பேன் சிவந்து.

**மாலதி திரு**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர் – உன்விழியால்
கொல்லாதே! என்னுள்ளம் கொள்ளாதே உன்னன்பை;
நில்லாதே என்பேன்கண் நீர்த்து

**சு. வி. லட்சுமி**

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதலிதன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – அன்றென்னை
காதலொரு கேடா கருவாயா என்றிகழ்ந்தாய்
ஏதமில்லை, வாவென்பேன் ஏற்று!

**சுந்தரராஜ் தயாளன்**, பெங்களூரு

.

முன்வந்(து) ஒருநாளுன் முன்னாளின் காதல்தன்
இன்முகத்தைக் காட்டிநின்றால் என்செய்வீர்? – மன்றினில்
வண்ணமிகு கற்பினராய் வாழிய நீங்களென்று
பண்பாய் உரைத்திடுவேன் பார்த்து .

**சரஸ்வதி பாஸ்கரன்**

# வெண்பா போட்டி (பயணம்) 3

கொஞ்சம் சவாலான போட்டி தான்...
போட்டியின் கால அளவு
25-12-21 சனி முதல் 09-01-22 ஞாயிறு இரவு வரை...

.

கற்புக்கரசி கண்ணகிக்குக் கிடைக்காத பிள்ளைப்பேறு....
அன்னை என்ற பெண்நிலையின் உயர் அங்கீகாரம்.....
ஆடல் குலத்தில் தோன்றினாலும்.
மாதவிக்கு வழங்கிய காலத்தின் தீர்மானம் என்னவாயிருக்கும்?

கேள்வியின் சுருக்கம் ;

## கண்ணகிக்கு ஏன் குழந்தை இல்லை?

இதற்கான பதிலை ஒன்று முதல் ஐந்து வெண்பாக்களில் சொல்லலாம்...
அசத்துங்கள் கவிஞர்களே .....

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே...

அது நகைச்சுவையானாலும் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும். காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம் கட்டாயம் இளங்கோவடிகள் கோபம் கொள்ள மாட்டார் என்ற நம்பிக்கையில்.

.

தளர்வுகள் : - தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

.

என்றும் தமிழுடன்...
தமிழ்நெஞ்சம் அமின்...
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு...

# அவள் பெயர் வனவரசி

## முனைவர்.சா.சே.ராஜா, மதுரை

அந்த இரவில் ஆள் நடமாட்டம் சற்று குறைவான பகுதி பனி சற்று கூடுதலாக கொட்டுகிற வேளையில், மரங்களின் சத்தம் ஒருபுறம், பறவைகளின் குரல்கள் மறுபுறம், அமைதி சூழ்ந்த அந்த பகுதியில், இருசக்கர வாகனம் வெளிச்சம் வந்து வந்து அமர்கிறது, சின்னதாக ஒரு குரல் சத்தம், அந்த குரல் மேலும் உயர்கிறது, ஒரு கொலுசு சத்தம், மல்லிகை மணம், வாசனை திரவியம் சற்று கூடுதலாக மூக்கில் நுழைய, முகம் முழுவதும் வியர்வை துளிகள் வடிந்த வண்ணம் ஒரு நங்கை. மூச்சு முன்னும் பின்னும் சென்று வர அந்த இரவில் நடந்து வருகிறாள்.



மச்சி ! என்னடா இன்னிக்கு குளிர் ரொம்ப அதிகமா இருக்கு உடம்பே நடுங்குது டா !

ஆமா மாமா! நேற்றை விட இன்னிக்கு கொஞ்சம் அதிகம் டா ! ஸ் ஸ் அப்பா என்று கையை உரசி கன்னத்தில் வைத்து கொண்டு சொன்னான் ரவி.

ஒரு சிகிரெட் இழுத்தாத்தான் சரியா வரும் போல என்று நிமிர்ந்த மணி, அங்கே நடந்து வரும் நங்கையே பார்த்து, டேய் ரவி அங்க பாருடா அது வருது டா !.

அதுவா யாருடா! என்று ரவி பார்த்து இதுவா என்னடா இந்த நேரத்துல இது இப்படி தனியா வருது!.

இந்த மாதிரி ஆளுகளுக்கு இது தான்டா நேரம். பகல் முழுவதும் கடை கடையாக பிச்சை எடுக்குங்க! அப்புறம் நைட் ஆகிருச்சுனா இந்த வேலைக்கு வந்துருங்க.

அது நடைய பாருடா என்னமா நடந்து வருது.

ச் சீ... இதைப்போய் ரசிக்கிறியேடா நல்ல ரசனை டா உனக்கு. அது ஒரு நடை அது ஒரு ஆளுன்னு கருமம் டா ! என்று மணி சொல்ல அந்த நங்கை இவர்களின் அருகில் வந்தாள். ...

ரவி பாதையே மறைத்து ஒரு மாதிரி உதட்டைக் கடித்துக்கொண்டு எச்சில் விழுங்க பார்த்தான்.

கொஞ்சம் தள்ளிக்கங்க இப்படியா நடு பாதையில நிக்கிறது.

ஏன் ஓரமா போகமுடியதா என்று நக்கலாக கூறினான் மணி.

இப்படி பாதையே மறச்சு நின்னா எப்படி போறதாம், கொஞ்சம் வழிய விடுங்க.

ஏன் என்னையெல்லாம் பார்த்தா உனக்கு பிடிக்காதா?.

என்ன பேசுறீங்க தனியா ஒரு பொண்ணு வந்தா இப்படியா பேசுவீங்க, என் அக்காவ கூப்பிட போறேன் அவ எனக்காக காத்திருப்பா !.

பாருடா இது பொண்ணாம் டா, இது பொண்ணுன்னு சொன்னா பொண்ண என்னானு சொல்லுறது, பொண்ணாம் பொண்ணு எங்க காணோம் என்று சொல்லி சிரித்தான் மணி.

கொஞ்சம் தள்ளி நில்லுங்க நான் போகணும்.

குளிர் வேற இப்படி அடிக்குது நீ வேற இப்படி பக்கமா நிக்குற என்று சொல்ல.

அண்ணா என்ன சொல்லுறீங்க ஒரு பொண்ணு தனியா வந்தா தப்பானவளா ! ஏய் சும்மா நடிக்காத நீ எதுக்கு இந்த இரவில் தனியாக வந்திருக்கேன்னு தெரியாதா என்ன. உன்ன மாதிரி எத்தன இதுகளா பார்த்திருக்கோம், ஓவரா சீன் போடாத எவ்வளவு உனக்கு என்று வரம்பு மீறி மணி பேச,

சற்று கோபத்துடன் அண்ணா திருநங்கை என்றால் பிச்சை எடுக்கிறவர்கள், சுகம் காணுகிறவர்கள், திருட்டு பண்ணுறவங்களாகத்தான் இருக்கணுமா?. ஏன் சுயமாக சொந்த உழைப்பில் வாழுறவங்களா இருக்கக்கூடாதா?.

உன்ன பார்த்தா அப்படியா தெரியுது மச்சி இங்க பாருடா இதுவ என்னமோ கதையெல்லாம் சொல்லுது காசு கொடுத்தா கண்டதை பண்ணுறதெல்லாம் கேள்வி கேட்டு பேசுதுடா !

உண்மைய சொன்னா கேள்வி கேட்கிறேனு அர்த்தமா! அப்படியே வைத்து கொள்ளுங்கள் ஆமா நான் கேள்வி கேட்கிறேன் தான் !

என்ன திமிரா பேசுற உனக்கு இவ்வளவு திமிரா ஒரு ஒன்பதுக்கு என்று மணி சொல்ல.

அண்ணா ஏன் அப்படி சொல்லுறீங்க! ஒரு திருநங்கையா இருக்குறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா! சொந்த அப்பா அம்மாகூட எங்கள் உணர்வுகளை புரிந்து

# போர்ப்பறையடி

என்னை உருக்கிக் கலந்து
வார்த்த உயிர்ச்சிலையே
கண்மணியே காதல்மகளே

மண்ணில் பெண்ணாய்
உன்னைப்பெற்ற குற்றவாளிநான்

ஆதிக்கவெறியும் அதில்நெய்யூற்றும்
மதவாதக்கரங்களும் அறிவதேயில்லை

பெண்ணென்றால் தாயாய்
தமக்கையாய் தங்கையாய்
மகளாய் தோழியாய்
துணையாய் யாதுமாகி
வியாபித்திருப்பது நாமென்பதை

மானுடத்தின் விளைநிலம் நாமெனும்
மமதைகொள்மகளே

மோதிமிதிப்பதும் முகத்தில்
உமிழ்வதும் பாதகர்க்குப்
போதாத தண்டனை
வெட்டிவீசு மனிதம்பேசு
நம் ரௌத்திரமூச்செதிரே ஆணியம்தூசு

சமத்துவம் சமை
அன்பினாலொரு
அவனியை அமை

அழுவதும் தொழுவதும் நிறுத்து
விழுவதும் வீழ்த்துவதும் மறுத்து
எழுவதே விடுதலை என்றுணர்
என் உதிரநதி
மிதந்துவந்த உயிர்ப்படகே

காலங்காலமாய் கற்பெனும்
சிறைவாசிநாம் இனி கற்பிதங்களின்
கருவறுப்போம் பெண்ணியம் போற்றும்
உலகமைப்போம்

கயமைகள்கொன்று சிரிப்போம்நின்று
மதசாதி அடிமைத்தனம் வென்று

பெண்ணாய் பிறப்பதன் பெருவலிமாற்றி
பெண்தான் உலகென
வெற்றிப் போர்ப்பறையடியடி

சிங்காரசுகுமாறன்
சென்னை

கொள்வது கிடையாது. சனியன் பிசாசு எங்காவது போயி செத்து தொலையினு அடிச்சி விரட்டு எங்க போவதுனே தெரியாம நடுரோட்டில் அனாதை மாதிரி பசியோடும் வலியோடும் திரிந்து, பசிக்கு சோறு கேட்ட உஸ் னு கிண்டல் பண்ணி விரட்டுவாங்க, எதாவது வேலை கேட்டால் உனக்கு எல்லாம் யாரு வேலை குடுக்குறதுனு கேவலமா பேசி திட்டி அனுப்புவாங்க, வேற என்ன பண்ண முடியும் பசிக்கு சோறு கேட்டா பிச்சை கேட்கிறோமுன்னு பிச்சை போடுறது, ஏன் எங்களுக்கு வேலை கொடுக்காம பிச்சை போடுறீங்கன்னு உங்களுக்கு தெரியுதா!.

உங்கள வேலைக்கு வைத்தால் விளங்கிடும் சும்மா போவியா !.

ஏன் அண்ணா, நாங்கள் வேலைக்கு வந்தால் என்ன பிரச்னை, கடவுளோட பிள்ளைகள் நாங்கள், எதாவது தொழில் தொடங்கும்போது ஒரு திருநங்கை கையில் ஒரு ரூபாய் வாங்கி ஆரம்பிக்கிறீங்க அப்போ மட்டும் நாங்கள் உங்களுக்கு நங்கையா தெரியலையா?.

எல்லாமே நாம பார்க்கிற பார்வையில் இருக்கு அண்ணா, இங்க எல்லாரும் நல்ல வங்களா, ஒரு திருநங்கைய பார்த்தவுடன் அவள் திருடி, வேசினு நினைக்கிறிங்களே தவிர ஏன் அவளை ஒரு மனுசியா பார்க்க மாட்டேன்னுறீங்க!. எங்களுக்கும் ஒரு இதயம் உண்டு அதுவும் துடிக்கும் அதிலும் வலிக்கும், அதிலும் ஆயிரம் ஆசைகள் உண்டுன்னு உங்களுக்கு ஏன் புரியமாட்டேங்குது?. உங்கள் ஆசைக்கு நாங்கள் விருந்து என்று இன்னும் எத்தனை நாட்கள் தான் நினைப்பீர்கள். ஏன் நாங்களும் விவசாயம் பார்க்ககூடாதா! ஒரு வாத்தியார், கலெக்ட்டர், டாக்டருனு வரக்கூடாதா!. திருநங்கை என்றால் தவறானவள் அப்படித்தானே, எத்தனையோ திருநங்கைகள் பிரசவம் பார்த்து, தான் குழந்தை பெற்றுக்கொள்ளமுடியாவிட்டாலும் தாயையும் குழந்தையும் பார்த்து சந்தோசப் பட்டு கொள்ளும் நங்கைகள் ஏராளம், ஊர் பேர் தெரியாமல் சுற்றி திரியும் எத்தனை குழந்தைகளுக்கு திருநங்கைகள் பாதுகாப்பு கொடுத்து அவர்களே பராமரித்து வளர்க்கிறார்கள் தெரியுமா?. ஏன் ஒரு பெண்ணுக்கு கூட அடைக்கலம் கொடுத்து அவளின் மானம் காத்து நின்றவர்கள் நங்கைகள், யாராவது சொல்லுங்க ஒரு தனியா வரும் பெண்ணுக்கு அவளின் உடல் விரும்பாமல் அவளை பாதுகாக்கும் ஆண்கள் உண்டா?. எல்லாம் போதை காமம் என்று அலையும் கூட்டத்தில் எப்படி மனித நேயம் பார்க்க முடியும். திருநங்கை என்று கூட பார்க்காமல் என்னையும் காமம்கொண்டு பார்க்கும் உங்களிடம் பெண்களுக்கு எப்படி பாதுகாப்பு கிடைக்கும், ஏன் உங்கள் வீட்டிலும் பெண்கள் இல்லையா? அவர்களில் யாராவது இப்படி இருந்தால் அவர்களையும் இப்படிதான் கேலி கிண்டல் ஒன்பது உஸ் னு நக்கல் பண்ணுவிங்களா?. நாங்களும் மனிதர்கள் தான் அண்ணா, எங்களுக்கு பிடித்தாற்போல் வாழ எங்களுக்கு உரிமை இல்லையா? நாங்கள் என்னதான் பாவம் செய்தோம், இப்படி மாறவேண்டும் என்று மனது சொல்லியது அப்படி மாறினோம், இப்படி மாறினால் என்ன கொலை குற்றமா? இப்படி மாறிவிட்டால் எல்லா நங்கைகளும் இரவில் கைநீட்டி சுகத்திற்குத்தான் அழைக்கவேண்டுமா? என்ன அண்ணா என்று கண்ணில் நீர் கொட்ட பேசினாள் அந்த நங்கை.

மணி சற்று அமைதியாக நின்றான். ரவியும் எதுவும் பேசாமல் ஒரு திருட்டு முழி முழித்துக்கொண்டு அமைதியாக நின்றான்.

என்ன சொல்வது என்று மணிக்கு தெரியாமல் சற்று தலைகுனிந்தபடி பாதையை விட்டு விலகினான்.

மணி பாதையை விட்டு விலக அவள் நடக்க தொடங்கினாள்.

அவள் சற்று தூரம் செல்ல ரவி வேகமாக அவள் அருகில் சென்று, சிஸ்டர் சாரி அவன் ஏதோ பேசிட்டான் என்றான். பரவாயில்லை அண்ணா என்று சொல்லி அவன் தலையில் கைவைத்து ஆசீர்வாதம் கொடுத்து சிரித்தாள் அந்த நங்கை.

மனதில் புதிய மலர்வுடன் ரவி அந்த நங்கையை பார்த்து நின்றான்.

வெகு தூரம் சென்ற அந்த நங்கை திரும்பி பார்த்து ஒரு புன்னகை புரிந்தாள், அதைக்கண்ட மணியும் சிரித்தான்.

அவள் பெயர் வனவரசி..

# அன்றும் இன்றும்

குடிசை வாழ்வாயினும்
குறைவில்லை மகிழ்விற்கு
மாளிகை வரவுடன்
மரித்தது மகிழ்வும்

பரந்து  விரிந்த
பந்த பாசங்கள்
ஒடுங்கிப் போயின
நவீன வளர்ச்சியால்

மாற்றங்கள் கண்டே
மறந்தோம் வாழ்வியலை
தேற்றிடக் கரமின்றித்
தேம்பி  நிற்கின்றோம்

கிளித்தட்டும் கிட்டிப்புள்ளும்
அளித்த ஆனந்தத்தை
நவீன விளையாட்டில்
காண்பதே அரிது

மனங்களால் அன்று
மனிதம் காத்தோம் - இன்று
பணத்தைக் கண்டு
மனிதம்  தொலைத்தோம்

உறவின் மேன்மைகள்
உணர்ந்து வாழ்ந்தோம்
இன்று உணர்வுகளற்ற
நடைப்பிணமாய் வாழ்கின்றோம்

இயற்கை வாழ்வும்
இயற்கை உணவும்
இயம்பும் என்றும்
இனிய பயன்களை

மறந்தோம் இவற்றை
சுமக்கின்றோம் நோய்களை
மருந்துடன் அலைந்து
மரிக்கின்றோம் பாதியில்

சடங்குகள் மறந்து
சம்பிரதாயம் மறந்து
பாரம்பரியங்கள் மறந்து
நம்பிக்கைகள் துறந்து

வாழ்வினை இருளில்
மூழ்கடித்து
பாதைகள் மாறிய
பட்சிகளாய்ப் பறக்கின்றோம்

வன்ம மனங்களால்
வன்முறைகள் ஏராளம்
சுதந்திரமும் இன்று
சிறைக்குள் அடக்கம்

இலாவகமாய் நடமாட
முடியாத நிலையின்று
குழந்தைக்கும் இங்கே
பாதுகாப்பு இல்லை

மூளையும் இன்று
விகாரங் கண்டதோ?
சிந்தனைகள் யாவிலும்
வன்மங்களே உதிக்கின்றன

போட்டியும் பொறாமையும்
புற்றாய் வளர்ந்து
மனங்கள் எல்லாம்
நஞ்சைக் கக்குது

பள்ளிக் காலம்
தந்த மகிழ்வும்
பருவகாலங்களில் சிறகடித்துப்
பறந்த தருணங்களும்
இனி எம்வாழ்வில்
எட்டாக்கனியே

**குகதா**

**கிளிநொச்சி இலங்கை**

1



2



4

3







5

வஞ்சி விருத்தம்

1

## எந்தன் இனிமையே

கண்ணுள் மணியாய் விழுந்தாய்!
என்னுள் நிலவாய் எழுந்தாய்!
செந்தேன் துளியாய் நுழைந்தாய்!
நெஞ்சில் மகிழ்வாய் மலர்ந்தாய்!

சொல்லும் மனதுள் சுகமாய்
வெல்லும் நினைவில் நலமாய்
கல்லைக் கரைக்கும் விழியால்
கன்னல் கவிதை மொழிந்தாய்!

ஆ_முருகேசுவரி

2

## அழகன் முருகன்

நாளும் பொழுதும் மனதை
ஆளும் அழகன் முருகன்
தாளும் பிடித்து வணங்க
நீளும் வளமும் மகிழ்வும்.

குன்றின் தலைவன் முருகன்
என்றும் துயரம் அகற்றி
குன்றா நலத்தை அளித்து
நன்றே மகிழ அருள்வான்.

தென்பரை இராக. பாஸ்கர்

3

## அன்பே உலகம்

அன்பே உலகில் நிறைய
துன்பம் துயரம் ஒழிய
வன்சொல் சினத்தீ மறைய
குன்றா உறவும் மலரும்

நெஞ்சம் அமைதி பெறவே
வஞ்சச் செயலைத் தவிர்த்து
பஞ்சாய் மனமும் திகழ்ந்தால்
விஞ்சும் மகிழ்ச்சி பெறலாம்

தமிழ்ப்பெரியசாமி, திண்டுக்கல்

4

## நிலாப் பெண்

வண்ணம் கலையா நிலவாய்
எண்ணம் தனிலே நிறைவாள்
விண்ணில் தினமும் மறையக்
கண்ணில் கனவாய் மிதப்பாள்.

வெள்ளை நிலவின் அழகைக்
கொள்ளை அடிக்கும் மனதில்
துள்ளும் இளமை துடிக்க
அள்ளி எடுத்தே அணைத்தேன்.

ஜெயசக்தி பிரபாகரன்.

5

## அன்பே வருவாய்

செல்லக் கனியே விரைவாய்,
மெல்ல நடந்து வருவாய்.
வெல்லச் சுவையே யருகில்,
எல்லா மருந்து மளிப்பாய்.

கல்லாய் மனதை யிருத்திச்,
சொல்லா விதமாய் நகர்வாய்.
அல்லா தவைகள் விலக்கிப்,
பல்வே றுரைகள் பகர்வாய்.

வீரா மோகன். இலங்கை

## பாதிப்பு

நீ அழகானவள்தான்
அளவோடு பெய்யும்
வேளையில்...

சுகமான கீர்த்தனையாய்
ஆலிங்கனம் செய்வாய்
வராமல் வந்த பொழுதுகளில்...

வெப்பச் சலனத்தில்
நீ எழுதும் கவிதை
எனக்கான ஆலாபனை...

தீர்த்தவாரியாய் மழையை
தீராமல்
வாரி இறைத்ததில்
வீடு குட்டையானது...
தெரு குளமானது...
ஊர் ஏரியானது...

சஞ்சலப்பட்டுக் கிடக்கிறேன்...
கடன் தொகையில் வாங்கிய
பொருளெல்லாம் உன்
சல்லாபத்தில் மூழ்கிக்கிடக்கிறது

**செ.புனிதஜோதி**
சென்னை



# சக்தி பீடப் பயணம்...

அது ஒரு இருளின் கூடு
ஆதியும் அந்தமும் அறியமுடியா
அந்தகாரம்

பாசியற்ற நீரின் பவித்திரம்
பாசமாய் தடவும் விரல்களின் அழுத்தம்
பழகியிருந்த பாலபாடம்

கடவுள் கற்றுத் தந்த உள்நீச்சல்
காதுவரை வரும் நீர் உள் நுழையா
சத்தியத் தடுப்பு

கேட்கும் ஒலியெல்லாம் நந்தலாலா

மொழியற்ற பிரபஞ்ச சஞ்சாரம்
ஒளியும் தேவையற்ற காந்தாரம்
ஒன்றுமேயில்லை... ஒன்றுமில்லை இங்கு

பின் ஏன் வெளி உலகம்
பெண்ணாய் உடல் என்பது பெருமை
அதற்காக வர வேண்டும்
ஆழம் விடவேண்டும்

இனி நகர்வெல்லாம் பீடம் நோக்கி
சக்தி அமர்வின் சன்மானம்
பிறவி எனும் விடுதலை
போராட்டம் தேரோட்டமாகும் நெடும்பயணம்
மாதொருபாக சிவம்

"உங்களுக்குப் பெண் குழந்தை" என்ற
குரலுக்குப் பின் அழ ஆரம்பித்தேன் மகிழ்வாய்...!!!

- கிறிஸ்டினா அருள்மொழி

# மனப்பேய்

**கே.ஜி.ஜவஹர்**



இப்படி அர்த்த ராத்திரியில் பேய்க் காட்டிற்குள் மாட்டிக் கொள்வோம் என்று வேலம்மா கொஞ்சமும் நினைக்கவில்லை.

வேங்கிரி கிராமத்தில் உள்ள அக்கா வைப் பார்த்து கொஞ்சம் பணம் கேட்டு வரலாம் என்று கிளம்பியவள்தான். அக்காவும் பணம் கொடுத்து விட்டாள்.ஆனால் என்ன லேசில் விடவில்லை.கடந்த ஆறு மாதமாய் அக்கம் பக்கத்தில் உள்ள அத்தனை கதைகளையும் அலசித் தீர்த்தாள்.

வேலம்மாவால் நெளியத்தான் முடிந் தது. பணம் கொடுத்தவளிடம் பட்டென்று பேச்சை அறுத்துக் கொண்டு வரமுடியவில்லை.

அக்காவுக்கும் தங்கச்சிக்காரி எப்படி திரும்புவாள் என்ற கவலை இல்லை.

உதவி செய்பவர்கள் பலர் அவர்கள் செய்த உதவியை சொல்லிக்காட்டாமல் இப்படி பலவழிகளில் இம்சைப் படுத்து வார்கள். பாட்டு பாடி அறுப்பார்கள். ஜோக் சொல்லி கிழிப்பார்கள். அவர்கள் மாமன் மச்சான் ரவுசுகளை நடித்துக் காட்டுவார்கள். அத்தனையையும் பொறுமையாய் கேட்க வேண்டும். பண உதவி செய்து இருக்கிறார்களே. தலையைத் தலையை ஆட்டவேண்டும்.

'ஆ அப்படி போடு..ஐலேசா..இப்படி போடு ஐலேசா' என்றெல்லாம் சொல்ல வேண்டும். தனக்குத் தராமல் அவர்கள் மட்டும் குடிக்கும் ஏதாவது ஒரு பானத்தை காப்பித்தண்ணியோ, கம்பம் கூழோ, கொள்ளு ரசமோ பார்த்துக் கொண்டே இருக்கவேண்டும்.

'வேண்டாம்..சாப்பிட்டாச்சு.. பசிக்கல..பிடிக்காது...' என்று ஏதவது ஒரு காரணம் சொல்ல வேண்டும்.

வேலம்மா அப்படித்தான் நேரம் போவது தெரியாமல் நன்றி உணர்ச்சி காட்டியவள் கடைசி பஸ்ஸைத் தவற விட்டு விட்டாள்.

'என்ன செய்வது' என்று யோசிக்கும் போது, ' அக்கா...! பேய்காட்டு வழியா குறுக்கால போனா போயிரலாம்கா' என்றான் ஒருத்தன்.

பேய்க்காடு!

அவளுக்குத் தெரியும்.

அது ஒரு முந்திரிகாடு. ரெண்டாம் ஆட்டம்பார்த்தவர்கள்கிராமத்திற்குவிரைவாக திரும்ப உதவும் காடு. இந்த கொரானா காய்ச்சல் வந்தபிறகு செகண்ட் ஷோ ரத்து ஆகி இரண்டு வருடமாகிவிட்டதாலும், நடமாட்டம் குறைந்ததால் தூக்குப் போட்டு செத்துப் போன சில கேஸ்கள் வந்துவிட்டதாலும், அதன் பின் விளைவாய் பேய்கள் குடியேறிவிட்டதாகவும் பேச்சு.இரண்டு வருஷத்திற்கு முன்பு ஜாதி மாறி காதலித்த சங்கரனும்,வாணியும் தூக்குப் போட்டு செத்தது இந்த காட்டில்தான். முதலில் செத்த வாணியின் எலும்புக்கூடாவது கிடைத்தது. சங்கரனுடையது எதுவும் மிஞ்சவில்லை. இருவர் ஆவியும் மே/பா முந்திரிக்காடு என்று ஆகிவிட்டது!

'முந்திரிக் காடு' பேய்க்காடு என்று பெயரைப் பெற்று விட்டது.

அது என்னவோ பட்டப் பெயர்களும், பயங்கரப் பெயர்களும் பசக்கென ஒட்டிக் கொண்டு விடுகின்றன.

அவள் விரைசலாக நடந்து கொண்டி ருந்தாள்.

நல்ல வேளை. மரங்களுக்கு இடையே நிலவொளி வேலம்மாவைக் குசலம் விசாரித்துக் கொண்டே வந்து கொண்டிருந்தது.

வேலம்மாவிற்கு பேய் பயம் இல்லை என்றாலும்,'அப்படி ஒன்று இருக்குமோ' என்ற எண்ணமும் அவ்வப்போது வரும். 'கரைப்பார் கரைக்க கல்லும் கரையும்' என்பது போல் கிராமத்தில் சில பெருசுகளும் அக்கப் போர் கிழவிகளும் இருக்கத்தான் செய்தார்கள்!

வேலம்மாள் நடையை எட்டிப் போட்டாள்.பாம்புபோல்வளைந்துவளைந்து சென்ற ஒத்தயடிப் பாதை வழிகாட்டிக் கொண்டே சென்றது.இருட்டு கண்ணுக்கு ஓரளவு பழகி விட்டது. திடீரென்று புகை மணம் அவள் நாசியைத் தாக்கியது.

அது சிகெரெட்டா..பீடியா என்று அவளுக்கு இனம் பிரிக்கத்தெரியவில்லை. ஆனால் மேலத்தெரு பாட்டி, 'பேய் சுருட்டுதான் பிடிக்கும்' என்று சொல்வாள். இப்போது வேலம்மாவிற்கு இடது பக்கம் ஒருசின்னபாதைபிரிவதும்அதன்தூரத்தில் ஒரு உருவம் தெரிவதும் நிதர்சனமாகியது. 'பேயைப் பார்த்தா தொப்புளை மூடிக்கோ' என்று மணித்தாத்தா ஒரு முறை சொன்னது சட்டென்று நினைவுக்கு வர தொப்புளை மூடிக்கொண்டாள் வேலம்மாள்.

குலதெய்வத்தை வேண்டிக்கொண்டாள்.

பயம் உடலை ஆட்டியது..

'அது' வெள்ளை உடையில்தான் இருந்தது!

'தலைவலி காய்ச்சலும் தனக்கு வந்தால் தான் தெரியும் என்பது போல பேய் அனுபவமும் ஒருவனுக்கு வந்தால் தான் தெரியும்' என்று நினைத்துக் கொண்டவளால் நகர முடியவில்லை.

ஏதோ ஒரு பளீர் ஒளி அவள் முகத்தில் அறைந்து விட்டுச் சென்றது.

இப்போது அந்த பேய் அவளை நன்கு நெருங்கி விட்டது. கையில் சுருட்டு! 'பேய்க்கு மட்டும் ஏன் வெள்ளை உடை? அதிவும் பளீர் என்று? அதுக்கு யார் சர்ஃப் எக்செல் சப்ளை பண்றது?' என்ற ஜோக் உண்மையானதைப் பார்த்து நடுங்கும் போது அது அருகில் மிதந்த மாதிரி நடந்து வர அவள் திரும்பி ஓட ஆரம்பித்தாள். அது பின்னாடி வருவது மாதிரி இருக்க,இதயம் வெடித்து இரத்தம் கக்கிச் சாவப்போவது போவது உறுதி என்று நினைத்தாள். விதை நெல் வாங்க பணத்திற்காக காத்திருக்கும் பாசக்காரக் கணவனும், ஒரே அன்புச்செல்லக்குட்டி மகள் சொர்ணாவும் நினைவுக்கு வந்தனர்.

"வேலம்மா.." என்றது குரல்.எங்கோ கேட்ட குரல்.

"பயப்படாதே வேலம்மா... நான் தான் சங்கரன்... திரும்பு.."

'பேய் பல கதைகள் சொல்லும். நீலிக் கண்ணீர் வடிக்கும்...நம்பி நின்னா அடிச்சிறும்...இரத்தம் குடிக்கும்..' யாரோ சொன்னது நினைவுக்கு வந்தது!

அது முன்னாடி சட்டென்று வந்தது. சுருட்டை தூக்கி எறிந்துவிட்டு தன் முகத்தில் டார்ச் அடிக்க அட சங்கரன்!

"ஆமாம் வேலம்மா... நான்தான்.. இந்த கிராமத்து சனம் நினைச்சுகிட்டு இருக்கிற மாதிரி இங்கு தூக்கு போட்டு சாவல.. பம்பாய்க்கு ஓடிட்டேன். ஆனா சாதியைக் காட்டி பிரிச்சு வாணிய அடிச்சுக் கொன்னு இங்க தூக்குல தொங்கவிட்டாங்க.. அவ நினைவா அவ்வப் போது வருவேன்... நான் உன் முறைப் பையனா இருந்தாலும் எங்க காதலை சப்போர்ட் பண்ணி கடைசி வரை போராடி தோத்துப் போன உன் கால்ல, என்னைக்காவது விழனும்னு நினைச்சேன்.. கடவுளே அந்த வாய்ப்பை கொடுத்துட்டாரு..." சொல்லி அவள் தடுக்க தடுக்க காலில் விழுந்து எழுந்தான் சங்கரன்.

அவளுக்கு கண்களை நம்ப முடியவில்லை.

"வா..எல்லை வரை உன்னுடன் வரேன்.."

அவளுடன் பேசாமல் நடந்தான்.

அவளுக்குநடுக்கம்குறையவில்லை. எல்லை முடித்ததும் சொல்லாமல் கூட காட்டிற்குள் போய்விட்டான்.

அவள் மனம் கனக்க வீட்டை நோக்கி நடந்தாள். ஒரு முறை திரும்பிப் பார்த்தாள்.

காட்டில் ஒரு பேய்கூட இல்லை. ஊரினுள்ளேதான், சாதிபேய், அகங்காரப் பேய், ஆணவப்பேய், பணப்பேய், பதவிப்பேய் என்று பல பேய்கள் இருப்பது மாதிரி இருந்தது...! ■

# பெண் குழந்தைகளுக்குத் தாய்வீடாக வேண்டும் பள்ளிகள்

முனைவர். பெண்ணியம் செல்வக்குமாரி

பள்ளிக்கூடம் குழந்தைகளின் சரணாலயம். தங்குவதற்கும், விளையாடுவதற்கும் இளைப்பாறுவதற்கும் மட்டுமல்ல, அறிவுத்தேடலுக்கும் விடுதலையை உணர்வதற்குமான இடமாக இருக்கிறது. குழந்தைகளுக்கு அறிவுக் கொடை வழங்கும் இப்பள்ளிகளில்தான் எழுத்தறிவோடு சமூகத்தில் தன்னைப் பிணைத்துக் கொள்ளும் பான்மையைக் கற்றுக் கொள்ள வழிவகை செய்கிறது. பள்ளிகள் மாணவர்களின் புகலிடம். அந்தப் புகலிடத்தில் கல்வி என்பது ஈரத்தோடிருக்க வேண்டுமேயன்றி கரடுமுரடான கறார்தன்மையோடு விளங்கக் கூடாது.

குழந்தைகளுக்கு இப்போதெலாம் வீடு ஒரு ஓய்விடமாகவும், உண்ணுமிடமாகவும் மட்டுமே விளங்குகிறது. வீட்டிலும் பள்ளியிலும் இயற்கையோடு இயைந்து வளர வேண்டிய குழந்தைகள், செயற்கையாக தனித்து வளருகின்ற சூழலே நிலவுகிறது.

குழந்தைகள் கொண்டாடப்பட வேண்டிய தெய்வங்கள். சூதுவாதறியா தூயக் காகிதங்கள். அக்காகிதங்களில் நல்லெழுத்துக்களை நிரப்புவது சமூகத்தின் கடமையும்கூட. அதாவது அவர்களுக்கு வேண்டிய நல்லுணவு, நற்பண்பு, நற்சிந்தனைகளை உருவாக்குவதுமாம்.

“எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பதிலே” என்ற சினிமா பாடலைத் திருத்தி பள்ளி வளர்ப்பதிலே என்பதை மாற்றியாக வேண்டும். ஏனெனில் மாணவர்கள் தங்கள் வாழ்வின் பெரும்பாலான காலத்தைப் பள்ளிகளிலே செலவிடுகிற நிலமைதான் உண்டு. பத்தாம், பதினோறாம், பனிரெண்டாம் வகுப்பு மாணவர்கள் தூங்கும் நேரத்தைத் தவிர மற்றைய நேரங்களைப் பள்ளியில் சிறப்பு வகுப்பு நேரமென செலவிடுகின்றனர். ஒருநாளில் பல மணி நேரங்கள் தங்கள் வகுப்பறையில்தான் செலவிடுவதால் மிகுந்த மன உளைச்சலுக்கும் ஆளாகின்றனர்.

குறிப்பாக பெண்குழந்தைகள் நிலை பரிதாபமானது.இயற்கைஉபாதைவரும்போது அதைக் கழிப்பதற்கான அனுமதியைப் பெற ஆசிரியரை நாட வேண்டும். கடுமையாக நடந்து கொள்ளும் ஆசிரியரிடத்து தனது பிரச்சனையைச் சொல்லத் தயங்கி இயற்கை உபாதைகளை அடக்கிக் கொள்ளுகின்றனர். அதனால் உடல்ரீதியான பல பிரச்சினைகளை அனுபவிக்கின்றனர். மேலும் மன உளச்சலுக்கும் ஆளாகின்றனர். திடுப்பென வரும் தற்கொலை உணர்வில் சிக்கிச் சீரழிய நேரிடுகிற கொடுமை இந்த நாட்டில் இயல்பாக நடக்கிறது.

பள்ளியில் தண்டனை எனும்பேரில் பெண்குழந்தைகளின் சட்டையை அவிழ்ப்பது, முலைக்காம்புகளைக் கிள்ளுவது பொறுக்காமல் பினாயில் குடிக்கும் பெண் குழந்தைகள் நிறைய உண்டு.

இது மட்டுமின்றி ஆசிரியர்களில் சில கயமிகள் தனக்குச் சார்பாக சில கெட்ட செயல்களை அவர்கள் மீது திணித்து அருவருக்கத்தக்க செயல்களில் ஒருசிலர் ஈடுபட்டுவிடுகின்றனர். இவர்களால் இவர்களுக்கு மட்டுமல்ல ஆசிரியர் குலத்திற்கே மானக்கேட்டை உருவாக்கி வைத்து விடுகின்றனர். மீடியாக்களில் வரும் செய்திகள் பல ஆசிரியர் பெற்றோர் மனத்தைப் பதற வைப்பதாக உள்ளது.

இவைபோன்ற எல்லா நிகழ்வுகளும் பரிதாபத்துக்குரிய செய்தியாக எண்ணி மிக எளிதாகக் கடந்து போய்விடுகிறோம். எல்லாம் வேடிக்கைதான் நமக்கு நடக்காத வரை என்ற வாசகம்தான் நினைவுக்கு வருகிறது.

"மாணவர்களை வழிநடத்துவதில் தான் கல்வியின் இரகசியம் அடங்கியுள்ளது." எமர்சன் கூற்றை நோக்குங்கள்

உண்மையில் பள்ளியில் குறிப்பாக பெண்குழந்தைகள் பாலியல் வன்கொடுமைக்கும் பாலியல் அல்லாத வன்கொடுமைக்கும் ஆளாகிறார்கள் என்பதை நம்மில் எத்தனைபேர் உணர்ந்திருக்கிறோம். இதோ சில...

நான்காவது படித்த பெண்குழந்தை ஆசிரியரால் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி இறக்க நேரிடுகிறது.

பள்ளியில் கழிப்பிடவசதி இல்லாமையால், வெளியில் சென்ற பெண்குழந்தை வன்புணர்வுக்கு ஆளாகநேரிடுகிறது.

தமிழில் படித்து நானூற்றைம்பது வாங்கிய பெண்குழந்தை பதினோறாம் வகுப்பில் ஆங்கிலவழிக் கல்வியால் தோல்வியடைகிறாள். தன் தோல்வியைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், பள்ளிக் கூட மாடியிலிருந்து விழுந்து தற்கொலை செய்து கொள்ள நேரிடுகிறது.

ஆசிரியர் தொடர்ந்து தண்டனை கொடுத்ததைப் பொறுக்க மாட்டாத குழந்தை, பள்ளியை விட்டு வெளியேறி தொலைந்து விட நேரிடுகிறது

கல்விக்காக எவ்வளவு வேண்டுமானாலும் செலவழிக்கிறோம், வசதி இல்லாவிட்டாலும் கடன்பட்டும் செலவழிக்கிறோம். நம் குழந்தைகள் தரமான கல்வி பெற வேண்டுமென இத்தனையும் தாங்குகிறோம். இதே அக்கறை குழந்தைகளின் உடல் நலத்திலும் உளநலத்திலும் இருக்கிறதாவெனில் இல்லை யென்பதுதான் பதில். லட்சம் கொடுத்து படித்துவரும் பள்ளிக் குழந்தைகள் பலர் காலை உணவைக்கூட சாப்பிடாச் சூழலில் பள்ளிவருகின்றனர் என்பது எத்தனை பேருக்கு தெரியும்? இப்போதெலாம் பெண்குழந்தைகள் பத்து வயதிலே பூப்படைந்துவிடுகிறார்கள். பள்ளியில் எதிர்பாராமல் வரும் மாதவிடாய் போன்ற காரணங்களால் மிகுந்த மனஉளச்சலுக்கு ஆளாகிறார்கள் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?

பதினெட்டு வரையுள்ள பெண் குழந்தைகளுக்குப் பள்ளியில் கல்வியைப் போதிப்பது மட்டுமன்றி, தன்னைத் தற்காத்துக் கொள்ளும் திறன், இடர்பாடுகளை எதிர்நோக்கும் துணிவு, தன்னைக் காலத்திற்கேற்ப தகவமைத்துக் கொள்ளுகின்ற மனப்பக்குவம் ஆகிய வற்றையும் கூடுதலாக போதிக்க வேண்டும். இப்போதனைகள் கலை சார்ந்தும் அறிவியல் சார்ந்தும் இருக்க வேண்டுவது அவசியம்.

பள்ளி ஆசிரியப் பெருமக்களாலான போதனைக் கூடம் என்பதாக மட்டுமே பார்க்கின்ற மனநிலை உள்ளது. வகுப்பறை, பெஞ்சுகள், குடிநீர், கழிப்பறை, விளையாடுமிடம், செடிகொடி தாவரங்கள், காப்பாளர், உதவியாளர், கணக்காளர்



## தாய்த்தமிழே வருகவே

படபடவென முகில் சூழ்ந்திடத்
திடுதிடுவென மின்னல் தோன்றிடத்
தடதடவென இடி தாளமிடச்
சடசடவென பூமழை தூவிடச்
சலசலவென விரிநீர் ஒலித்திடத்
தைதையென அலைகள் ஆடிடத்
குளுகுளுவென தென்றல் தழுவிடத்
தகதகவென ஆதவன் தோன்றிடப்
பளபளவென ஞாலம் ஒளிர்ந்திட
மினுமினுவென அம்புலியும் தெரிந்திடச்
சிலுசிலுவென மனது குளிர்ந்திடக்
கமகமவென நறுமணம் வீசிடக்
கலகலவென நிலமகள் சிரித்திடக்
கடகடவென இசைத்தமிழ் முழங்கிட
கிளுகிளுவென வீறுகொண்டு எழுந்திட
விறுவிறுவென தமிழ்மகள் வந்தாள்

**த.கௌரி**
மானாமதுரை

என எல்லாப் புள்ளிகளையும் இணைத்துக் காணவேண்டிய உயிர்நிலையம் பள்ளி. அதோடுகூடிய உயிர்நேயப் பண்புகளைக் காப்பரணாக்க் கொண்டு விளங்குவதுதான் மிகச் சிறந்த பள்ளியின் அடையாளம். ஆனால் தமிழகத்தில் இவ்வடையாளத்தை எத்தனை சதவீதப் பள்ளிகள் கொண்டு விளங்குகின்றன என்பதே நம்முன் நிற்கும் கேள்வி.

உண்மையில் மாதா பிதாவுக்கு அடுத்தபடியாக விளங்கும் தெய்வம் ஆசிரியர்கள்தாம். ஆனால் தெய்வங்களான ஆசிரியர்கள் குழந்தைகளை நடத்தும் பாடு சொல்லி மாளாது. ஆகவே பள்ளிக்கல்வித்துறை பள்ளிகளின் மீது சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

- பெண்கள் படிக்கும் பள்ளிகளில் கட்டாயமாக மேலாண்மைக்குழு இருப்பது அவசியம். அது பேருக்காக செயல்படாமல் உண்மை அக்கறையோடு இருக்க வேண்டுமெனில் அக்குழுவில் குழந்தை களின் பெற்றோர் , சமூக ஆர்வலர்கள் ஆகியோர் அடங்கிய குழு அப்பள்ளியைக் கண்காணிப்பு செய்ய வேண்டும்.
- பள்ளிதோறும் பெண்குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் சட்டம் கொண்டு வர வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. ஒவ்வொரு பள்ளியிலும் “பெண்குழந்தைகளுக்குப் பாதுகாப்பான பள்ளி'' என்ற உறுதி செய்யப்பட்ட அரசால் அங்கீகரிப்பட்ட பெயர் பலகைகள் உருவாக்கப்படவேண்டும்.
- மக்கள் பிரதிநிதிகளும், கட்சித்தலைவர்களும் இச் சட்டமசோதாவைத் தாக்கல் செய்ய ஆவண செய்வது காலத்தின் தேவை. அப்போதுதான் பெண்குழந்தைகளுக்குப் பள்ளிகள் இன்னொரு தாய்வீடாக விளங்கும்.

ஆகவே பெண்குழந்தைகளுக்குத் தரமான கல்வியைப் பெற வேண்டுமென்ற உரிமைக் கோருவது பெற்றோரின் கடமை என்பது மட்டுமல்லாமல் பெண் குழந்தைகள் பாதுகாப்புக்கு உரிமைக் கோருவதும் பெற்றோர்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். ■

# தூரமுகம்

தூரமாய் இருத்தலில்தான்
நிலவின் அழகும் உணவூட்டும்
அதன்
நிழலின் ஒளியும்
தாலாட்டும்

தூரமாய் இருத்தலில்தான்
முகிலின் முகமும் நிலைமாறும்
அவை
மூண்டிடும் கணமும்
மழையாகும்

தூரமாய் இருத்தலில்தான்
மழையின் துளியும் இதமாகும்
அந்த
மழையின் ஒலியும்
பதமாகும்

தூரமாய் இருத்தலென்பது
ஓரமாய் தவித்தலும் இன்றி
காரமாய் எரித்தலும் அன்றி

சாரமாய் சங்கமிக்கும்
சட்டென்ற சமிக்ஞைகளின்
சலனங்களன்றி வேறென்ன

தூரமாய் இருத்தலிலும் கூட
தாரமாய் தாங்கிப்பிடித்து
தலைகோதிடும்
விரல்களாகத்தான்
விளையாடுகிறது
தனிமையை நிரப்பும்
அந்தத் தருணங்களும்

தூரத்திலும் உண்டு சுகம்
அன்றி வேறென்ன...!

**மைகிறுக்கல் மாதவன்**
சிறுமுகை

# பாரியன்பன் கவிதைகள்

1.

கோடையில் பெயர்த் தெரியாத மரத்தடியில்
நிழலுக்காக ஒதுங்கிய ஒரு வழிப்போக்கன்
நிழலின் குளிர்ச்சியில் வெயிலின் தாக்கத்திற்கான
காரணத்தை அறிய முற்படுகிறான்.
அதை அவன் கண்டறிந்த வேளையில்...
அவன் தலைக்குப் பின்னால் ஒளிர்கிறது ஒளிவட்டம்.
இப்போது அந்த வழிப்போக்கன்
எல்லோராலும் புத்தனென்று அழைக்கப்படுகிறான்.
அவனுக்கு ஞானத்தை போதித்ததால்
பெயர்த் தெரியாத அம்மரத்தை எல்லோரும்
போதி மரமென்று அழைக்கிறார்கள்.

2.

பசியை மிச்சம் வைத்தே பிரிகிறது ஒவ்வொரு பொழுதும்.
வேளைக்கு வேளை நீண்டு தொடர்ப் படிகளாய் முடிவின்றி.
முயற்சி தேடலின்றி எதற்கும் இல்லை தீர்வு.
சிறிதும் பெரிதுமாய் வடிவங்களில் உருவங்களில்
வெவ்வேறாய் எண்ணற்ற உயிர்கள்.
அதனதன் தேவையைப் பொறுத்தே பசியின் பட்டியல்.
எனினும் எவ்வுயிர்க்கும் பாசாங்கற்றது பசி.

3.

அப்பா அம்மா அண்ணன் அக்கா தோழியென
ஒவ்வொருவருக்குமான முத்தங்களை
தன் வலது இடது கன்னங்களிலிருந்து மாறி மாறி
எடுத்துக் கொடுக்கிறது குழந்தை.
கடைசியாய் தாத்தாவின் முத்தம் மட்டுமே பாக்கியென்று
குழந்தை திருப்பிக் கொடுத்த தாத்தாவின் முத்தத்தில்
பாட்டின் வாயிலிருந்து கடைசியாய் கழன்று
விழுந்த கடவாய்ப் பல்லொன்று
பத்திரமாக இருக்கிறது தாத்தாவின் கன்னத்தில்.

**பாரியன்பன்**
குடியாத்தம் - 632602

# மனதின் வலி

ருக்மணி வெங்கட்ராமன்



அன்று அந்த பாடசாலையின் ஆண்டு விழா. ‘பாலா’ என்ற காவல் துறை உயர் அதிகாரியின் தலைமையில் விழா நடந்து கொண்டிருந்தது. பள்ளி விழாக் கோலம் பூண்டிருந்தது.

மேடையில் தலைவர் பேச ஆரம்பித்தார். ‘‘நான் இந்த பள்ளியில் பயின்றவன்.’’ அதைக் கேட்டவுடன் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. “இங்கு இருபது ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சாந்தி என்பவரின் மகன்”

தான் வாழ்க்கையில் படித்து முன்னேறியதையும் அதற்கு உறு துணையாக இருந்த அந்த பள்ளி ‘ஆசிரியர் ‘மதன்’ தன் மாமா என்பதையும் கூறினான். ‘‘குழந்தைகளே ‘எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய் பொருள் காண்பது அறிவு’ எதையும் ஆராய்ந்து உண்மையை உணர வேண்டும். வாழ்க்கையில் முன்னேற கல்வி அவசியம்’’ என்று அறிவுரை கூறினார்.

தான் வாழ்ந்த வீட்டை பார்க்கச் சென்றான். மனக் கண்ணில் பழைய நினைவுகள் நிழலாடியது.

கால சக்கரம் பின்னோக்கி சுழன்று ‘இருபது வருடங்களுக்கு‘ முன் சென்று நின்றது.

பாலன் பாடசாலைக்கு கிளம்பினான். அவன் அம்மா சாந்தி, சாந்தமானவள். யாரையும் கடிந்து கொள்ள மாட்டாள்.

பாலனின் அப்பா, ராமன் குடித்தே குடல் வெந்து இறந்து விட்டான். அவன் சாந்தியிடம் விட்டுச் சென்றது மகன் ‘பாலனை’ மட்டும் தான். சாந்தி சிறு வயதினள். பார்க்கவும் அழகானவள்.

இந்த பொல்லாத உலகம் சாந்தியை பாடாய் படுத்தியது. எங்கு வேலைக்குச் சென்றாலும், அவளை பல ஆண்கள் தவறான கண்ணோட்டத்தில் தான் பார்த்தனர்.

ஒரு நாள் பள்ளிக்கு புறப்பட கால தாமதம் ஆனது. பாலன் “நான் போக மாட்டேன். வாத்தியார் அடிப்பார்.’’ என்றான். சாந்தி ‘‘நானே உன்னை வாத்தியாரிடம் அழைத்துச் செல்கிறேன்’’ என்றாள்.

வகுப்பாசிரியர் சாந்தியிடம் நீண்ட நேரம் பேசினார். அதில் இருந்து ஆசிரியர் ‘மதன்’, சாந்தி வீட்டிற்கு மதியம் வர ஆரம்பித்தார்.

நாட்கள் நகர்ந்தன. சாந்தி வெளியில் எங்கும் வேலைக்கு செல்லவில்லை. பாலனுக்கும் நல்ல உணவு கிடைத்தது. மகிழ்ச்சியாக இருந்தான். எப்பொழுதும் அவன் அம்மா ‘சாந்தி ‘, யாரிடமும் வம்பு பேசியதில்லை. பாலனுக்கு அம்மாவை ரொம்ப பிடிக்கும்.

வழக்கம் போல் பாலன் பாடசாலைக்கு தயாரானான். பக்கத்து வீட்டு ராணி , “பாலா....! இங்க வா...! இந்தா பழம் சாப்பிடு‘‘ என்று கொடுத்தாள். “எனக்கு வேண்டாம். அம்மாவே வாங்கி தருவாங்க’’ என்று மறுத்தான் பாலா.

“ஆமாம்...! உங்கம்மா வாத்தியார் வீட்டிற்கு வரும் வரை வாங்கி தருவாள்’’ என்று ஏளனமாக கூறியது அந்த பிஞ்சு மனதில் வேதனை அளித்தது. ‘‘ஒரு நாள் உன்னை விட்டுட்டு அந்த வாத்தியாரோட

உன் அம்மா போயிடுவா'' என்று மேலும் கூறினாள்.

மதியம் பள்ளியில் இருந்து சாப்பாடு டப்பாவையும் எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். மனம் முழுவதும் அம்மா மேல் வெறுப்பு. அந்த ஆசிரியர் தன் அம்மாவை தன்னிடம் இருந்து பிரிக்கும் முன் அவரை 'தீர்த்து' விட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

வீட்டிற்கு வந்தவன் தயங்கி வெளியே திண்ணையில் உட்கார்ந்தான். உள்ளே வாத்தியார் பேசுவது கேட்டது. "சாந்தி....!" என்று அழைத்தார். "அண்ணே...! இதோ வரேன்...!'' என்றாள். அந்த 'அண்ணே' வார்த்தை அம்மா உள்ளத்தில் இருந்து வந்ததை பாலன் உணர்ந்தான்.

ஆசிரியர் மதன் ''அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் நம்மை 'தப்பா' பேசறாங்க. தினமும் பக்கத்து வீட்டு அம்மா எதையாவது சொல்லுது'' என்றார். "அது பையனுக்கு தெரிந்தால் அவன் மனதளவில் பாதிக்கப் படுவான். அதனால் அவனுடன் பேசி நான் உன்னை என் தங்கையாக 'சட்டப்படி' தத்து எடுத்துக் கொண்டதை புரிய வைக்கனும் " என்றார்.

கேட்டுக் கொண்டே வந்த பாலன் ''சார்...! என்னை மன்னிச்சிடுங்க...! பக்கத்து வீட்டு அக்கா சொன்னதும் எனக்கும் மனது வேதனையாச்சு. இப்ப எனக்கு புரிந்தது'' என்று மகிழ்ச்சியுடன் ஆசிரியரின் காலில் விழுந்தான்.

''பாலன், நான் இந்த வேலையை விடப் போறேன். மத்திய அரசில எனக்கு வேலை கிடைச்சிருக்கு. எந்த ஊரில வேலைனு தெரியல. நீ தயாரா இரு. கடிதம் வந்ததும் நாம் எல்லோரும் அங்கே செல்லலாம் '' என்று அன்புடன் கூறினார். "நாம் நமக்காக வாழ வேண்டும். யார் எதைக் கூறினாலும் உண்மையை ஆராய்ந்து தெளிவு பெறனும்''

அதைக் கேட்ட பாலன் ''சரி மாமா'' என்றான். 'மாமா' என்ற வார்த்தை அவரை மகிழ்வித்தது. தன் தவறை உணர்ந்த பாலன் அவரது புத்திமதிகளை வாழ்க்கையின் லட்சியமாக கொண்டான்.

அவர் சாந்திக்கு நல்ல அண்ணாகவும், பாலனுக்கு உற்ற தோழனாகவும், ஆசிரியராகவும் இருந்தார். அவனை நன்கு படிக்க வைத்தார். அவரால் இன்று காவல் துறை உயர் அதிகாரியாக இருக்கிறான்.

நினைவலைகளில் மூழ்கியவனுக்கு சிறு பிராயத்தில் விளையாடிய வீட்டின் அருகில் வந்ததும் நினைவலைகள் நிகழ் காலத்தை தொட்டது.

பக்கத்து வீட்டு ராணி அக்காவின் பேரன், தன் பாட்டியிடம் "பாட்டி...! இன்னைக்கு எங்க பள்ளிக்கூடத்தில் 'பாலன் ' என்ற காவல் துறை அதிகாரி வந்து பேசினார்'' என்று சொல்லும் போதே பாலன் உள்ளே வந்தான்.

''அக்கா....! நீங்க யாரை மோசமாக பேசினீங்களோ அந்த சாந்தியின் பையன் தான். உங்க வார்த்தையை கேட்டு நான் பாதை மாறி இருந்தா இன்று இந்த நிலைக்கு உயர்ந்திருக்க முடியாது.'' என்று வருத்தத்துடன் கூறினான்.

''அந்த ஆசிரியர் என் அம்மாவை தங்கையாக ஏற்றுக் கொண்டு என்னையும் படிக்க வைத்தார். '' என்று தொடர்ந்தான். "இனியாவது குழந்தைகள் மனதில் நஞ்சை விதைக்காதீர்கள். நமக்கு தெரியாத ஒன்றை புறம் பேசாதீர்கள்'' என்று கூறிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

இருபது வருடங்களாக இருந்த 'மனதின் வலி' குறைந்ததாக எண்ணினான்.



# திக்... திக்... திருடன்

லீலா லோகநாதன்



இரவு பதினொரு மணி... திடீரென ஏதோ உள்ளுணர்வு வந்தார் போல் முழிப்பு வந்தது.

ஆனாலும் கண்ணை திறக்காமல் படுத்திருந்தேன் கட்டிலில்... வாசல் பக்கமாக யாரோ நடமாடுவது போல் மெல்லிய சத்தம் கேட்டது. இப்போது என் காதுகளை கூர்மையாக்கிக்கொண்டு கவனிக்க ஆரம்பித்தேன்.

வீட்டில்வயதானமாமனார்,மாமியார் இருவரும் மகள் வீட்டிற்கு சென்று இரண்டு நாட்கள் ஆனது. என் மகளும் மருமகனும் சென்னையில் வேலையில் உள்ளதால்... தம்பி ஹரீஷ்க்கும் சென்னையிலே வேலை வாங்கி தந்து தங்களுடனேயே தங்க வைத்துக்கொண்டாள் என் மகள் அர்ச்சனா.

கணவரும் காலையில் நெருங்கிய நண்பரின் மகள் திருமணத்திற்கு சென்றுவிட்டதால் நான் மட்டும் வீட்டில் இன்று தனிமையில்.

எப்போதும் தனிமையில் இருந்ததில்லை... யாராவது வீட்டில் கட்டாயம் இருப்பார்கள். இன்று தான் முதல் முறையாக தனியாக இருக்க வேண்டிய அவசியமாகி விட்டது. தனியாக இருக்க பயமா தான் உள்ளது. ஆனால் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக்கொண்டேன்.

வாசலில் நடமாடிக்கொண்டிருந்த காலடி சத்தம் மெல்ல இப்போது இன்னும் அருகாமையில் கேட்க ஆரம்பித்தது. என் இதயதுடிப்பும் அதிகமாக ஆரம்பித்தது. இதயம்துடிக்கும்சத்தம்வெளியேகேட்குமோ என எண்ணுமளவிற்கு கேட்டது.

என்கணவர்ஊருக்குகிளம்பும்போது திரும்ப திரும்ப சொன்னார். “கவனமாக இரு ஆனந்தி... தினம் செய்தித்தாளில் ஒரு திருட்டு செய்தி வந்தபடியே இருக்கு... கவனமா இரு” என்றார். கடைசியில் அது இன்று என் வீட்டிலேயே நிகழப்போகுதா என நினைத்து நெஞ்சம் படபடத்தது.

அக்கம்பக்கத்து வீட்டார்... இங்கே திருடு போனது... அங்கே திருடு போனது என கூறும்போதெல்லாம் நம்பவில்லை நான். ஆனால் இன்று என் வீட்டிலேயே நடக்கப்போவதை நினைத்து மனதின் பயம் கூடியது.

இப்போது நான் படுத்திருக்கும் அறையின் கதவு லேசாக திறக்கும் சத்தம் கேட்டது. அய்யோ... இங்கேயே வந்து விட்டானா திருடன்?... என பயத்தில் வேர்த்தது உடம்பு.

உடனே அந்த காலடி சத்தம் சமையலறை நோக்கி நகர்ந்தது. படுக்கையறையும்சமையலறையும்ஒட்டினார்போல் இருக்கும் எங்கள் வீட்டில்... இரண்டிற்கும் ஒருவழி தான். படுக்கையறையில் நுழைந்து சமைய லறைக்குள் போவதான அமைப்பு எங்கள் வீடு.

இப்போது சமையலறையில் ஏதோ தேடுவது போல் சத்தம் கேட்டது. என் மனசு ரயில் பெட்டியின் சத்தம் போல் தடக்... தடக்... என சத்தமிட்டது.

பதற்றத்தில் எந்த யோசனையும் தோன்றாமல் மூளையும் மக்கர் பண்ண ஆரம்பித்தது.

கணவர்சொன்னது ஞாபகம்வந்தது. “படுக்கும் போது டார்ச்லைட் பக்கத்தில்

வச்சிக்க.. மொபைல் பக்கத்துல வச்சிகிட்டு தூங்கு... யாராவது காலிங்பெல் அடிச்சா... யார்னு ஒருதடவைக்கு இரண்டுமுறை தெளிவா குரல்கேட்டுட்டு கதவு திற” என சொன்னது. நானும் கிண்டலாக... ஆமா வர்ற திருடன் காலிங்பெல் அடிச்சிட்டா வருவான் என கேலி செய்தது நினைவு வந்தது.

ஆமா... டார்ச்லைட் இருக்கில்ல பக்கத்தில தான். எடுத்து போயி அவன் தலைமேலஓங்கிஒருஅடிபோடுவோமா?... என தோன்றியது. இல்லைனா போன் பண்ணிஅக்கம்பக்கம்வீட்லயாரையாவது உதவிக்கு கூப்பிடலாமா என பலவாறு யோசித்தேன். இல்லை... அது சரிப்படாது.

திருடன்... திருடன்... என சத்தம் போடலாமா?... என நினைச்சேன். நாம சத்தம் போட்டு கத்தி... அக்கம் பக்கம் இருக்கறவங்க வர்ற வரை நாம உயிரோட இருக்கனுமே... அவன் கையில ஏதாவது கத்தி வச்சிருந்து நம்மள கொன்னுட்டா... என மனது பலவாறு யோசனை பண்ண ஆரம்பித்தது.

கடைசில... இதெல்லாம் சரிப் படாது... நாமளே மனசில தைரியத்தை வரவழைச்சிக்கிட்டு ஏதாவது செய்வோம் என... டார்ச்லைட்ட கையில எடுத்துகிட்டு மெதுவா கட்டிலிலிருந்து கீழே இறங்கி னேன். இப்போது சமையலறையில் பாத்திரம் ஏதோ கீழே விழும் சத்தம் வேகமாக கேட்டது.

இது தான் சரியான சந்தர்ப்பம் என டார்ச்லைட்டை எடுத்துக் கொண்டு சமையலறை நோக்கி ஓடினேன்... வெளிச்சம் அடித்துக்கொண்டு லைட்டை தலைக்கு மேல் தூக்கிக்கொண்டே ஓங்கி தலையில் போடலாம் என ஓட.....

வெளிச்சத்தைப் பார்த்ததும் ஓட ஆரம்பித்தது... மியாவ்... மியாவ்... என பூனை.

அப்பாடா... நல்லவேளை பால் பாத்திரம் பிரிட்ஜ்க்குள்ள இருக்கு என மனசு நிம்மதியானது...

மீண்டும் கட்டிலில் படுத்து தூங்க ஆரம்பித்தாள் ஆனந்தி ■

# பயிரை மேயும் வேலி

பூனையை விரட்டும்
எலிகளின் காலமிது
பானையை நசுக்கும்
சம்மட்டியும் உடையுது

குஞ்சுகள் மிதித்தே
கோழியும் முடமாகுது
பிஞ்சும் வெம்பிப்
பழமென ஆகுது

உண்மையை வென்று
உயருது பொய்யும்
விண்ணையும் கூறுபோட
விசமிகள் கையும்

மலையை உடைத்து
மகிழ்வுந்து சாலையாம்
விலையைக் கொடுத்து
விவசாயபூமியில் ஆலையாம்

வாய்க்காலைத் தூர்த்து
வானுயர மாளிகை
வாய்களை அடைத்து
வசதியானவர்கள் ஆளுகை

கரையோரக் குடிசைகள்
காணாமல் போனது
கரைவேட்டிக் காரர்களும்
கரையும் வசமானது

ஊடகப் பிரட்டால்
உயரும் கூட்டம்
ஊரையடித்து உலையில்
போடும் திட்டம்

உத்தமர் போல
ஊரில் வேசம்
சத்தமின்றி நாளும்
செய்கிறான் மோசம்

பயிரை மேயும்
வேலிகள் இன்று
வயிற்றில் அடித்து
கொழுக்கிறான் தின்று

வாக்குக்கு கைகள்நீள
வருமே இச்சூழல்
நாக்குகள் உண்மைபேச
நாளும் இனிமைக்குழல்

கவிஞர் அ. மாப்பிள்ளை ராவுத்தர்

# தமிழன்னையை வணங்குவோம் !

அன்னைத் தமிழே - உன்னைப் பாடும் அரும்பணியொன்றே போதும் !!
என்னை நன்றாய் அன்னை படைத்தது இதற்கென என்றே ஆகும் !!
பொங்கி வழிந்திடும் கற்பனையூற்று தாயே உன்னால் சுரக்கிறது !!
மங்கல வாழ்வும் - மனையொடு செல்வமும் தாயே! உன்னால் கிடைக்கிறது !!!

ஆயிரமாயிரம் ஆண்டினைக் கடந்தும் இளமை மாறாதிருக்கின்றாள் !!
காவிய மாலைகள் தினமும் சூடி கன்னித் தமிழ் மகள் சிரிக்கின்றாள் !!
செம்மொழி யென்னும் மகுடம் ஏந்தி செகத்தினை அவளே ஆளுகிறாள் !!
செந்நாப் புலவர் நாவிலமர்ந்து  கதையில் கவிதையில் வாழுகிறாள் !!!!

அயலார் மொழியை பேசித் திரிவது பெருமையென்றே நினைக்கின்றார் !!
சுய நலத்தாலே மொழியின் புகழை ஒரு சில தமிழர் மறக்கின்றார் !!
இனத்தை மொழியைப் பெரிதாய் மதிக்கும் தமிழர் கூட்டம் திரளட்டும் !!
அன்னை மொழியே உலகை ஆளும் அந்நாள் நாளை மலரட்டும் !!!!



கவிஞர் ரத்தினபாரதி
கோவை



# மூன்றாம் பாலினம்

## பொலிகையூர்க் கோகிலா

எனதுடல் வேறே  எனதுளம் வேறே
எண்ணமோ இயல்பிலும் வேறே !
கனவினில் ஆடிக் கல்வியைத் தேடக்
கடுகதி மாற்றமென் உடலில்..
உணர்த்திய குழப்பம் உறங்கலைப் பறிக்க
உளவியற் சிதறலின் ஏக்கம்..
மனத்தினில் வெடிக்கும் எரிமலை ஒன்றால்
மனையிலே தொடங்குமோர் எதிர்ப்பு..!
.
செல்வனும் நானோ செல்வியும் நானோ
செல்லிடம் ஏற்குமோ என்னை..
கல்வியில் மேன்மைக் கேள்வியில்  பணத்தில்
கண்டவை அனைத்துமே வீணோ..!
பல்லினை இளித்துப் புறம்சொலி  நீயோர்
பரம்பரை புகழிலே கேடு..
கல்லினை எறிவர் காத்திடும் குடும்பம்
கலையுமே அன்றுடன் கனவு.!.
.
ஆண்என வந்த அழகிய மகவு
அழகுடன் நளினமாய் நடக்க..
ஈன்றவர் நிலையோ இருதலைக் கொள்ளி
எறும்பென மாறுமே அன்று..!
காண்பவர் நகைக்கக் கண்களால் முறைக்கக்
கலங்குமே பெற்றவர் சித்தம்..!
தூண்என இருந்த உறவினர் உறுதி
துகளெனப் போய்விடும் தொலைந்து..!!

இறைவனின் பிழையோ! இயற்கையின் பிறழ்வோ!
ஈன்றவர் பரம்பரை விளைவோ.!
குறையுடன் பிறந்த பாலினம் எங்கள்
கூற்றுகள் சபையிலே எழுமோ..!
நிறைவுடன் வாழும் நிம்மதி தேடி
நித்திலம் காணவே பிறந்தோம்..!
முறையிட நினைத்து முன்றலில் வந்தால்
முகத்தினைச் சுழிப்பதும் ஏனோ..!
.
இயல்பிலே நாங்கள் இப்படித் தானே
இதுவொரு இயற்கையின் நியதி..!
கயல்விழி தீட்டிக் கைவளை பூட்டிக்
கட்டிடும் புடவையில் எங்கள்..
நியத்தினைத் தேடி நிலைக்கவே நினைத்தோம்
நீசமோ எங்களின் செயல்கள்..!
உயர்ந்திடும் எண்ணம் எமக்கென உண்டு
உலகினோர் புரிந்திடல் வேண்டும்..!
.
பிறப்பிலே மாறி முரண்நகை ஆனோம்!
பெண்மையை மறந்துமே வாழும்..
குறையிலா நம்பி என்றுமே ஆனோம்
கோபுரம் நாமென நின்றோம்..!
இறந்திடும் வரையில் எங்களைத் தேடி
எதுவுமே இல்லையென் றானோம்..!
நெறிப்படி  ஏற்பீர் மூன்றெனும் பாலோர்
நிலைத்திடும் உறவுகள் என்றே..!

# திருடப்பட்ட நாட்கள்...!



**– மரீனா இல்யாஸ் ஷாபீ**
நியூ ஸிலாந்து

என் சகோதரி புது வீட்டுக்கு குடி வந்த பின்பு இன்று தான் முதன் முதலில் நான் அவர் வீட்டுக்கு வந்திருக்கிறேன். அதனால் அவர் என்னை அழைத்துச் சென்று வீடு முழுவதும் சுற்றிக் காட்டிய படியே "வீடு நன்றாக இருக்கிறதா?" என்று கேட்கிறார். எனக்கு சட்டென்று அவரின் பழைய வீடு ஞாபகத்துக்கு வந்தது. அந்த வீடு இந்த புதிய வீட்டைப் போல் பிரமாண்டமாக இருக்கவில்லை. ஆனால் அந்த வீட்டை எனக்கு மிகவும் பிடிக்கும். அந்தப் பழைய வீட்டைச் சுற்றி ஒரு சிறிய தோட்டம் இருந்தது. பாடசாலை விடுமுறை நாட்களில் நான் என் சகோதரி வீட்டில் தங்க வருவேன். அப்போதெல்லாம் காலையில் கண்விழித்ததும் மாம்பழம் பொறுக்குவதற்காக தோட்டத்துக்குப் போய் விடுவேன். இந்த வீட்டில் அழகிய பூஞ்செடிகள் இருந்தன. ஆனால் பழ மரங்கள் ஒன்றுகூட இல்லை என்பது குறையாகத் தெரிந்தது.

கடைசியாக நான் பத்தாம் வகுப்பில் படித்து, பரீட்சை எழுதி விட்டு பெறு பேற்றுக்காக காத்திருந்த நிலையில் என் சகோதரி வீட்டில் ஆறு மாதங்கள் தங்கியிருந்தேன். என் சகோதரியின் குழந்தை தன்வீர் தன் மழலை மொழியில் என்னை மயக்கி வைத்து இருந்தான். அவனுக்கு கதை சொல்லியபடியே உணவு ஊட்டுவது, தூங்க வைப்பது எல்லாமே நான்தான். அப்போது அவனுக்கு நான்கு வயது.

அவனை 'மொன்டசூரி' க்கு அனுப்பு வது என்று எனது சகோதரி தீர்மானித்த போது அவரது வீட்டுக்குப் பின்னால் இருந்த கிறிஸ்தவ தேவாலயத்தில் நடத்தப்படும் 'மொன்டசூரி' க்கு அனுப்புவதையே விரும்பினார். வீட்டுத் தோட்டத்தை எட்டிக் கடந்தால் தேவாலயம் என்பது அவருக்கு மிகவும் சௌகரியமாக இருந்தது. என் மருமகன் தன்வீரை தினமும் 'மொன்டசூரி'க்கு அழைத்துச் செல்லும் பொறுப்பை நானே ஏற்றுக் கொண்டேன். முதல் நாள் அவனைக் அழைத்துச் சென்று 'மொன்டசூரி' யில் விட்டு விட்டு வரும்போது அவன் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணியதால் நானும் அங்கேயே இருந்து அவனை சமாதானப் படுத்தினேன். அப்போதுதான் எனக்கு' ஃபாதர் 'பிரான்சிஸின் அறிமுகம் கிடைத்தது.

ஒருதந்தையின் பரிவுடன் என்னுடன் உறவாடினார். ஃபாதரின் நகைச்சுவை உணர்வு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. தன்வீர் 'மொன்டசூரி' முடிந்து வரும்வரை நான் அந்த தேவாலயத்தின் 'வராண்டா'வில் உட்கார்ந்து ஏதாவது ஒரு புத்தகம் வாசித்துக் கொண்டிருப்பேன். இதை அவதானித்த ஃபாதர் வாசிப்பில் எனக்கு இருந்த மோகத்தை தெரிந்து கொண்டு நல்ல புத்தகங்களை அறிமுகப்படுத்தினார். பிறகு ஒவ்வொரு சந்திப்பிலும் புத்தகங்கள் பற்றி பேசினோம்.

நாளடைவில் எங்கள் உறவில் ஓர் ஆத்மார்த்தமான நெருக்கம் உண்டானது. ஃபாதரின் அறிவுக் கூர்மை, அவரின் அனுபவ முதிர்ச்சி, அவரின் நகைச்சுவை கலந்த பேச்சு, அவரின் கண்ணியமான நடத்தை காரணமாக எனக்கு அவர் மீதிருந்த மரியாதை அதிகரித்துக் கொண்டே வந்தது. புத்தகம் பற்றி பேசத் தொடங்கி, பிறகு அன்றாட வாழ்க்கை பற்றியும் அலசத் தொடங்கினோம். 'ஃபாதர்'ரின் உதவியாளர் ஓர் ஆண். அவனது சமையலை சாப்பிட்டு நாக்கு மரத்து விட்டது என்று பேச்சுவாக்கில் ஒருநாள் ஃபாதர் சொன்னார். கேட்பதற்கு கவலையாக இருந்தது.

ஃபாதரின் சாப்பாட்டு விடயம் பற்றி வீட்டுக்கு வந்ததும் எனது சகோதரியிடம் கூறிவிட்டேன். அன்று தொடக்கம் எனது சகோதரி பாதருக்கு விதம் விதமான உணவு வகைகள் செய்து நான் தன்வீரை 'மொன்டசூரி' க்கு அழைத்துச் செல்லும் போது பொதி செய்து கொடுத்தனுப்புவார். முதலில் ஃபாதர் தயக்கம் காட்டினார். பின்னர் என் வற்புறுத்தல் காரணமாக ஏற்றுக் கொண்டார். என் சகோதரியின் சமையல் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. இதனால் எங்கள் உறவு நெருக்கமாகி சிலவேளை என் சகோதரி வீட்டுக்கும் அவர் வந்து போகத் தொடங்கினார். அவர் வீட்டுக்கு வரும்போது மறக்காமல் தன்வீருக்கு இனிப்பு வாங்கி வருவார். ஒருநாள் அவர் என் என் சகோதரியிடம் பேசிக் கொண்டிருந்தபோது ''சில வேளை இவள் தலையில் ஓங்கிக் குட்ட வேண்டும் போலிருக்கும். இவளிடம் துடுக்குத் தனம் அதிகம்...'' என்று என்னைக் காட்டி என் சகோதரியிடம் சொல்லிச் சிரித்தார். அதன் பிறகு அவருடன் விவாதம் செய்யும் அளவுக்கு எனக்கு தைரியம் வந்துவிட்டது.

நாளடைவில் அந்த தேவாலயத்துக்கு வரும் மக்களிடமும் என்னை அறிமுகப் படுத்தினார். "கெட்டிக்காரி, ஆனால் வாயாடி யும் கூட. இவளிடம் கவனமாகப் பேசுங்கள்..." என்று கேலி செய்வார். அந்த தேவாலயத்திற்கு வரும் அத்தனை பெரியவர்களும் என்னை "மகள்..." என்று தான் அழைப்பார்கள். 'ஃபாதர்' மட்டும் எனக்கு பெனாசீர் பூட்டோ என்று பட்டப்பெயர் வைத்து இருந்தார். அப்போது பாகிஸ்தானின் பிரதம மந்திரியாக இருந்த பெனாசீர் பூட்டோ அன்று சர்வதேச ரீதியில் பேசப்படும் ஒரு பெண்ணாக இருந்தார். ''ஒருநாள் நீயும் பேசப்படும் ஒரு பெண்ணாக மாறுவாய். அப்போது என்னை மறந்து விடாதே...'' என்று அடிக்கடி கேலி செய்வார்.

வருட இறுதியில் மொன்டசூரி' யில் நடந்த கலைவிழா நிகழ்ச்சி ஏற்பாடுகளில் நானும் கலந்து கொண்டு முடிந்த உதவி களை செய்தேன். அப்போது ஒரு தாய் என்னை அணுகி, வினோத உடைப் போட்டிக்கு தன் மகளுக்கு ஒரு முஸ்லிம் பெண்ணைப் போல ஆடை அணிவிக்கும் படி கேட்டுக் கொண்டார். நான் அவளுக்கு ஒரு சுடிதார் வாங்கி அணிவித்து, முக்கா டிட்டு, கையில் மருதாணி வைத்து போட்டிக்கு அனுப்பி வைத்தேன். அந்த சிறுமி போட்டியில் முதலிடம் பெற்றபோது அந்த தாயுடன் சேர்ந்து 'ஃபாதரும் என்னை மிகவும் பாராட்டினார். ஆனால், நான் வெளிநாட்டில் குடியேறிய பின்பு ஃபாதரை சந்திக்கவே இல்லை...

"நீ விடுமுறையில் நாட்டுக்கு வரும் போது என் வீட்டில் தான் தங்க வேண்டும். உனக்காக இந்த வீட்டில் தனியறை வைத்திருக்கிறேன். இந்த இடத்தில் உன் னோட புத்தக அலமாரியை வைத்துக் கொள்ளலாம்..." என் சகோதரியின் குரல் கேட்டதும் சிந்தனை கலைந்தது. அவ்வளவு நேரமும் ஃபாதரைப் பற்றிய சிந்தனையில் இருந்ததால் அவர் இப்போது எப்படி இருக்கிறார் என்று அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் மேலிட்டது எனக்கு.

"தாத்தா... ஃபாதர் பிரான்சிஸ் எப்படி இருக்காரு? அவரப் போய் பார்த்துட்டு வருவோமா?'' என்றேன். என் சகோதரி தலையை தொங்கப் போட்டுக் கொண்டு சொல்கிறார், ''பாதர் செத்துப் போயிட்டாரு, நீ ஊருக்கு வந்த பிறகு சொல்லலாம் என்று பேசாமல் இருந்தேன்...'' அதைக் கேட்டதும் நான் ஆடிப் போனேன்.

அந்த தேவாலயத்தின் பின்னால் இருக்கும் மயானத்தில் அவர் அடக்கப்பட்டு இருப்பதாக அறிந்ததும் அவருக்கு இறுதி

மரியாதை செலுத்த வேண்டும் என்று ஆசைப்பட் டேன். அதனால் என் சகோதரி மகன் தன்வீரை அழைத்துக்கொண்டு அங்கு போனேன். அன்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் அங்கு நிறைய மக்கள் இருந்தனர். அந்த தேவாலய வளாகத்துக்குள் நாங்கள் நுழைந்ததும் எல்லோரும் எங்களை சந்தேகத்துடன் பார்த்தார்கள்; விசாரித் தார்கள்...! என்னை அறிமுகப் படுத்தி விட்டு, வந்த காரணத்தை விளக்கினேன். ஆனால், எவ்வளவு கெஞ்சியும் ஃபாதர் பிரான்சிசின் கல்லறையைக் காண அனுமதி கிடைக்கவில்லை...

கொழும்பில் நடந்த 'ஈஸ்டர்' குண்டுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் நிலைமை இப்படித் தலைகீழாக மாறிவிட்டது என்று விளக்கிய படியே என்னை வெளியே அழைத்து வருகிறார் தன்வீர். இதோ இந்த வராண்டாவில் தான் நான் புத்தகங்கள் வாசித்தேன்;இங்கேதான்ஃபாதர்பிரான்சிஸ் உடன் புத்தகங்கள் பற்றி அலசினேன்; இந்த தேவாலயத்துக்கு வந்த மக்கள் தான் என்னை மகளே என்று அன்போடு அரவணைத்தனர். சில வருடங்களுக்குள் அவர்களுக்கு நான் அன்னியமாகி விட்டேனா...? வாய்விட்டு அழ வேண்டும் போல இருந்தது எனக்கு. அந்த குண்டுதாரியை மனதுக்குள் திட்டித் தீர்க்கிறேன் ...

இனியும் இங்கே நின்று கொண்டி ருந்தால் எங்கள் மீது யாருக்கும் சந்தேகம் வந்துவிடும் என்ற பதட்டத்தில் தன்வீர் அவசரமாக என்னை வெளியில் அழைத்து வருகிறான்.

என் கண்களில் இருந்து உருண் டோடிய கண்ணீர் துளிகளினூடாக அந்த தேவாலயத்தை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டு பெருமூச்சோடு நடக்கிறேன்...!

# பௌர்ணமி நிலவு

முத்தாய்ப்பாய் நிலவொளியில் நடக்கின்ற இனிமையிலே
கற்பனைச் சிறகுகள் காவியம் படைத்திட
வருகின்றாள் அம்புலியும் பால்மழை பொழிந்திட
கவிஞனின் கரங்கள் சந்தங்கள் படைத்திடுதே

எத்தனை குளுமையடா எழிலான ஒளியினிலே
அழைக்கின்றாய் வாவென்று அற்புதங்கள் காட்டிடவே
துள்ளுகின்ற உள்ளத்தில் துயரங்கள் அழிந்திடவே
அள்ளுகின்றாய் நெஞ்சத்தை அரிதாரம் இல்லாமல்

உரைக்கின்ற மொழியினிலே உன்னதமாய் வேதங்கள்
பளிங்காகத் தெரிகிறதே பாரினையும் அறிவதற்கு
பகலவனின் ஒளிக்கீற்றால் பங்கயமாய்ச் சிவந்திட்டு
மெல்லவே தளும்புகிறாய்ப் பௌர்ணமியின் சாகசத்தால்

கீற்றாகப் பிறந்திட்டு மெல்லவே வளர்கின்றாய்
மூவிரண்டு நாட்களிலே மலராக மலர்கின்றாய்
முயற்சிகளில் தளராது வளர்ந்தாலும் தேய்ந்தாலும்
காவியத்தின் நாயகியாய்க் களிப்புடன் சிரிக்கின்றாய்.



**புவனா பிரகாஷ்**
கோவை

## தன்நெஞ்சம் "தமிழ்நெஞ்சம்" எனும்நெஞ்சன் வாழ்க!

### கவித்திலகம் வெற்றிப்பேரொளி

பொன்னெஞ்சம் பூநெஞ்சம் "தமிழ்நெஞ்சம்"  வாழ்க!
தன்நெஞ்சம் தமிழ்நெஞ்சம் எனும்நெஞ்சன் வாழ்க!
வன்னெஞ்சம் அறியாத மென்னெஞ்சம் வாழ்க!
உன்நெஞ்சம் என்நெஞ்சம் ஒன்றாகி வாழ்க!

ஆண்டென்றே அடியெடுத்தே ஐம்பதுவும் ஆச்சு!
தூண்டிபலர் எழுத்தெழுதும் களமென்றே பேச்சு!
மூண்டெழுந்த "தமிழ்நெஞ்சம்" தொடருமதன் வீச்சு!
ஈண்டென்றும் தமிழ்நெஞ்சம் தலைப்பெருமை ஓச்சு!

இதழ்வாழ்வில் பொன்விழா இனிமைதரு திருவிழா!
முத்தமிழர்  கவிஅமினின்  தமிழ்நெஞ்சப் பெருவிழா!
முதலென்றே முடிசூட்டி மொய்ம்புமிகும் ஒருவிழா!
சதமடிக்க வாழ்த்துகின்ற சாதனையின் நறுவிழா!



பொன்விழாவும் கண்டுமகிழ் காலமிது காலம்!
மின்விழாவின் ஒளிவெள்ளம்  பூணும்இதழ்க் கோலம்!
வெற்றி மிகு தமிழ்நெஞ்சம்  அமின்அவரின் நாளம்!
நன்றுதமிழ் வாழ்த்திசைத்துக் கொட்டுதுபார்  மேளம்!

தமிழ்நெஞ்சம் இதழ்கண்ட அமின்தோழர் வாழ்க!
தமிழ்நெஞ்சம் இதழெழுதும் படைப்பாளர் வாழ்க!
தமிழ்நெஞ்சம் பொன்விழா  தனைக்கடந்தும் வாழ்க!
தமிழ்நெஞ்சம் எல்லாமும் தமிழ்நெஞ்சம் ஆள்க!

---



## பொங்கல்

வெய்யோன் இன்றி வையகம் தன்னில்
உய்யாது உயிர்களென எய்தினார் அறிவினை
பெய்யும் மழைக்கும் பொலியும் நெல்லிற்கும்
செய்நன்றி பொங்கிச் செய்திட்டார் பண்டிகை
நெய்யொடு பாலும் நெல்லரிசிப் பொங்கலுமாய்
மெய்சிலிர்க்க வணங்கிடும் மேதினியில் நன்னாள்

**இரா இரத்தினகுமார்**

# மழையும் மங்கையும்



தாகமும் மோகமும்
    தன்னில் கலந்திட
வாரி யிறைத்திட்ட
    வான்மேக மாரியாக
பூமி வந்தாள்
    பெண்ணுருவில் கருவாக
ஆடிப்பாடி ஆர்ப்பரித்து
    அணைத்திட்டோம் மகளாக

முத்துமுத்துத் தூறலாக
    முத்தமழை பொழிந்திட்டாள்
பொய்கையில் தோன்றியவள்
    பூமணம் கமழ வந்தாள்
மக்கள்குறை தீர்ந்திடவே
    மண்மீது தவழ்ந்திட்டாள்
இட்ட அடி நோகாமல்
    எட்டு வைத்தாள் தரைமீது

நளினமிகு நங்கையவள்
    நல்லறமே கைக்கொண்டாள்
நானிலம் செழித்திருக்க
    நதியாக நடைபயின்றாள்
தடைகள்பல வந்தபோதும்
    தாயாக அணைத்து நின்றாள்
களங்கம் பல சொன்னபோதும்
    கலங்காது சேவை செய்தாள்

அன்னையாக தன்னைமாற்றி
    அகிலத்தைக் காத்திடுவாள்
பொன்னாக மின்னுவாள்
    பூமிக்கு அவதாரமாவாள்
வன்கொடுமை செய்திடினும்
    வலிமறந்து வாழுகிறாள்
வையகத்தோர் வாழ்த்திடுவோம்
    வழிகாட்டும் தெய்வமென்று...

    வஞ்சியரும்
    வான்மழையும் ஒன்றே...

## இரா. பேச்சியம்மாள்

கரிசல் கானம்

# தன்முனைக்கவிதைகள்

## வஃபீரா வஃபி

ஊடல் கொள்வதும்
காதலில் அழகுதான்
புரிந்துணர்வு இருந்தால்
நம்மை ஒன்று சேர்க்கும்

அருவமாய் அடரிருளில்
தவித்து இருந்தேன்
உருவம் தந்து
என் விடியலானாய்

தள்ளாத வயதிலும்
பேரன்புடன் இருக்கிறாய்
பார்த்த நொடியில்
காதல் இன்னும் கூடுதே

என்னுயிரின் இழைகளில்
தரித்து நிற்கிறாய்
உணர்விலும் நீயே கலந்திருக்க
இனி நீயின்றி நானில்லை

உன் ஆழ்ந்த அன்பு
என்னுள் அலை மோதும்
பொங்கும் புதுப் புனலாய்
என்றும் உன் நினைவுகள்

கறுப்பும் வெள்ளையுமாய்
இருந்தது என் உலகம்
நீ இணைந்து
வண்ணம் சேர்த்தாய்

காதல் வந்தால் அதை
தன்னிச்சையாய் விடுங்கள்
அது தன்னைத்தானே
கவிதையாய் செதுக்கிக் கொள்ளும்

நம் அன்பின் எல்லைகள்
விசாலமாகி விரிகின்றன
என்றும் இணைந்திருக்க
கிடைத்த வரமன்றோ அது

# ஹைக்கூ



**கவியாசகன்**
ஈழம்

●
நல்ல இதயங்கள்
நிறத்தையோ அழகையோ ஈர்ப்பதில்லை
பார்வையற்றவர் மனது

●
இலையுதிர் காற்று
சருகுகளோடு பறந்து வரும்
பல்லின இறகுகள்

●
நிசப்தமான வனம்
மூடுபனியில் வெளி வரும்
கிளைமான் கூட்டம்

●
கோடை தாமரைக்குளம்
காற்றில் சலசலக்கின்றன
தண்டுயர்ந்த இலைகள்

●
கடும் பசி
ஏழையின் குடிசையிலும் இருக்கிறது
அதே நிலவு

●
வெளிச்சத்தில் சுற்றும் நிழல்
குளக்கரையோரம் காண்கிறேன்
வட்டமிடும் பருந்து

●
சற்று பின்வாங்கி
முன்னோக்கியே பாய்கிறது
எய்யும் அம்பு

●
மீண்டும் திரும்ப
ஒருபோதும் திசை மறப்பதில்லை
சூரியகாந்தி பூக்கள்

●
கோடை இரவு
அமைதியாகவே நகர்கிறது
சலசலப்பற்ற நதி

●
மறையும் சூரியன்
சற்றுத் தாமதமாகிறது
இலையுதிர் இரவு

●
இருண்ட வானம்
நிறம் இழந்து போகிறது
நீல கடல்

●
இலையுதிர்கால காற்று
சருகுகளைக் குவித்து வைத்திருக்கிறது
குறுக்கே விழுந்தமரம்

●
உதிர்ந்த இலைகள்
சுத்தம் செய்து சேகரிக்கின்றன
குளத்தில் அலைகள்

●
இலையுதிர்கால விடியல்
சற்று முன்கூட்டியே மறைகின்றது
அதிகாலை பனித்துளி

●
மரங்களை அழித்தவன்
ஒருபோதும் அறிய வாய்ப்பில்லை
பறவைகளின் வலி

●
அழகான நகரம்
இன்றும் மனதில் பொக்கிஷமாய்
அன்றைய வசந்தகால வனம்

●
நீண்ட கோடை
ஆறும் வரை வைத்திருக்கிறேன்
எஞ்சிய தேநீர்

●
செதுக்கும் சிற்பி
புத்தனுக்கு பரிசளிக்கிறார்
சாந்தியுடன் கருணை

●
கவிஞரின் பயணம்
மேலும் தாமதமாக்கி விடுகிறது
வசந்தகால சாலை

●
உயிரிழந்த வண்டு
மெல்ல நகர்த்திச் செல்கின்றன
கொட்டும் மழைத்துளிகள்

# பொம்பள...

அ.முத்துவிஜயன்

இடுப்புல கைப் புள்ளயத் தூக்கிக் கிட்டு காய்கறி வாங்கவந்தவளப் பாத்து கடைக்காரர் ஆரு இது ஒம்பிள்ளை யான்னு கேட்டாரு. அதுக்கு அவசொன்னா அந்தப் பாக்கியமிருந்தா ஏன் நான் அரசமரத்தையும் புள்ளை யாரையும் சுத்திட்டுக்கெடக்கேன் வாச்சது அம்புட்டும் சாவியாக்கெடக்கு நானே சீவனத்துப்போய் செவனேன்னு கெடக்கேன் நீ வேற வகுத்தெரிச்சலக்கௌப்பாதய்யா அப்புறம் வாய்க்கு வந்தத சொல்லி ஏசிப்புடுவேன்னா.

அப்ப புள்ள யாருன்னு சொல்லி கதைய முடிக்கவேண்டியதுதான அதைச் சொல்லாம ஏன் இழுத்துட்டுக் கெடக்குறவன் னார்



இந்தாபாருய்யா ஈயத்தப்பாத்து இளிச்சதாம் எதுத்தாப்புல வந்த பித்தளைன்ற கதையா வுல்ல இருக்கு. அங்கயும் அதே கதைதான பாவம் நீயும்தான் கடையில மிஞ்சிற பாதாமும் பிஸ்த்தாவும் ஊறவைச் சித்தின்னுற. ஆனா அம்புட்டும் வெடிக்காத புஸ்வானமாத்தான கெடக்கு இதுல என்ன வெசாரிக்க வந்துட்ட அடுத்தவுக கதைன்னா ஆளாப்பறக்குறது தான் கதை எறவாரத்துல நாறிக்கெடக்கையிலனு சொன்னா..

அப்பவும் புள்ள யாருன்னு சொல்ல மாட்ட ஒன்னபூவந்தில கட்டிக் குடுத்து அஞ்சு வருசமாச்சு புள்ளகுட்டின்னு பேச்சக் காணோம் இப்ப பொறந்த ஊருக்கு வந்துருக்க அதான் நமக்குத்தெரியாம ஏதாச்சும் புள்ள கிள்ள பெத்துகித்து போட்டி யாக்கும்னு கேட்டேன்னார்

ஏன்யா இது என்ன ரகசியமா. வயிறு நெறையாம வாரிசு எப்புடிவரும். ஆனா வாரிசு இப்ப வந்துருச்சு ஆனா எனக்கில்ல. இது என் கொழுந்தன்னா சலிப்போட.

அவர் அதிர்ச்சியாயி என்னாது இது ஒன் கொழுந்தனா என்னாம்மா சொல்ற உன்புருசனுக்கு முப்பது வயசாகுது அவரோட ஆத்தாவுக்கு எப்புடியும் 50 இருக்கும் ஒன்னும் புரியலயேன்னார்

புரிஞ்சி என்னா பண்ணப்போற. நடக்க வேண்டியது நடந்து பொறக்க வேண்டியது பொறந்தாச்சு. சொத்தும் பத்தும் சோரம் போகாம ஒன்னுக்குள்ள ஒன்னா முடிஞ்சிபோச்சுன்னா

என்னாமா வெளக்கமா சொல்லி தொலைய வேண்டியதுதான. நான் தலைன்னா நீ வாலுங்குற நான் யாருன்னா

வாரிசுங்குற ஆனா உன் புள்ளயான்னா இல்லங்குற மண்ட கொழம்பி போகுது சீக்கிரமா சொல்லு இல்ல நடையக்கட்டு என் யாவாரம் பாதிக்குதுன்னு காட்டமா சொன்னார் கடுப்புல.

. . அங்க அவுகளுக்கு சொத்துபத்து எக்க சக்கம் அம்புட்டையும் ஆளுறதுக்கு வாரிசு வேணுமுன்னு அவரோட மகவழிப் பேத்திய மகனுக்கு கட்டிவைச்சாரு பூவந்தி கிராமத்துல. ஆனா அவனுக்கு வெண் குஸ்டம். ஒடம்பெல்லாம் அங்க அங்க வெள்ளையா இருந்துச்சு. வருசம் அஞ்சு ஆச்சு. ஆனா ஒன்னும் வாரிசு உருவாகுற வழியக்காணோம் . எல்லாரும் சாடமாடயா பேச ஆரம்பிச்சாக

இவமேல தப்புசொல்லி. மலடின்னு பட்டத்தைக்கட்டி வம்பு பேசுனாக. இவளும் பொறுத்துப்பாத்து ஒரு கட்டத்துல கடுப்பாயி சொல்லிப்புட்டா. அது ஆகுற காரியமில்ல. அதுக்கு வாய்ப்பு மில்லன்னு.

அப்ப இவளோட மாமனாரு ஒரு முடி வெடுத் தாரு. அவரோட மகனுக்கு இவளோட தங்கச் சிய ரெண்டாம் தாரமா கட்டிவைக்கிறதுன்னு. இவ குய்யோ மொறயோன்னு ஒப்பாரி வைச்சா. அப்ப அவரோட மாமனார் சொன்னாரு இது என்ன ஊர் ஒலகத்துல நடக்காத ஒன்னா. அக்கா தங்கச்சிய வாரிசுக்காகக் கட்டிக்கிறது நம்ம வழக்கத்துல இருக்குறது தானன்னு...

அதுக்கு இவசொன்னா அதுக்கு நான் ஒத்துக்கனுமே எனக்கு இஸ்ட்ட மில்லாத போது எப்புடி அவருக்கு ரெண்டாம் கலியாணம் பண்ணுவீகன்னா.

அதுக்கு அவர் சொன்னாரு கெடாய கேட்டுக்கிட்டு ஆரும் வெட்டுறதில்ல மாட்டக் கேட்டுக்குக் கிட்டு பாலு கறக்குறதுமில்ல. பொட்டப்புள்ளன்னா அடங்கிக்கெடக்கனும் அதுதான் குடும்பப் பொண்ணுக்கு அழகு அத விட்டுப்புட்டு பெரியவுக பேசுறப்ப குதிக்கி றதுல ஒன்னும் புரயோசன மில்லன் னார்.

அப்பத்தான்அவஅந்தகுண்டத்தூக்கிப் போட்டா. நான் இவருக்கு வாக்கப்பட்டதே வெட்டிக்கித்தான். நான் பொம்பளையா இருக்கேன் ஆனா அவர ஆம்பளையா இருக்கச்சொல்லமுடியுமா. முடியாது ஏன்னா அவர் அம்புட்டுத்தான். சாவிபோன கருது இதுக்கு மேல வெளக்கமா என்னால சொல்ல எயலாது. இம்புட்டு நாள் நான் பொறுத் துருந்ததே அதிகம். இன்னேரம் வேறவன்னா எவனையாவது இழுத்துக்கிட்டுப்போயிடுவா. நானின்றதுனால பொறுத்துக்கிட்டுக் கெடக் கேன். இதுல என் தங்கச்சிய வேற இந்த படுகுழில தள்ளனுமா. என் உசிரு போனாலும் நான் சம்மதிக்க மாட்டேன்னு தீர்மானமா சொன்னா....

அதுக்கு அவளோட மாமனார் சொன்னார் அப்ப சொத்துப்பத்தெல்லாம் வாரிசு இல்லாம எவனுக்கோ போறதா. இதுக்கு ஒரு வழி பண்ணுறேன்னு மீசைய முறுக்கிக்கிட்டார்.

அடுத்தவாரம் திடீருன்னு மகனுக்குப் பாத்த பொண்ண அவரே கலியாணம் பண்ணி வீட்டுக்குக்கூட்டிட்டு வந்துட்டார். அன்னிக்கிப் பூராம் வீடே எழவு விழுந்தமாதிரி

## ஈர நினைவுகள்

மாநிலமுழுதும்
மங்காத மழைப்பேச்சு
ஏரிகளின் கரைகளில்
எதிரொலிக்கின்றன

ஆறுகளின் பாதைகளோ
புதிய தடங்களைப்
பதிவிறக்கம் செய்கின்றன..

சாலைகளின் முதுகில்
வெள்ளசீற்றத்தை
வெள்ளோட்டமிடுகிறது

பயிர்களின் உயிர்களெல்லாம்
நீரமுத்தத்தில்
நிர் மூலமாகின.

காயாதநிலங்கள் மீது
ஓயாத நீர் சுரப்பிகள்.
.
அடாத மழையின்
விடாத நினைவுகள்.

– சோழபுரம் தாஹா.

இருந்துச்சு. இவ அழுக புதுசா வந்தவ அழுக ஊரு சனங்க எல்லாம் மூக்கு மேல வெரல வைக்க அது நடந்துபோச்சு. வந்தவளும் அழுது அடம் புடிச்சிப் பாத்தா.

ஆனா என்ன பண்ணி என்ன பிர யோசனம். அது ஆம்பளைக ராஜ்ஜியம். அங்க பொம்பளைக பேச்சு எடுபடாது. மொரட்டுத் தனமா நடக்கவேண்டியது எல்லாம் நடந்து போச்சு. ஆமா வந்தபொண்ணு அவளோட மாமனாரால புள்ளத்தாச்சியானா. ஆனா அவமொகத்துல ஒரு நா கூட அந்த சந்தோசம் தெரியல. என்னத்தையோ பறிகொடுத்தமாதிரி இருந்தா...

மாசம் பத்தாச்சு ஆம்பளைப்புள்ள பொறந்துச்சு. அதுதான் இவளுக்குக் கொழுந்தன் பொறந்தான். இவளுக்கே அது அசிங்கமா இருந்துச்சு.பாவம் அந்தப் பொண்ணு ஒரு நா வீட்டுல ஆருமில்லாதப்ப தூக்குல தொங்கிடுச்சு. ஆனா அது பெருசா வீட்டுல இருந்தவுகளை பாதிக்கல. அந்த பிள்ளைய மொத்த சொத்துக்கும் வாரிசுன்னு கொண்டாடுனாக. வந்தவளோட துக்கம் காத்துல போயிடுச்சு.

இவளுக்கு அந்தக்கொழந்தைய வளக்குற பொறுப்பு வந்து சேந்துடுச்சு. ஆனா இவ அந்தக்கொழந்தைய வஞ்ச கமில்லாம வளத்தா அவளுக்குள்ள இருந்த தாய்மை உணர்வு சொல்லிச்சி யாரோ செஞ்ச தப்புக்கு பாவம் இந்த பச்சப்புள்ள என்ன பண்ணும்.

ஆனா என்ன கேக்குறவுகளுக்குத் தான் பதில் சொல்லி மாளல.

வெளிய சொல்ல வெக்கம் உள்ளுக் குள்ள துக்கம்ன்ற கதையாப்போச்சு இவ பொழப்பு. ஆனா என்ன தனக்கு கெடைக்காத ஒரு பாக்கியம் இந்தக் கொழந்த மூலமா அவளுக்குக் கெடைச்சது. கொழுந்தன புள்ளையா வளக்குற பாக்கியம்.

அந்தப்புள்ள பொறந்து வருசம் திரும்புறதுக் குள்ள இவளோட மாமனாருக்குக் ஒரு கையும் காலும் விழுந்துபோச்சு. அவரும் படுத்துட்டாரு. ஆனா அவரகவனிக்க அவளோட புருசன் சொன்னப்ப அவ சொன்ன வார்த்தை அம்புட்டுத் திமிரோட ஒரு பொண்ணு வாழக்கையக் கெடுத்தாரில்ல. அனுபவிக்கட்டும் நீங்களும் பாத்துட்டுத் தடுக்கத் துப்பில்லாமத்தான இருந்தீங்க. நீங்களே உங்க அப்பாவப்பாத்துக்கங்க. என்னால அந்த கருமத்த தொடமாட்டேன்...

உங்க சொத்துக்கு வாரிசு வேணுமின்ன என்ன வேணுமானாலும் செய்யலாமுன்னு செஞ்சீக. அதோட பலன இப்ப அனுபவிங்க. உங்க மேல யாராவது எரக்கப்பட்டா அது மகா பாவம்னு தீர்மானமா சொல்லிட்டா...

அப்ப அவளோட புருசன் கேட்டான் நீயெல்லாம் ஒரு பொம்பளையான்னு. அவ சொன்னா அதத் திருப்பிக்கேக்க எம்புட்டு நேரமாகும் ஆனா நான் கேக்கமாட்டேன். என்கிட்ட நீங்க வாழ்ந்த வாழ்க்கையக்கூட கொற சொல்லமாட்டேன் ஆனா உங்க அப்பா செஞ்சததட்டிக்கேக்கத்துப்பில்லாம நீங்க நின்னீங்களே அப்பத்தான் கேட்டு ருக்கனும் நீங்க ஆம்பளையான்னு

என்ன ஜடம் மாதிரி வைச்சி ருந்தபோது ஒங்களுக்குத் தோணலையா நான் ஒரு பொண்ணுன்னு அப்பத் தோணாத கேள்வி இப்ப ஏன் வருது நான் ஒரு பொம்பளையான்னு இப்ப சொல்றேன் ஆமா நான் ஒரு பொம்பளை தான் அதுனாலதான் யாரோ பெத்த புள்ளையானாலும் என் பிள்ள போல வளக்குறேன். ஒரு பொண்ணுக்கு ஆக்கத்தான் தெரியும் அன்பு கொடுக்கத்தான் தெரியும் தாயாக. அதைத்தான் நான் இப்ப செய்யிறேன்.. போங்கய்யா ஒங்க ராஜ்ஜியமும் பொழப்பும்னு சொல்லிட்டு கொழுந்தனத்தூக்கிட்டுபோனா சாதாரணமா தன்னோட ஆறாத ரணத்த மறந்து....

■

## சிறகென

பார்க்காமலே
பேசாமலே
பழகாமலே
பிரியாமலே
வருந்தாமலே
வாழாமலே
சிறகென மிதந்திருக்கலாம்...

**வேதா தமிழ்**

# ஆலம் விழுதென ஆயிரம் ஆசைகள்

**அஞ்யுகா ஸ்ரீ**
(நாமக்கல்)

"போட்டது போட்ட படி அப்படியே இருக்கு... இன்னும் ஒரு வேலையும் ஆகலை...நீட்டி நெளித்து எழுந்துவர இதென்ன உங்க அப்பன் வீட்டு அரண்மனையா? மனசுல என்னடா நினைச்சுகிட்டு இருக்க?" என்ற கருத்தப்பாண்டி,

"போனா போகுதுன்னு இன்னிக்கு ஒரு நாள் விடுறேன்... இனி ஒழுங்கா விடியலில் எழுந்து கட்டித்தாறையைக் கூட்டி, மாட்டுச்சாணியை அள்ளி கொட்டிட்டு, ஆடுங்களை ஏழு மணிக்கு முன்பு ஓட்டிட்டுப் போற இல்ல தோலை உரிச்சி உப்புக்கண்டம் போட்டுடுவேன்" என்று கோபமாக்க கூறியவர் சென்றுவிட்டார்.

அவ்வளவு நேரம் மூச்சுவிடக்கூட பயந்துகொண்டிருந்த கவின் அவர் சென்றதும் கூடையைத் தூக்கிக்கொண்டு வேலை பார்க்க ஓடிவிட்டான்.

இது தான் இந்த இரண்டு வாரமாக நடந்துகொண்டிருக்கிறது.

அதற்கு முன் கவினின் நிலை ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த பத்துவயது மாணவன்.

தந்தையின் இறப்பினால் வறுமையின் பிடியில் குடும்பத்தினர் சிக்கித்தவிக்க... மாமன் என்ற போர்வையில் வந்தவர் தனக்கு தெரிந்தவரின் உதவியால் கவினைப் படிக்க வைத்து பெரிய ஆளாக்கிவிடுகிறேன் என்று அவனின் தாயிடம் ஆசை காட்டினார்.

அவன் தாயும் தன்னுடன் சேர்ந்து மகன் கஷ்டப்படுவதற்குப் பதிலாக அவருடன் சென்றால் படித்து பதவியில் அமர்வான் என்ற நம்பிக்கையில் கவினை அனுப்பிவைத்தார்.

நல்லவர் போல் நடித்து தன்னுடன் கவினை அழைத்துவந்தவர் கருத்தப் பாண்டியிடம் கொத்தடிமையாக விற்று விட்டு ஓடிவிட்டார்.

முதலில் ஒன்றும் புரியாமல் விழித்த கவினுக்கு, தன் சூழ்நிலை புரிய ஒரு வாரம் ஆனது.

சுகமாக தூங்கி, நல்ல உணவை உண்டு பழகியவனுக்கு ஆடுகளுடனான படுக்கையும் பழைய சோறும் குமட்டிக் கொண்டுவந்தது... அளவுக்கு மீறிய வேலை அவனை மூச்சுமுட்டவைத்தது.. கொஞ்சம் கொஞ்சமாக பழகியவனுக்கு கருத்தப்பாண்டியின் உத்தரவுப்படி நான்கு மணிக்கு எழுந்து வேலை செய்வது என்பது குதிரைக் கொம்பாகத் தான் இருந்தது.

அவர் சொன்னது போல் அத்தனை வேலைகளையும் முடித்தவன் இருபதுக்கு மேற்பட்ட ஆடுகளை ஓட்டிக்கொண்டு அருகிலிருந்த ஏரிக்குச் சென்றான்.

சரியாக மழை இல்லாததால் ஏரியில் நீர் இல்லாமல் புல், பூண்டு முளைத்திருந்தது.

ஆடுகளை நடு ஏரிக்கு ஓட்டிச் சென்றவன் எதையோ தேடிச் சென்றான்.

தான் தேடியது சிக்கவும் சிரிப்புடன்

ரகசியமாக அதனை ஒரு இடத்தில் பதுக்கி வைத்தவன், அருகிலிருந்த ஆலம் விழுதில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்தான்.

"நான் அதைப் பார்க்கலை கவின்" என பின்னிருந்து சத்தம் கேட்க.

முகம் கொள்ளாப் புன்னகையுடன் திரும்பியவன், "கோகிலா அக்கா!" என ஆச்சரியத்துடன் அழைத்தான்.

கோகிலா, "நானே தான்" என்றவள்,

"இன்னிக்கு எத்தனை சிக்குச்சு கவின்?" என சிரிப்புடன் கேட்க.

"மூனு பாட்டில் க்கா" என்றவன்,

"ரெண்டு நாளா நீங்க ஏன் வரலை?" என கேட்க.

"பாட்டி வீட்டிக்குப் போயிருந்தேன் கவின்" என்ற கோகிலா தானும் விழுதைப் பிடித்து தொங்கியபடி சிறிது நேரம் ஊஞ்சலாடிவள்,

"இந்தா இது உனக்காக கொண்டு வந்தேன்" என்று கூறி ஒரு டப்பாவை அவனிடம் கொடுத்தாள்.

"என்னக்கா இது?" என கவின் கேட்க.

"திறந்து பார்" என்றவள் ஆவலாக அவனின் முகத்தைப் பார்த்தாள்.

அதே ஆவலுடன் டப்பாவைத் திறந்த கவின், "ஐய்! எனக்கா இது?" என சந்தோஷத்துடன் கேட்க.

அவளோ,"உனக்குப்பிடிக்குமேன்னு தான் பாட்டிக்கிட்ட அடம்பண்ணி வாங்கி வந்தேன்... சாப்பிட்டுப் பார்த்து எப்படி இருக்குனு சொல்லு" என்க.

கோகிலா கொடுத்த அல்வாவை உண்ட கவின், "சூப்பரா இருக்கு க்கா" என்று கூற.

அவளோ, "எல்லாம் உனக்குத் தான்... பொறுமையா சாப்பிடு" என்று கூறி சிரிக்க இவனும் சிரித்தான்.

கோகிலா கருத்தப்பாண்டியின் எதிர் வீட்டுப் பிள்ளை... அதுவும் பதிமூன்று வயது குழந்தை.

கவின் வந்த அன்று முதல் நாளே கருத்தப்பாண்டி அவனை ஆடு மேய்க்க அனுப்பிவிட, ஆடுகளோ அவனிற்கு அடங்காமல் ஆட்டம் காட்ட ஓடி ஓடி சோர்ந்து போய் அழுதுவிட்டான்.

அப்பொழுது அங்கு ஆடுகளை ஓட்டி வந்த கோகிலா தனியாக நின்று அழுதவனைக் கண்டு என்ன? ஏது? என்று விசாரித்தாள்... அவனும் நடந்ததைக் கூற இவள் தான் கவினுக்கு உதவினாள்.

அன்றிலிருந்தே இருவரும் அக்கா, தம்பியாகிவிட்டனர்.

மதியம் போல் ஆடுகளை ஓட்டிச் சென்று பட்டியில் அடைத்த கவின் சாப்பாட்டுக்காக தட்டுடன் சென்று கருத்தப்பாண்டியின் வீட்டின் வாயிலில் நின்றான்.

இவனை கண்டதும் அவரின் மனைவி, "நீ செய்யுற வேலைக்கு நேரா நேரத்திற்குச் சோறு ஒன்னு தான் குறைச்சல்" என திட்டியவள் நேற்று வைத்த சாதத்தை அவனின் தட்டில் போட்டுவிட்டு

---

# கட்டம் பளிச்சிட்டது

சுண்ணாம்பு கட்டங்கள்
தீட்டிய பின்னே
விளையாட ஆளில்லை..

வீட்டுக்குள்ளே
தடவிக்கொடுத்தபடி
அலைபேசிதனிலே விளையாடும்
சிறார்கள்...

தனிமைச்சிறையாலே
தவித்த கட்டத்திற்கு...
அந்த சூழலிலே
யாரோ எறிந்த கல்
தெருநாயின் மீது பட்டிடவே....

நொண்டி நொண்டி
வந்த நாய்
'ரைட்டா ரைட்டா'என்று கேட்காமல்
கட்டத்தைக் கடந்திடவே...

தன் மீது
விளையாட்டு நடந்ததாலே
சிரித்தபடி கட்டம் பளிச்சிட்டது!

**ம.சக்திவேலாயுதம்**
நெருப்பு விழிகள்

உள்ளே சென்றுவிட்டாள்.

அந்த சாதத்தைப் பார்த்தவனுக்கு குமட்டிக்கொண்டுவரவும் கண்களில் இருந்து தானாக கண்ணீர் வந்தது.

பசி வேறு வயிற்றைக் கிள்ள தண்ணீர் ஊற்றி கரைத்துக் குடித்தவன் சற்று அமர்ந்தான்.

அப்பொழுது அங்கு வந்த கருத்தப் பாண்டி, “இன்னும் இங்க என்ன பண்ற? போ... போய் தட்டு அறுத்துக்கிட்டு வா... அதை முடிச்சுட்டு மாடுங்களுக்கு தண்ணீர் காட்டிடு” என்றவர் பட்டிக்குச் சென்றுவிட்டார்.

ஒரு வேலை முடித்து அலுத்துப் போய்வந்த சின்னஞ்சிறு குருத்திடம் மன சாட்சியே இல்லாமல் அடுத்த வேலையைக் கொடுக்க கவினுக்கு இங்கே இருந்து ஓடிப் போய்விட்டால் பரவாயில்லை என்று தோன்றியது.

அவனுடைய நினைப்பைத் தடை போடுவது போல் கருத்தப்பாண்டி, “கூலிக்கார நாயே இங்கே வாடா” என ஆங்காரமாக்க கத்தவும்.

கவின் அடித்துப்பிடித்துக்கொண்டு ஓடிச்சென்று அவரின் முன் நின்றான்.

கருத்தப்பாண்டி, “இது தான் நீ ஆடு மேய்க்கும் லட்சணமா?” என கோபமாக கேட்க.

கவின் புரியாமல் விழித்தான்.

அதில் மேலும் ஆத்திரம் கொண்டவர், “ஆட்டை விட்டுட்டு நீ எங்க போன? இல்லை படுத்து தூங்கிட்டியா? சொல்லுடா” என்று கர்ஜிக்கவும், கவின் நடுங்கிப் போய்விட்டான்.

“இல்லை முதலாளி நான் பக்கத்தில் இருந்துதான் மேய்த்தேன்... படுத்து தூங்கெல்லாம் இல்லைங்க” என அழுகை குரலில் கூற.

அவரோ, “அப்புறம் எதனால்டா ஆடுங்க வயிறு நிறையாமல் இருக்கு?” என கேட்க.

கவின் பதில் சொல்லத்தெரியாமல் விழித்தான்.

கடுப்பான கருத்தப்பாண்டி சாட்டை வாரால் வெறிப் பிடித்த மிருகம் போல் விளாசினார்.

# தந்தையால் மகனுக்கு ...

கயவர்கள் சதி வலை நெய்து
வீசிய போதும் துவண்டு ஒழியாது
தூற்றியவர்கள் சோரும் வரை
பயணத்தைத் தொடர்ந்திடு மகனே...!

செல்லும் பாதையில் கற்கள் முற்கள்
புலிகள் பன்றிகள் ஓநாய்கள் பல
முட்டுக்கட்டைகளாக தொடரும்
சிந்தை தளர்ந்திடாதே மகனே...!

நேர்மை தைரியம் நிலை பிறந்தாலும்
கைகால் ஆகாதவர்கள் விமர்சிக்க
உடல் சோர்ந்து முன் வைத்த காலை
பின் வைத்து விடாதே மகனே...!

வெற்றி கண்டு பெருமை கொண்டு
தோல்வி நிலை துவண்டு ஓடி
வாழ்கை கசந்து இலட்சியம் மறந்து
அலட்சியமாய் எண்ணாதே மகனே....!

வீண் பேச்சுக்கள் குறைத்து
கேளிக்கை வினைகள் களைந்து
அன்பென்ற விதையை
போகும் இடம்தனில்
விதைத்து அறுவடையில்
சிறப்பாய் மகனே...!

அயராது உழைத்து தந்தை நாமம்
சொல்லும் மகனாய் பல் துறை
சிறந்து நற்செயல் பல செய்து
மானிடர் மனம் கவர்ந்து
சிறப்பாய் மகனே...!



தந்தை சொல்
அழியாத கல்வெட்டாய்
சிந்தையில் செதுக்கி
அணுவும் தவறாமல்
அது வழி நடந்தால்
வாழ்வில் விளையும்
செயல் முழுதும்
துணை செய்யுமே மகனே....!

- தௌபீக் முஹம்மது நவீத்
இலங்கை

சின்னஞ்சிறு பிஞ்சு, வலி தாங்காமல் அலறிய அலறல் அங்கே இருந்த ஆடு, மாடுகளைக்கூட உலுக்கியது, ஆனால் மனிதன் என்ற போர்வையில் இருந்த இந்த ராட்சசனைக் கொஞ்சம் கூட அசைக்கவில்லை.

கை ஓயும் வரை கவினை அடித்துத் தீர்த்த கருத்தப்பாண்டி சாட்டையை அவன் மேலேயே எறிந்து விட்டு, "அரை மணி நேரத்தில் நான் சொன்ன வேலை எல்லாம் முடிந்திருக்கணும்... இல்லை அதுக்கும் சேர்த்து இதே மாதிரி விழும்" என்று கூறிவிட்டு சென்றுவிட்டார்.

வலியில் துடித்த கவின் எழக்கூட முடியாமல் தட்டுத்தடுமாறி எழுந்தவன் அழுதபடியே அரிவாளை எடுத்துக்கொண்டு தட்டறுக்கச் சென்றான்.

வாங்கிய அடி, அதீத வேலை, சரியான உணவின்மை என எல்லாம் கவினை அன்று இரவு காய்ச்சலில் தள்ளியது.

காய்ச்சலின் விளைவினால் அனத்திய படியே படுத்தவனுக்கு கண்களைத் திறக்க முடியாத அளவுக்கு வாட்டி வதைத்து.

காய்ச்சல் சற்றும் குறையாத நிலையில் விடியலிலேயே தட்டுத்தடுமாறிய படியே வேலையை முடித்தவன் சற்று விரைவாகவே ஆடுகளை மேய்ச்சலுக்காக ஓட்டிச்சென்றுவிட்டான்.

சிறிது நேரம் படுத்து தூங்கி எழுந்தவனுக்கு உடம்பு பராவாயில்லை போல் இருக்கவும் ஆடுகளை மேய்த்தான்.

திடீரென ஹாரன் சத்தம் கேட்கவும் உடல் சுகவீனத்தை மறந்து மறைத்து வைத்திருந்த கண்ணாடி பாட்டில்களை எடுத்துக்கொண்டு சத்தம் வந்த திசையை நோக்கி ஓடினான்.

ஓடிய வேகத்தில் வண்டியைப் பிடித்தவன் பாட்டில்களை போட்டுவிட்டு பால் ஐஸ் ஒன்றை சுவைத்தபடி திரும்பவும் ஏரிக்குள் ஓடினான்.

ஓடிவந்த கவினைக் கண்ட கோகிலா அதிர்ச்சியில், "என்னடா இது? எப்படி ஆச்சு? யார் அடித்தாங்க? எதுக்காக அடித்தாங்க?" என பதறிப்போய் கேட்க.

கவின் ஐஸ்ஸை ருசித்திக்கொண்டே நேற்று நடந்ததை அவளிடம் கூறினான்.

கவின் சொன்னதைக் கேட்ட கோகிலாவின் கண்களில் இருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

அதைக் கண்டவன், "அடி வாங்கியது நான் நீ ஏன் அக்கா அழற?" என ஐஸ்ஸை உறிஞ்சிய படியே கேட்க.

கோகிலா, "ரொம்ப வலிக்குதா?" என அவனின் கையையும் காலையும் தடவியபடி கேட்க.

"பின்ன வலிக்காமல் இனிக்கவா செய்யும்? செம அடி... அதுவும் சாட்டையாலே அடிச்சுப்பிட்டாங்க" என கண்களை உருட்டிய படி கூறினான்.

அதற்கு கோகிலா, "பேசாமல் இங்கே இருந்து தப்பித்து வீட்டுக்குப் போயிடு கவின்" என்க.

அவனோ, "வீட்டுக்கு வழி தெரியாதே... அப்புறம் எப்படி போவது?" என கேட்க.

கோகிலா, "ஓ! இது வேற இருக்கா?" என கவலையாகக் கேட்டாள்.

அவனோ சிரிப்புடன், "ஹம்ம்" என்றவன்,

"உனக்கு ஸ்கூல் எப்ப க்கா?" என கேட்க.

கோகிலா, "அடுத்தவாரம் கவின்" என்றவள்,

யோசனை வந்தவளாக, "ஆமாம்! உனக்கு என்ன ஆகணும்னு ஆசை?" என கேட்டாள்.

"எனக்கு படித்து பெரிய ஆளாகி அம்மாவுக்கு பட்டுப் புடவை வாங்கிக் கொடுக்கணும்... பாப்பாவுக்கு செருப்பு வாங்கித்தரணும்... அப்புறம் மூணு பேரும் நல்ல சாப்பாடு சாப்பிடணும்... என்னை மாதிரி நரகத்தில் மாட்டிக்கிட்டவங்களை காப்பாத்தணும்" என்று தனது ஆசைகளை ஆலம் விழுது போல் அடுக்கிக்கொண்டே சென்றான்.

"நீ இங்கேயே இருந்தால் அதெல்லாம் எப்படி செய்வ? இந்த இடத்தை விட்டு போனால் தான் நீ படிக்கவே முடியும் கவின்" என்றாள் கோகிலா.

அதில் கவினின் முகம் பியூஸ் போன பல்ப் போல் மாறிவிட்டது.

"இப்ப சொல்லு கவின் நீ இங்கேயே

இருந்து தினமும் அடி வாங்கப் போறியா? இல்லை படிக்கப் போறியா?" என கோகிலா கேட்க.

"இல்லையில்லை... என்னால் இங்கே இருக்க முடியாது... நான் படிக்கப் போகணும்" என்று சிறிதும் யோசிக்காமல் உடனடியாக கூறினான்.

கோகிலாவின் மனதில் ஊரில் நடந்த ஒரு நிகழ்வு நியாபகத்திற்கு வந்தது.

டீவி பார்த்துக்கொண்டிருந்தவள் திடீரென அவளின் மாமா யாரையோ திட்டுவதைக் கேட்டு அவரின் அறைக்குச் சென்றாள்.

இவளைக் கண்டதும் தன் கோபத்தைக் கட்டுபடுத்திக்கொண்டு அந்தப் பக்கத்திலிருந்தவரிடம் மெதுவாகப் பேசினார்.

போன் பேசி முடித்ததும் கோகிலா, "யார் மாமா அது? ஏன் கோபமா பேசுனீங்க?" என கேட்க.

"அதுவா சும்மா விளையாட்டுக் குடா" என சமாளிக்கப் பார்க்க.

"பொய் சொல்லாதிங்க மாமா... நீங்க ஏதோ குழந்தை தொழிலாளர்... ஜெயில்னு சொன்னீங்க" எனக் கேட்க.

அதில் பெருமூச்சு விட்டவர், "என்னுடைய ப்ரண்ட் தன்னுடைய சொந்தக்கார பையனை வேலைக்கு வச்சியிருக்கான்... அந்தப் பையனுக்கு பதினான்கு வயது தான் ஆகுது... இந்த வயதில் அந்தக் குழந்தையை வேலைக்கு வைப்பது தப்பு... அதைவிடக் குற்றம்... அதனால் தான் அவனை திட்டினேன்" என்றார்.

கோகிலா, "என்னை மாதிரி சின்னப் பசங்களை வேலையில் வைப்பது தப்பு... அதற்கு தண்டனையும் இருக்கு சரியா மாமா?" என கேட்க.

"ஆமாம் கோகிலா" என்றார்.

"அக்கா... அக்கா" என கவின் அழைக்கவும் சுயத்திற்கு வந்தவள், "என்ன கவின்?" என கேட்க.

அவனோ, "அப்படி என்ன க்கா யோசனை?" என்க.

கோகிலா, "எல்லாம் உன் படிப்பைப் பற்றித் தான்" என்றதோடு நிறுத்திக்கொண்டவள்,

"சரிவா நாம போகலாம்" என்று கூறியவள் அவனுடன் சென்றுவிட்டாள்..

அன்று இரவு முழுவதும் யோசனை செய்த கோகிலா தாயும் தந்தையும் தோட்டத்திற்கு சென்றதும் கதவைச் சாற்றிவிட்டு தனது அறைக்குச் சென்றவள் பயத்துடன் போனை கையில் எடுத்தாள்.

அச்சத்தில் போனை வைக்கப் போனவளுக்கு கவினின் அடிவாங்கி வீங்கிப்போன முகம் கண் முன் வர நூறுக்கு டயல் செய்தாள்.

இரண்டாவதுரிங்கிலேயே,"ஹலோ கண்ட்ரோல் ரூம்" என்றதும் கோகிலாவின் உடலெல்லாம் வியர்வையில் குளித்தது போல் ஆகிவிட்டது.

இருந்தாலும் பயத்தைத் தன்னுள் பதுக்கியவள், "ஹலோ சார்... நான் தூசூரிலிருந்து பேசறேன்... இங்க ஒரு வீட்டில் பத்து வயதுப் பையனை கொத்தடிமையாக வைத்திருக்காங்க... தினமும் அடிக்கிறாங்க... சாப்பாடு கொடுக்க மாட்டேங்கிறாங்க... அந்த முதலாளி பேர் கருத்தப்பாண்டி" என்றவள் அவர் கேள்வி கேட்பதற்குள் போனை கட் செய்ததோடில்லாமல் ஸ்விச் ஆஃப் செய்துவிட்டாள்.

அவரோ, "ஹலோ... ஹலோ... நீங்க யார்?" என கேட்கப் போக கால் கட்டாகிவிட்டது.

அவரால் இந்த செய்தியை சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியாமல் உடனடியாக உயர் அதிகாரியை அணுகினார்.

கோகிலாவின் பேச்சிலேயே அவள் சின்னவள் என அறிந்துகொண்டவர் தன் மேலதிகாரியிடம் அதைத் தெரிவித்தார்.

அவராலும் இதை விடமுடியாமல் போக அடுத்த கட்ட நடவடிக்கையை உடனடியாக எடுத்தார்.

அதன் விளைவு அன்று மாலையே ஏட்டு முதல் எஸ். ஐ வரை அத்தனை போலீஸ் அதிகாரிகளும் கருத்தப் பாண்டியின் வீட்டில் குவிந்துவிட்டனர்.

ஒரே நேரத்தில் இத்தனை அதிகாரிகளைக் கண்ட கருத்தப்பாண்டியும் அவன் மனைவியும் மிரண்டு போய்விட்டனர்.

எஸ். ஐ விசாரித்த விசாரணையில்

# முள் தச்ச நெஞ்சம்

போராட்டமே வாழ்க்கையானது
போராடும் குணமே
விஞ்சி நின்றது

எட்டி நின்று வேடிக்கைப்பார்க்க
இயலவில்லை
துணிந்து இறங்கித் துயரப்படுகிறேன்

தோற்றுப் போகும் எண்ணமில்லை
தோள் கொடுக்க
தோழன் யாருமில்லை

வேகாத வெயிலிலும்
வேற்றுமையின்றி உழைக்கிறேன்
வேர்வை வழிந்தோட
விழி பிதுங்கி நிற்கிறேன்

பரிகாசப் பேச்சுகளில்
பகடைக் காயாகிறேன்
பாவிகளின் பார்வையில்
பாதரசமாகிறேன்

தேய்ந்து போன தேகத்தில்
தேய்பிறையாய் ஒளிர்கிறேன்
தேடாத வார்த்தைகளில்
தெய்வத்தைத் தேடுகிறேன்

முக்காலும் உணர்ந்தவர்கள்
முழுமையடைய விடவில்லை
முற்றிலும் உணர்ந்தேன்
முள் தச்ச நெஞ்சமதை

**- சுமதி சங்கர்**



காய்ச்சலில் சோர்ந்து படுத்திருந்த கவின் அவர் முன் அழைத்து வரப்பட்டான்.

அழுக்கான உடல், உபயோக மில்லாத உடைகள், மெலிந்த தேகம், தலை முதல் கால் வரை சிராய்ப்புகளும், ஆறியும் ஆறாத பழைய, புதிய காயங்களுமாக மிகப் பரிதாபகரமான தோற்றத்தில் கவின் இருந்தான்.

அதிலேயே அவன் நிலையை அந்த எஸ்.ஐ அறிந்துகொண்டார்... பின் இன்ஸ்பெக்டரிடம் பணிக்க அடுத்த அரை மணி நேரத்தில் கவின் ஹாஸ்பிட்டலில் அனுமதிக்கப்பட்டான்.

கருத்துப்பாண்டியும் அவன் மனைவி யும் கைது செய்யப்பட்டனர்.

அடுத்த நாள் மாமா என்ற போர்வையில் வந்த கொடூரக்காரனும் கைதுசெய்ப்பட்டான்.

எஸ். ஐ கவினைப் பற்றி டி.எஸ். பியிடம் விஷயத்தைக் கூறிய சிறிது நேரத்தில் ஆர்.டி.ஓ. வை உடனடியாகத் தொடர்பு கொண்டார்.

ஆர்.டி.ஓ அடுத்த 20 நிமிடத்தில் தனது குழுவோடு மருத்துவமனைக்கு வந்தார்.

அவர் வந்த பொழுது அதீத காய்ச்சலின் விளைவினால் கவின் மயக்கத்திலிருந்தான்.

மூன்றாம் நாள் கவின் கண்விழித்த வுடன் கண்டது கண்ணீருடன் நின்றிருந்த அன்னையையும் தங்கையையும் தான்.

மாமனை விசாரித்த விசாரிப்பில் கவினின் அன்னையும் தங்கையும் இங்கு வரவைக்கப்பட்டனர்.

பின் கலெக்டர் உத்தரவின் பெயரில் கவினுக்கு கொத்தடிமைத் தொழில்முறை ஒழிப்பு சட்டம் 1976-ன் அடிப்படையில் விடுதலை சான்றிதழ் வழங்கினார் ஆர். டி.ஓ.

அத்தோடில்லாமல் அரசுநிர்ணயித்த நிவாரணத் தொகையான சில ஆயிரங்கள் அவனுக்கு கொடுக்கப்பட்டது... பள்ளியில் படிப்பதற்கும் ஏற்பாடு செய்து தருவதா கவும் கூறினார்.

அதோடுகால்செய்தது கோகிலாதான் என அறிந்த கலெக்டர் அவளை பாராட்டி

பரிசு கொடுத்து ஊக்கப்படுத்தினார்.

கவினும் அன்னையும் கோகிலா விற்கும் அவளின் குடும்பத்தினருக்கும் தங்களின் நன்றியை தெரிவித்தனர்.

கோகிலா, "மீண்டும் உன்னை பார்க்கும் போது பெரிய அதிகாரியா பார்க்கணும்" என்றவள் அவனுக்குப் பிடித்த பால் ஐஸ்ஸை கவினுக்கும் தங்கைக்கும் கொடுத்தாள்.

"நிச்சயமா பெரிய அதிகாரியா வந்து என்னை மாதிரி கொத்தடிமையா இருக்குற குழந்தைகளைக் காப்பாற்றுவேன் க்கா" என கோகிலாவிடம் கூறினான்.

கோகிலாவின் செயலை சகோதரி யின் மூலம் அறிந்துகொண்ட அவளின் மாமா கால் செய்து, "குட்டிமா... நீ எவ்வளவு பெரிய காரியம் பண்ணி இருக்கத்தெரியுமா? உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கு" என்று கூற.

கோகிலா, "அதற்குக் காரணம் நீங்க தான் மாமா... அன்னைக்கு நீங்க சொன்னதை ஞாபகத்தில் வைத்துத் தான் இதையெல்லாம் செய்தேன்" என்றவள்,

"அதோடு அந்த ஆள் கவினை போட்டு அடி அடினு அடிச்சுட்டாங்க... அப்புறம் மாமா, கவினுக்குச் சோறு கொடுக்கமாட்டாங்க... போட்டாலும் பழையது தான்... பாவமில்லையா அவன்?" என்க.

அவளின் மாமா, "ஆமாம் கோகிலா! பாவம் தான்" என்க.

கோகிலா, "மாமா... கவின் மாதிரியும் என்னை மாதிரியும் நிறைய குழந்தைகள் இந்த மாதிரி அடிமையா இருக்காங்களா? அப்ப அவர்கள் எப்ப வீட்டுக்கு போவாங்க?" எனச் சோகமாகக் கேட்க.

"உன்னை மாதிரி நல்லவங்க யாராவது அவங்களைக் காப்பாற்று வாங்க... நம்மால் முடிந்தால் நாமும் செய்யலாம்... கண்டுக்காமல் போவது தான் மிகப் பெரிய தவறு கோகிலா" என்றார்.

அவளோ, ''பண்ணுவாங்களா மாமா?'' என ஆர்வமாகக் கேட்க.

அவரோ, ''கொத்தடிமையா இருக்கக் குழந்தைகளை மீட்க சமூக ஆர்வலர்கள் ரொம்பவே பாடுபடுகிறார்கள்... அதேப் போல் அரசும் இதைத் தடுக்க தீவிரமா முயற்சிபண்ணுது...ஆனாலும் முடியலை... அவ்வளவு ஏன் மிகப்பெரிய நாடுகளைச் சேர்ந்த அரசாங்கமும் சிறுவர்களை மீட்கத் தீவிரமா முயற்சி பண்ணுகிறது முடியலை'' என்றார்.

"கவலைப்படாதிங்க மாமா சீக்கிரமா இதெல்லாம் சரியாகிடும்» என்று அவருக்கு இவள் ஆறுதல் சொன்னாள்.

''இதற்காகத் தான் என்னைப் பாராட்டினார்களா மாமா? அப்புறம் எப்படி என்னைக் கண்டுபிடித்தார்கள்?" எனக் கேட்டவள்,

"நானும் உங்களை மாதிரி பெரிய வளானதும் நிறைய குழந்தைகளைக் காப்பாற்றுவேன்" எனக் கண்கள் மின்னக் கூறினாள்.

அதற்கு அவளின் மாமா, "ஆமாம் கோகிலா!» என்றவன்,

''நீ உன் மனசு போல் பண்ணுடா... நான் உனக்குத் துணையா இருப்பேன்" என்று கூறி அவளை ஊக்கப்படுத்தினார்.

கருத்தப்பாண்டியை கைது செய்த போலீஸ் அதிகாரி அவர் செய்த பல அக்கிரமங்களை தோண்டி எடுத்தனர்.

அதில்ஒன்றுசிலபலவருடங்களுக்கு முன் அவரிடம் வேலைக்கு வந்த பையன் மர்மமான முறையில் இறந்தது.

இவ்வளவு நாளாக அந்த பையன் எவ்வாறு இறந்தான் என தெரியாமல் இருந்த மொத்த ஊருக்கும் அவனின் குடும்பத்திற்கும் கருத்தப்பாண்டியின் கருப்பு பக்கங்கள் தெரியவந்தது.

எஸ்.ஐ, "ஏண்டா நாயே... உங்கிட்ட வேலைக்கு வந்தா என்ன வேணும் னாலும் பண்ணுவியா? இருக்குடா உனக்கு... நீ செய்த அத்தனை குற்றங் களையும் தோண்டித்துருவி வெளியே கொண்டுவந்து ஆயிசுக்கும் ஜெயிலில் கம்பி எண்ண வைக்கிறேன் பார்" என ஆவேசமாக கர்ஜித்தார்.

தன் பயத்தை மறைத்துகொண்டு கருத்தப்பாண்டி, "உங்களை மாதிரி பல

பேரை நான் பார்த்திருக்கேன் சார்... உங்களால் முடிந்ததைப் பாருங்க, அடுத்த வருஷமே நான் வெளியே வந்து காட்டுகிறேன்" என சவால் விட்டார்.

அதற்கு அவரோ, "அப்படியா சார்? அதையும் நான் பார்க்கிறேன்" என்றவர்,

"நான் யாருனு தெரியுமாடா? உன்னை மாதிரி ஆளுங்களுக்கெல்லாம் கூண்டோடு பிடிப்பதற்காகவே இந்த காக்கிச்சட்டை போட்டவன்" என்று கூறியவர் அவனைப் பார்த்து கேலியாகச் சிரித்தார்.

அதில் மிரண்ட கருத்துப்பாண்டி வாயை இறுக்கமாக மூடிக்கொண்டார்.

அதை கண்ட எஸ். ஐ, "அவ்வளவு பயமா? இந்த பயத்தை பார்த்தால் இன்னும் ஏதோ பெருசா இருக்கும் போல் தோணுதே, அப்படியா?" என கருத்தப்பாண்டியிடமே கேட்க, அவரின் உடல்கள் வியர்வையில் நனைந்தது.

"நானே அதையும் கண்டுபிடிக்கி றேன்" என்றவர் வெளியே செல்லவும் தான் கருத்தப்பாண்டிக்கு மூச்சே வந்தது.

கருத்துப்பாண்டியின் தடுமாற்றம் அவருக்கு எதையோ உணர்த்த தனது வேட்டையை விரைவுபடுத்தினார்.

அதன் விளைவு பல வருடங்களுக்கு முன்பு தன்னிடம் வேலை செய்தவனை கருத்தப்பாண்டி அடித்துக்கொன்று கிணற்றில் வீசிவிட்டு, ஊர் மக்களிடம் தவறி விழுந்து இறந்துவிட்டதாகப் பொய் கூறி நம்ப வைத்தது வெளிச்சத்திற்கு வந்தது.

எஸ். ஐயின் அயராத உழைப்பி னால் கருத்தப்பாண்டி, கவினை கொடுமை படுத்தியது மற்றும் கொலை வழக்கு என இரண்டு பிரிவில் ஜெயிலில் அடைக்கப்பட்டார்.

கருத்தப்பாண்டிக்கு தண்டனை வாங்கிக் கொடுத்தவர் நேராக கவினைக் காண சென்றார்.

கவினிடம், ''ஹலோ குட்டிப் பையா'' என்க.

கவின், ''ஹாய் சார்'' என்றவன்,

''என்னைக் காப்பாற்றி ஊருக்கு அனுப்புவதற்கும் படிக்க வைப்பதற்கும் தேங்க்ஸ் சார்'' என்று கூறினான்.

அதற்கு அவரோ, «இது என்னு டைய கடமை கவின், அதைத் தான் நான் செய்தேன்» என்றவர்,

''உன்னைக் காணும் போது எனக்கு என்னுடைய சின்ன வயசு தான் நியாபகம் வருது'' என்றவர்,

கவினிடம், ''படித்து பெரிய ஆளாகி உனக்கு என்ன ஆகணும்னு ஆசை?'' எனக் கேட்க.

கவின், ''பெரிய ஆளாகி என்னை மாதிரி பாதிக்கப்பட்டவங்களை காப்பாற் றணும் சார்'' என கண்கள் மின்னக் கூறினான்.

அதற்கு எஸ். ஐ, ''வெரி குட் கவின்... இப்படித் தான் இருக்கணும்'' என அவனைப் பாராட்டியவர்,

''உன்னுடைய கனவை நினைவாக் குவதில் ஆலமரம் போல் ஸ்ட்ராங்கா இருக்கணும்... எத்தனை பிரச்சனை வந்தாலும் நிலையா நின்னு சாதிக்கணும்'' என அவனுக்கு உற்சாகமூட்டினார்.

கவின், ''நிச்சியமா சார்... நான் பெரிய ஆளானதும், முதலில் உங்களைத்

## அவளைப் போலவே...

கவிதை எழுத
வேண்டுமென்று
காகிதத்தை எடுத்தேன்

புரிந்து கொண்டதெப்படியோ
தெரியவில்லை

நாணத்தில்
ஓடி வந்து
ஒட்டிக் கொண்டதென்
முகம்தனில்
அவளைப் போலவே...



**மைகிறுக்கல் மாதவன்**
சிறுமுகை

தான் பார்க்க வருவேன்'' என்க.

அவரோ, ''இந்த உலகத்தில் எந்த இடத்தில் இருந்தாலும் அந்த நாளுக்காக நான் காத்துக்கிட்டு இருப்பேன் கவின்'' என சிரிப்புடன் கூறினார்.

''நீங்களும் கோகிலா அக்காவும் ஆசைப்பட்ட மாதிரி நிச்சயமா வருவேன் சார்'' என தன்னம்பிக்கையுடன் கூறினான்.

இவனின் தன்னம்பிக்கையே சொன்னது ஒரு நாள் இல்லை ஒரு நாள் பெரிய ஆளாக வருவான் என்று.

கவின் மாதிரி கொத்தடிமையாக மாட்டிக்கொண்ட பல குழந்தைகள் சிலர் மீட்கப்பட்டும், மீட்கப்படாமலும் நாட்டில் இருக்கின்றனர்.

பலர் மீட்கப்பட்டு தாய், தந்தையுடன் சேர்ந்து சந்தோஷமாக வாழ்கின்றனர்.

சிலர் மீட்கப்பட்டும் சொந்த ஊர் என்ன? எது? என தெரியாமல் இருக்கின்றனர்.

அரசால் எவ்வளவு முயன்றும் அவர் களின் வேர் கண்டுபிடிக்கப்பட முடியாமல் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றனர்.

சில பெற்றோர்களோ குழந்தை களுக்கு நடக்கும் கொடுமைகள் தெரியாமல், எங்கோ நன்றாக இருக்கிறார்கள் என்று நினைத்து அப்பாவியாக காலத்தை ஓட்டி விடுகின்றனர்.

குழந்தைகளை செங்கல் சூளை, பஞ்சுமில், வீட்டு வேலை, நெசவு, முந்திரி உடைப்பது, பாலியல் தொழிலில் ஈடுபடுத்துவது என்பது கொடுமையான விஷயம்... அதிலும் பல பெற்றோர்கள் இந்த கோர செயலுக்கு உடந்தையாய் இருக்கிறார்கள் என்பது உறைய வைக்கும் உண்மை.

கண்முன் நடக்கும் அவலங்களைக் கண்டும் காணாமல் போவதை விட்டுவிட்டு நம்மால் முடிந்ததை செய்து வருங்கால சந்ததியினரைக் காப்போம்.

வாருங்கள் இப்போதாவது அதற் கான முதல் அடியை எடுத்து வைப்போம்.

கவின் போல் பல சிறார்களைக் காப்போம்.

# நிலவோடு நான்

இருள் சூழ்ந்த
இராப்பொழுதில்
என் இதயத்தோடு
கதைப்பேசியது
கொள்ளை நிலா!

பறந்த முற்றத்தில்
நான் வீற்றிருக்க
கண்முன்னே வந்தது
வெள்ளை நிலா!

செந்தாமரையின்
இலையை ஒத்த
நிறத்தில் மாற்றம் கொண்டு
மறுபிறவி எடுத்தது
அந்த வட்ட நிலா!

கறுமை படிந்த
இளம் வானில்
ஆங்காங்கே சிதறுண்ட
விண்மீன்களுக்கு இடையில்
பளிச்சிட்டதுவே
அவ்வெழில் நிலா!

பாட்டி சொன்ன கதைகளும்
கேட்டு சிரித்த நிமிடங்களும்
கண்முன்னே நிழலாடியது
நிலவை காட்டி அம்மா
நிலாச்சோறு ஊட்டிய
இரா பொழுதுகளும்!

சின்ன சின்ன வண்டுகளின்
மெல்லிய இரைச்சலோடு
குளிர்காற்று உடலை வருடிச்செல்ல
நிலவை காவலிட்டு
இதமாய் கண்அயர்ந்தேன்
அவ்வினிய இரவினிலே!

**அகீலா ஜவுபர்**
ஏத்தாளை புத்தளம்

கடிதக்கதை

# அன்புள்ள அம்மாவுக்கு..



- அனுராஜ்

தில்லி
நாள் : 27.01.21

அன்புள்ள அம்மாவிற்கு,

நானும், கணேஷும் நேற்று அதிகாலை தில்லி வந்தடைந்தோம். என்ன கணேஷ் எனப் பெயர் சொல்கிறேன் எனப் பார்க்கிறாயா..? கணவனது பெயரை சொல்லாமல் தயங்குவது எல்லாம் உனது காலத்தில் தான். கணேஷ் என்னை நன்கு கவனித்துக் கொள்கிறான். என்ன மீண்டும் முறைக்கிறாய்..! மரியாதை இன்றி எழுதுகிறேன் என்றா..!

இதெல்லாம் ச்சும்மா.. அன்புமிகுதியில் தான்..! அவனது அணைப்பில் கதகதப்பாய் அப்படியே தூங்கிப் போவது இந்த தில்லி குளிருக்கு இதமாய் இருக்கிறது.. தெரியுமா..!

வந்ததும் வராததுமாய் இன்று ஆபீஸுக்கு ஓடி விட்டான். வீட்டில் நான் மட்டுமே தனியாக இருக்கிறேன். காலையில் வாசல் தெளித்து.. வாசல் எல்லாம் எங்கே இருக்கு..? அபார்ட் மெண்ட்லே இருக்கற நடையை கூட்டி, தண்ணி தெளிச்சு சின்னதா ஒரு ஸ்டார் கோலம் போட்டேன்.. காலையிலே இன்னைக்கு வெண் பொங்கல் தான் பண்ணினேன்.. நல்லாவே இருந்தது..நீ சாப்பிட்டு பார்த்திருக்கணும், நம்ம கௌசியா இப்படி செஞ்சிருக்கான்னு அசந்து போயிடுவே..!

ம்.. அப்புறம்.. நம்ம பக்கத்து வீட்டு வாண்டு.. கண்ணை பெரிசு பெரிசா முழிச்சுக்கிட்டு ததக்கா.. புதக்கான்னு கதை சொல்லுமே.. அது எப்படி இருக்கு..? அப்பாவை குளிருலேயும் பச்சை தண்ணியிலே குளிக்க வேணாம்னு சொல்லு..! ம்..கொஞ்சம் இரு... யாரோ காலிங் பெல் அடிக்கறாங்க... யார்னு பார்த்துட்டு வந்துடறேன்...

பச்.. பக்கத்து வீட்டு காலிங்பெல்லை அடிக்கறதுக்கு பதிலா நம்ம வீட்டு பெல்லை அடிச்சுட்டாங்களாம்.. இந்த அபார்ட் மெண்ட்ஸ்லே இது ஒரு தொல்லை. மத்தபடி, நாம வீட்டை மூடிக்கிட்டு உள்ளேயே சிவனேன்னு இருக்கலாம். அது சரிம்மா.. அண்ணன் அண்ணி ஊருக்கு போயிட்டாங்களா..? அண்ணனுக்கு லீவு கிடையாதுன்னு சொல்லிட்டு இருந்தானே..? என்னைப் பத்தியே நினைச்சுட்டு இருக்காதே.. நேரத்துக்கு சாப்பிடு.. பிரசர் மாத்திரையை டெய்லி மறக்காம போட்டுக்கோ..! கோவில் குளம்னு சுத்திட்டு திரியாதே.. உடம்பை நல்லா பார்த்துக்கோ.. என்ன சொல்றது காதிலே விழுந்துச்சா..! சரி.. எல்லாரையும் கேட்டதா சொல்லு.

அன்புடன்
உன் பிரிய கௌசி.

---

தில்லி
16.02.21

அன்புள்ள அம்மாவிற்கு,
உன் செல்ல கௌசி எழுதுவது. ஹாய்..

என்ன பண்றீங்க..? போன வாரம் நானும் கணேஷும் தாஜ்மகால் போனோமே..! வாவ்.. என்ன ஒரு அழகுங்குறே.. அப்படியே பளிங்கு கல்லுலே.. பார்த்துட்டே இருக்கலாம் போலிருந்தது..! அழகான புல்வெளி.. அமைதியோ அமைதி..! மும்தாஜோட சமாதி தானே அது.. அதை ஏண்டி போய் முதல்லே பார்த்தீங்கண்ணு முறைக்கிறியா..? அம்மா.. அம்மா.. சுத்த கர்நாடகமா இருக்கியே..! அது காதல் சின்னமாக்கும்..! உலக அதிசயங்களிலே ஒண்ணு.. தெரியுமா..! அம்மா.. கொஞ்சம்.. இரு.

கணேஷ் கூப்பிடுறான்..என்னான்னு கேட்டுட்டு வந்துடறேன்.! வந்து கன்டினியூ பண்றேன்..

ஒண்ணுமில்லை.. வச்ச இடத்தை மறந்திட்டு, தேடிட்டு இருப்பான்.. என்னை மூச்சுக்கு முந்நூறு தடவை கூப்பிட்டு வேலை வாங்கணும்.. ம்.. வேலை வாங்கினாலும் கூலி கொடுத்துடுவான் தெரியுமோ..! கன்னத்திலே.. அப்பப்ப..சே.. இதெல்லாம் நான் உங்கிட்டே சொல்லிக்கிட்டு..! நான் சந்தோஷமா இருந்தா மகிழ்ச்சியடையற ஒரே ஆளு நீ தான்.. அதான்..விவஸ்தை இல்லாமஇதை யெல்லாம் சொல்லிட்டு இருக்கேன்..!

அம்மா..அண்ணாஏதோபுதுபிஸினஸ் பண்ணப் போறதா சொல்லியிருந்தானே.. தொடங்கிட்டானா..? அவனோட பையன் இப்போ போறது யு.கே.ஜி.தானே..! ம்.. இன்னும் ஒண்ணு கேட்கணும்..சே..கொஞ்சம் இரு கணேஷ் மறுபடி கூப்பிடறான். அடுத்த லெட்டர்லே எழுதறேன்.

இப்படிக்கு,
உன் பிரிய கெளசி.

---

தில்லி
7.03.21

அன்புள்ள அம்மாவிற்கு,
உன் கெளசியின் வணக்கம்.

நேத்து அபார்ட்மெண்ட்லே இருக்கற வங்க எல்லாம் சேர்ந்து எங்களோட வெட்டிங் செலிபிரேஷன் ஏற்பாடு பண்ணியிருந்தாங்க. தமிழ்நாட்டிலே மதுரையிலே கல்யாணம் பண்ணிட்டு வந்த ஜோடியில்லையோ நாங்க..! அதான்.. கணேஷோட பிரெண்ட்ஸ், அபார்ட்மெண்ட்ஸ் வாசிங்க எல்லாரும் சேர்ந்து ஒரு செம பார்ட்டி..! வந்தவங்க எல்லாம் என்னோட பட்டுச்சேலையையே தொட்டுத் தொட்டு பார்த்திட்டு இருந்தாங்கன்னா பார்த்துக்கோயேன்..! நைஸ்.. பியூட்டி..வாவ்.. ன்னு ஒரே கமெண்ட்ஸ் தான் போ..! என்ன இருந்தாலும் நம்ம சைட் பட்டுக்கு மதிப்பு தனி தான் தெரியுமோ..! அப்புறம்மா.. இங்கே என்ன சாப்பிட்டாலும் சுத்தி வளைச்சு சுவிட்டுலே தான் வந்து நிற்கிறா.. ஒரே திகட்டல்.. அப்பத்தான் நெனச்சுக்குவேன் நீ பண்ணற தேன்குழல், அப்பம், அதிரசம், எல்லாம் சுவிட் தானாலும் ஹெல்திங்கறது.. ம்.. இங்கே வறட்டு சப்பாத்தியும், தால்ங்கிற பேரிலே ஏதோ பருப்பையும் வச்சு ஒப்பேத்திக் கிட்டு இருக்கேன்.

நீ.. போன மாசம் டாக்டர் போயி பார்த்தியோ இல்லியோ.. இந்த மாசம் செக்கப்பும் போயிட்டு வந்திடு..! உன்னோட ஹெல்த் மேலே கவனமா இரும்மா..! எத்தனை தடவை சொல்றது..சோம்பேறித் தனமில்லை உனக்கு, எனக்குத் தெரியும்..! ஆனாலும் அசட்டை..!

அப்பாவையும், அண்ணன், அண்ணி, வால் பையன் எல்லோரையும் கேட்டதா சொல்லு..? பக்கத்து வீட்டு பசுமாடு கன்னு போட்டு சீம்பால் குடிச்சேன்னு சொன்னியே.. இதெல்லாம் இங்கே கண்ணுலேயே பார்க்க முடியாது..! நான் ரொம்ப நம்ம ஊரை மிஸ் பண்றேன்...உன்னையும் தான்..!

இப்படிக்கு..
உன் அன்பு கெளசி.

---

எழுதிய கடிதத்தை, தனது பூஜை அறையில் புகைப்படத்தில் மாலையுடன் சிரித்துக் கொண்டிருந்த அம்மாவின் புகைப்படம் பக்கத்தில் வைத்து கண்கலங்கிய கெளசிகா மெல்ல கண்களைத் துடைத்தபடி தனது அன்றைய வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்கினாள்.

## தன்முனைக்கவிதைகள்

1
காலத்தின் கல்வெட்டில்
நிரப்பிவிட்டேன்
கல்வியறியாத
அப்பனின் வார்த்தைகளை..!

2
யாருமல்லாத சாலையில்
இருள் மட்டும் பயணம்
துள்ளி திரிந்து
இருப்பதை கூறும் மீன்கள்

3
யாருடைய மனமும்
சொந்தமில்லை எனக்கு
உயர்ந்த உள்ளத்தில்
நடமாடும் பிம்பம்

4
மிதந்து வரும் குப்பையில்
தெரியும் நீரின் வேகம்
குறைகூறும் மனிதனிடம்
தரம் தேடுகிறது காலம்

5
பரந்த குளத்தில்
ஓலமிடும் தவளை
கை கூப்பி வணங்கி
மகிழ்கிறது சிலை

6
திறந்த புத்தகத்தில்
சிந்தனை குவியல்
காத்திருக்கும் மெழுகிற்கு
ஒளியூட்டுகிறது அறிவு

7
யாருமில்லாத இடத்தில்
பற்றும் இருள்
துணை வருகிறது
நம்பிக்கை வெளிச்சம்

8
ஊருக்காக அன்னை
மகனை அனுப்புகிறாள்
மகனை மட்டும்
மறந்திடும் நாடு

9
நிலவோடு இளமை
காதல் கொள்கிறது
கனவோடு நிலவிற்கு
போர்வை தருகிறது இரக்கம்

10
மூன்று நாள் வலி
மறைத்து சோறூட்டும் அன்னை
மூன்று வயது மகளுக்கு
எப்படித் தெரியவா போகிறது


கார்கவி சேகர
நாகப்பட்டினம்




## ஹைக்கூ

●

விலைவாசி உயர்வு
வியாபாரத்தில் மறைந்தது
மனிதநேயம்

●

பிள்ளை அழுகையில்
காணாமல் போகிறது
அம்மாவின் பசி

●

அள்ளியிறைத்தவள்
குப்பையில் இருக்கிறாள்
மைதீர்ந்த பேனா

●

தனிமைத் துயரில்
தலை வருட வந்தது
காற்று

●

மரம் நட்டேன்
அழகாய் வளர்ந்தது
குருவிக் கூடு

●

தேங்கிய மழைநீரில்
சாயம் கரைகிறது
காகித ஓடம்

●

நெடுநேரப் பசி
இரைந்து கொண்டிருக்கிறது
வயிறு

●

மதுக் குவளைக்குள்
மயங்கிச் சிரித்தது
மாதச் சம்பளம்

●

திடீர் மழை
நனைந்து தவித்தன
கொடியில் ஆடைகள்

●

தீராக் காதல்
முத்தமிட்டு மகிழ்கின்றன
கரையை அலைகள்

●

திடீர் மழை
கரைந்தோடியது
முக ஒப்பனை

●

ஓய்வு கேட்டு
ஏக்கத்துடன் பார்க்கிறது
கைப்பேசி


மக்கொனையூராள்

# போராடு வெற்றி உன்னோடு

வாழ்வில் நீ முன்னேறு
நாளை நீ வரலாறு
தயக்கத்தால் நீ தடுமாறினால்
உன் வாழ்வே தடம் மாறும்...

போட்டிகள் நிறைந்த உலகு
மாத்தி யோசி அது உனக்கு சிறகு
துணிவே வெற்றியின் அழகு
உன் புதிய தடத்தின் படகு...

நேரத்தை மட்டும் சேமி
உன் கைகளில் இந்த பூமி
பெற்றோரே உனக்கு சாமி
உலகின் அழகை அவர்களுக்கு காமி...

பாதைகள் பல மாறலாம்
தேடல்களை மட்டும் மறக்கக்கூடாது
வாழ்வில் புதிய தடங்கள் பதிக்கலாம்
முயற்சிக்க மட்டும் மறக்கக்கூடாது...

தூக்கம் வேண்டும் அளவோடு
குறிக்கோளுக்காக எப்பொதும் போராடு
உறவுகளிடம் அவ்வப்போது உரையாடு
நட்புகளுடன் எப்பொழுதும் உறவாடு...

புதிய சிந்தனைகளால் மட்டும்
இவ்வுலகிற்கு உன் அறிமுகம் கிட்டும்
தாமதமானாலும் அனைவருக்கும் எட்டும்
என் திசையிலும் வெற்றி முரசு கொட்டும்...

நெடுநேரப் பசி/
இரைந்து கொண்டிருக்கிறது/
வயிறு//



- க.கமலகண்ணன்



# பூக்கட்டும்... புன்னகை...

**மா**னிடராய் வாழ்தல் வரம். அதிலும், மகிழ்ச்சிகரமான புன்னகை ததும்பும் வாழ்க்கை அமைவது வரத்திலும் சிறந்த வரம். புன்னகை என்பது வெறும் செய்கையல்ல. அது, மகிழ்ச்சியான உணர்வின் அழகிய வெளிப்பாடு; மகத்துவம் மிக்க தெய்வீகம் நிறைந்த உடல்மொழி.

புன்னகை என்னும் உடையை உடுத்திப் பார்; உன்னைப் போல அழகு எவருமில்லை என்பார்கள். இவ்வரிகளில் பொதிந்துள்ள உண்மையை மகாத்மா, அப்துல் கலாம், அன்னை தெரசா, கிருபானந்த வாரியார் போன்ற உன்னதர்களின் பெயர் களைக் கேட்கும்போதும் நினைக்கும் போதும் நம்மால் உணரமுடிகிறது. கனிந்த, தெய்வீகம் நிறைந்த புன்னகை பூத்த ஒளிமுகமே இவர்களின் அடையாளமாக முதலில் நமக்குள் மலர்கிறது.

புன்னகையின் அளவைப் பொறுத்து,
* புன்முறுவல் அதாவது முறுவலித்தல்
* அளவே சிரித்தல்
* பெருகச் சிரித்தல்

என சிரிப்பை வகைப்படுத்துகிறது தொல்காப்பியம். புன்முறுவல் என்பது லேசாகசிறிதாகச்சிரித்தல். பெருகச்சிரித்தல் என்பது வாய்விட்டு சத்தமாகச் சிரித்தல். இவ்விரண்டுசிரிப்புக்கும் இடைப்பட்டதாக அமையும் சிரிப்புதான் அளவே சிரித்தல் என்பது. புன்முறுவலாகவும் இல்லாமல், வாய்விட்டுச் சிரிக்கும் வெடிச்சிரிப்பாகவும் இல்லாமல் அளவாகச் சிரிப்பதால் தான் 'அளவே சிரித்தல்' என இவ்வகையை தொல்காப்பியம் இயம்புகிறது போலும்.

அளவே சிரித்தல், பெருகச் சிரித்தல் இவ்விரண்டும் மகிழ்ச்சிகரமான சூழலிலோ, நகைச்சுவை உணர்வு மேலோங்கும் போதோ அல்லது நகைச் சுவையை ரசிக்கும் போதோ நமக்குள் ஏற்படுகிறது. ஆனால், புன்முறுவல் என்பது மகிழ்ச்சிகரமான மனிதர்களின் மனதை படம்பிடித்துக் காட்டும் உடல்மொழியாக, பெரும்பாலான நேரங்களில் அவர்களின் முகத்தில் உள் ளார்ந்து உடனிருப்பது. இவ்வகைச் சிரிப்பை புன்னகை, புன்சிரிப்பு, புன்முறுவல், இள முறுவல், குறுநகை, சிறுநகை, முகிழ்நகை



வானதி சந்திரசேகரன்

என்றும் பலவாறு கூறலாம்.

மொழிகள் தோன்றுவதற்கு முன்னரே, மனிதர்கள் ஒருவரையொருவர் தங்களைத் தொடர்புபடுத்திக் கொள்ளவும் மனதின் உணர்வுகளை வெளிப்படுத்தவும் பகிர்ந்துகொள்ளவும் சிரிப்பு எனும் இந்த அற்புதமான உடல்மொழியினையே பயன்படுத்தினர். தலைசிறந்த சிரிப்பு ஆய்வாளரும் பேராசிரியருமான ராபர்ட் புரோவின் அவர்கள் புன்னகை பற்றிக் கூறுகையில், ''புன்னகைதான் மொழிக்கு முன்னர் மனிதன் கண்டுபிடித்த முதல் தொடர்பு ஊடகம்'' என்கிறார்.

மனிதனின் உள்ளுணர்வோடு பின்னிப் பிணைந்த ஆழ்மன உணர்வின் மகிழ்ச்சிகரமான வெளிப்பாடுதான் சிரிப்பு. எனினும்,வயதுகூடக்கூடமனிதனின்சிரிக்கும் அளவு குறைந்துகொண்டே வருகிறது. நாம் கைக்குழந்தையாக இருந்தபோது சிரித்ததன் சராசரி அளவோடு, நாம் பொறுப்புள்ள மனிதர்களாக வளர்ந்தபின் நாம் சிரிக்கும் சிரிப்பின் அளவை ஒப்புமைப்படுத்திப் பார்த்தோமேயானால், அது, வெறும் ஐந்து சதவீதம் மட்டுமே என்கின்றன ஆய்வுகள். இவ்வாறான மருத்துவ ஆய்வுகளின்படி, நாளொன்றுக்கு குழந்தைகள் சராசரியாக 400 முறை சிரிக்கின்றார்கள். ஆனால், பெரியவர்களோ நாளொன்றுக்கு சராசரியாக 15 முறை மட்டுமே சிரிக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

சிரிப்பு என்னும் இந்த அக உணர்வின் வெளிப்பாடானது முகத்தை வசீகரமாக்கி புறவயமாகமற்றவர்களைஈர்ப்பதோடல்லாமல், மனிதர்களுக்கு இயற்கையாகக் கிடைத்த மாமருந்து என்றால் அது மிகையல்ல. நாம் சிரிக்கும்போது நமது உடலில் உள்ள 300 வகையான தசைகள் இயக்கம் பெறுகின்றன. இவ்வியக்கதின் மூலம் அத்தசைகள் அனைத்தும் இயற்கையாகத் தூண்டப்பட்டு புத்துணர்ச்சி பெறுகின்றன. இதன் காரணமாக மனதும் உடலும் புத்துணர்வு கொள்வதுடன் ஆரோக்கியத்தையும் பெறுகிறது.

சிரிப்பு என்னும் மாமருந்தானது நம்மை மன அழுத்திலிருந்தும் அதனால் ஏற்படும்உடல்பாதிப்புகளிலிருந்தும்காத்து, நமது உடலின் நோயெதிர்ப்பு சக்தியையும்



அதிகரிக்கிறது. மேலும், நமக்குள்ளும் நம்மைச் சுற்றிலும் நேர்மறையான எண்ண அலைகளை பரவவிடுகிறது. இதனால், கடினமான, இறுக்கமான சூழல்நிலவும் இடங்களில்கூட நமக்குள் இலகுவான, உற்சாகமான தன்மை நிலைகொள்கிறது.

காலம் கொரோனா எனும் தீநுண்மி கொண்டு இவ்வுலகை புரட்டிப்போட்ட போதிலும் நமக்கு கவசங்களாக இருப்பவை புன்னகையும் அது தந்த நேர்மறை உணர்வுகளும்! நம்பிக்கையுமே!

இனிவரும் நாட்களிலும் இடுக்கண் வருங்கால் நகுவோம். இளமை குன்றா மனதோடு வாழ்வோம். வருகின்ற புத்தாண்டை இன்முகத்துடன் வரவேற்போம்.

இடுக்கண் வருங்கால்
நகுதலொடு பாட்டால்
துடுக்குடன் துன்பந்
துரத்தி - எடுப்பாய்
மிடுக்கும் அகத்தில்
மிளிர்ந்திட ஆக்கம்
அடுக்கடுக்காய் நாடிடுமே
ஆங்கு.

**- வானதி சந்திரசேகரன்**




கவிஞர் ஷக்தி எழுதிய
"விடாது காதல்"
கவிதை நூல்

மதிப்புரை
தமிழ்நெஞ்சம் அமின்

நூல் தேவைக்கு
89399 85551

காதலின் விசையின்றி உலகமே சுழலாது. காதலைப் பாடாதவன் கவிஞனே ஆக முடியாது.

திருமதி. ஷக்தியின் 'விடாது காதல்' காதலைச்சுவாசித்து அதையே உண்டு செரித்து அதிலேயே லயித்து, உள்ளுணர்வெங்கும் காதலில் கட்டுண்ட ஒரு ஜீவனின் ஆத்ம ராகமாகவே எதிரொலிக்கிறது.

எளிமையான கவிதைகள் அழகியலை மட்டும் ஆடையாக அணிந்து நூல் முழுக்க வலம் வருகின்றன.

'பெருஞ்சினமும் பேரமைதியாக்கிடும்
பெரும் பிழை நீ
பிழையான உன்னையும்
சுத்தமாக்கிடும்
மாமழை நான்'

இவரின் வார்த்தைகள் சத்தியவசனமாய் முழங்க அவரின் தன்னம்பிக்கை கோலோச்சி கண்சிமிட்டிக் கடப்பதைக் காண்கிறேன்.

காதலில், நாணத்தைக் கூட இவ்வளவு நளினமாகக் கூறமுடியுமா என வியந்து உறைய வைக்கும் கவிநயம் இங்கே அபிநயம் பிடித்தாடுகிறது.

'பார்த்ததும் உறைகிற நாணமும் தோள் சேர்த்ததுமான வெப்பத் தகட்டில் வெடித்துச் சிதறுகிற பொழுதுகள் அறியும் வெட்கங்கள் திண்மை இல்லையென்று'

காதலில் பிரிவும் ஓர் அங்கமே யானாலும் அந்த பிரிவையும் ஒரு ஞானியின் பக்குவத்தோடு ஏற்றுக் கொண்டு பயணிக்கும் மன உறுதியைக் காண்கிறேன் இவ்வரிகளில்...

'நீ இன்றி தனிமையும்
நான் இருந்தும்
வெறுமையும் உணர்ந்த
பிறகே தெளிகிறேன்
துறவு என்பது
எத்துணை வலிமையானதென்று'

காதலில் மறத்தல் என்பது அத்தனை எளிதன்று என்பதை படம் பிடித்துக் காட்டும்

'உனை உடைத்தெறிந்தும்
என் வானில்
நட்சத்திரங்களாய் விழுந்து
தொலைக்கிறாய் எனக்கும்
சேர்த்தே ஜொலிக்கிறாய்
உன்னைக் கொட்டித் தீர்த்திருந்தும்
என் பூலோகத்தில்
மழையாய் பெய்து தொலைக்கிறாய்
எனக்கும் சேர்த்தே நனைகிறாய்'

காதல் இங்கே தன்னிருப்பை காட்டிச் செல்வது அபரிமிதமான அழகு!

பிரிவின் வலி தரும் துன்பத்தோடு, கொடுத்த வாக்கினை மறைத்து மறந்ததாய் நடிப்பது காலக் கொடுமையோ?

‘பிரிவின் வலியிலும்
தூரங்கள் யாவிலும்
நீயே நிற்கிறாய்
துயரங்கள் யாவையும்
நீயே தருகிறாய்
.............. மறந்ததாய்
வாக்கினை நாவில்
ஒளிக்கிறாய்...’

இலக்கணம் மா(மீ)றிப் பிரவாகிக்கும் காதலில், இருத்தலின் இயலாமை கொஞ்சம் துடைத்தெறியப்பட்டிருந்தால்,இக்கவிஞரின் காதல் கொஞ்சம் சுகப்பட்டிருக்கலாமோ எனும் ஆதங்கம் மேலோங்கி நிற்க வைக்கும்

‘காதலில் வெறுமையை
விதைத்திருக்கிற உன்
இருத்தலற்ற வறுமை
என் இருத்தலின் இயலாமையையும்
கொஞ்சம் வழித்தெடுத்துப்
போயிருக்கலாம்’

ஊடலைப்பற்றிய ஒரு குறளை ஞாபகப் படுத்துவதாய் அமையும் சில வரிகள் என் மனம் கவர்ந்தன.

‘ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்’

(பொருள் - காதலரிடையே மலர்ந் துள்ள அன்பு சற்று வாடுவதற்கு, ஊடுதல் காரணமாகஇருந்தாலும்அதனால்விளைகிற சிறிய துன்பம் பெருமையுடையதேயாகும்) இதற்கேற்றாற் போல இவர் சொல்வதைப் பார்ப்போமே!

‘ஊடல்களை நிரப்பி விட்டு ஏதும்
நடக்கவில்லையென
ஏகாந்தம் பேசுவாய் நீ
வலிகளை மறந்து உன்
வதங்களை ரசிப்பதற்கெல்லாம்
வாய்ப்பொன்று மட்டும் தா
உனக்கும் சேர்த்தே மூழ்கி
எழுவேன் இக்காதலில்’

காதல் என்பது இரு மனங்களின் பிணைப்பும், உயிருக்குள் வியாபித்து முக்தி பெறும் உன்னத நிலையுமாகும் என வேதாந்தம் சொல்லும்

‘அணைப்பதெல்லாம் காதல் அல்ல
அடைந்ததை உணர்வதே அந்நிலை
அருகிலிரு அல்லது இல்லாமல் போ
உன் ஆக்கிரமிப்பை
உடல் தர அவசியமில்லை
எனக்கானது எனும்
எண்ணங்கள் தந்து நிற்கும்
இன்னும் என்ன இப்போது போலவே
எப்போதும் விடாது காதல்’

காதலின் முதிர்ச்சி நிலையில் ஞானம் பெற்ற பக்குவத்தை, இவருடைய கவிதைகள் முழுவதும் ஒளிவட்டமாய் உணர்த்தி நிற்பது அற்புதம்!

தமிழ் இலக்கியத்துக்காக திருமதி சக்தி வழங்கியிருக்கும் இச் சிறந்த படைப்பு, இவர் பெயரை எண்திசையும் துலங்கச் செய்யும் என்பது திண்ணம். இவர் இதுபோன்ற படைப்புகளை தமிழ் உலகுக்கு வழங்க வாழ்த்துகிறேன்.

தமிழ்நெஞ்சம் அமின்






# இலக்கியத்துறையில் ஓர் இளம் தொழில்முனைவோர்

# முனைவர் லஷ்மி ப்ரியா அவர்களுடன்...

– நேர்காணல்

பேக்கிடெர்ம் டேல்ஸ் நிறுவனம் இன்று தமிழில் கதைகளோ, கவிதைகளோ எழுத எண்ணி, அதை நூலாக்கும் வழி தெரியாது தவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு, எழுத்துத் துறையில் நல்லதொரு பாதையைக் காட்டும் சிறப்பான பணியினை ஆற்றிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டின் கொடுந்தொற்றுக் காலத்தில் தொடங்கப்பட்ட இந்நிறுவனம் இன்று 150 நூல்களை வெளியிட்டு, பல கவிஞர்களை இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்தியிருக்கிறது.. இதன் வளர்ச்சியில் நிர்வாகியாக இருந்து முன்னெடுத்துச் செல்லும் முனைவர் லட்சுமிப்ரியா அவர்களும் அவரது தாயார் உமா அபார்ணா அவர்களும் இந்நிறுவன வளர்ச்சிக்கு தங்களை முழுமூச்சுடன் அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள் எனில் அது மிகையன்று. இவர்கள் வாயிலாக பல இல்லத்தரசிகளும், புதிய எழுத்தாளர்களும் தங்களது எழுத்தினை புத்தகமாக்கி மகிழ்ந்திருக்கிறார்கள்.

ஆங்கிலத்தில் முனைவர் பட்டம் பெற்ற இவர், பல்வேறு நாடுகளில் நடைபெற்ற இலக்கியக் கூட்டங்களில் கலந்து கொண்டு ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்த சிறப்புக்குரியவர். ஆங்கிலத்தில் நூலொன்றையும் வெளியிட்டு இருக்கிறார். ஆங்கிலத்தில் தமிழ் நூல்களை மொழிபெயர்ப்பும் செய்துள்ளார்.

இவருடன் இணையம் வழி நடைபெற்ற கலந்துரையாடல்களை நமது தமிழ்நெஞ்சம் வாசகர்களுக்காக இங்கு தருவதில் மகிழ்கிறேன்.

- அனுராஜ்

உங்களின் இளமைக் காலம் எங்கு எப்படி கழிந்தது..?

மிக எளிமையாகச் சொல்லவேண்டுமென்றால் என்னுடைய இளமைக்காலம் முழுவதும் நூலகத்தில்தான் கழிந்தது. எனக்கு நண்பர்கள் அவ்வளவாகக் கிடையாது அதனால் புத்தகங்கள் தான் எனக்கு எல்லாமாகவும் இருந்தது.

இலக்கியத்தின் மீதான பற்றுதல் எப்போது நிகழ்ந்தது..?

சின்ன வயசுலேர்ந்து எங்க அம்மா புத்தகங்கள் படிப்பதைப்பார்த்துருக்கேன். எங்க அம்மா படிப்பதைப்பார்த்து எனக்கும் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம் வந்தது. எங்க அம்மா பாலகுமாரன் சாரின் தீவிர ரசிகை அதனால் நானும் பாலகுமாரன் சார் புத்தகங்கள் படித்து வளர்ந்தேன்.

ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றதாங்கள், தமிழ் இலக்கியத்தின் பேரில் கொண்டுள்ள ஈடுபாடு குறித்து..?

இந்தக்கேள்வியே தேவையில்லை! நான் ஒரு தமிழ்ப்பொண்ணு ஆங்கிலக்கல்வி படித்திருந்தாலும் அம்மாவை யாருக்காவது பிடிக்காம போகுமா? அதனால தமிழ் இலக்கி யங்கள் மீது எனக்கு சிறு வயதி லிருந்தே ஈடுபாடு உண்டு அது இப்போ திடீர்னு வந்தது கிடையாது. ஆங்கில

TNCPCR உறுப்பினரான டாக்டர் சரண்யா ஜெயக்குமார் அவர்களுடன்.



இலக்கியம் படித்ததால் அது எனக்கு தமிழில் கவனிக்காமல் விட்டுப்போன விஷயங் களை கண்டறிய உதவியது. அந்த மாதிரி சிலவிஷயங்கள் நம்ம தமிழில் இருக்கு ஆனால் நாம ஏன் அதுக்கு முக்கியத்துவம் குடுக்கறதில்லைன்னு என்னைக்கேள்வி கேக்க வெச்ச சில விஷயங்கள் இருக்கு. இப்போ அறிவியல் புனைக்கதைகளை எடுத்துக்கிட்டோம்னா நிறைய அறிவியல் புனைக்கதைகளை திரு. சுஜாதா அவர்கள் எழுதி இருக்கிறார். ஆனால் தமிழில் படம்னு பார்த்தோம்னா நாம விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் அறிவியல் புனைவுப்படங்கள் இருக்கு. அதுதான் நான் சொல்ல வர்றேன். ஆங்கிலத்தில் நூறு படங்களுக்குப் பத்து படங்கள் அறிவியல் புனைவுப்படங்களாக இருக்கும்போது தமிழில் ஏன் இவ்வளவு குறைவா இருக்குன்னு தோணுது. அதுக்கு ஏதாவது செய்யணும்னு நினைக்கறேன். அதேமாதிரி இந்த சமூகத்தின் பிணைப்புகள் நிறைய நம்மகிட்ட இருக்கு. அது ஒருவிதத்தில் பார்த்தா அதுதான் நம்ம கலாச்சார சூழலை நிர்ணயிக்குது. சிலசமயம் அந்த சூழலை உடைக்க வேண்டியிருக்கு அதுக்கு எனக்கு ஆங்கில இலக்கியம் துணை நிற்கிறது, அப்படின்னு நான் நினைக்கிறேன்.

**இதுவரையில் தங்களது நிறுவனம் வெளியிட்டுள்ள நூல்களின் எண்ணிக்கை..?**

பேக்கிடெர்ம் டேல்ஸ் 2020 ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அதுக்கான விதை என்னோட சின்னவயசுலயே விழுந்ததுதான். நான் நிறைய முறைகளில் இந்தநிறுவனம்தொடங்கமுயற்சிசெஞ்சேன் ஆனால் அது ஒரு பெரிய இரும்புக்கதவு போல இருந்தது. அத்தனை எளிதா அது எனக்குத்திறக்கல. எழுத்தாளாராகணும்னு நிறைய ஆசைகளோட இருக்கறவங்கதான்

தாய்லாந்த்தில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்ததற்கு கிடைத்த அங்கீகாரம்



எங்களுக்கு குறிக்கோள். ஒண்ணும் வேண்டாம் அவங்க கதைகளை எங்களுக்கு அனுப்பினா போதும். கதைகள் நன்றாக இருந்ததுன்னா அவங்களுக்கு ஒரு பைசா செலவில்லாம நாங்க அந்தக்கதைகளை வெளியிடுவோம். அது யாராக இருந்தாலும் சரி நல்ல கதைகளோடு எங்களை அணுகினா நாங்கள் உதவத் தயாராக இருக்கிறோம். இதுவரை எங்கள் நிறுவனம் மூலம் நூற்றி முப்பது புத்தகங்கள் வெளிவந்துவிட்டன. பத்து மொழிகளில் நாங்கள் வெளியிட்டிருக்கோம்.

**தங்கள் நிறுவனம் வாயிலாக சாதிக்க நிர்ணயித்திருக்கும் இலக்கு என்ன..?**

ஒரு ரெண்டு திட்டம்னு இல்லை. பலத்திட்டங்கள் இருக்கு. இது வரைக்கும் நாங்க நிறைய புத்தகங்கள் வெளியிட்டிருக்கோம். யோசிச்சுப்பாருங்க! புத்தகங்கள்தான் ஒரு நாட்டோட பொக்கிஷங்கள் இல்லையா? ஆனால் புத்தகங்கள் எழுதற எழுத்தாளர்களோட நிலமையைப் பார்த்தீங்கன்னா அன்னிலேர்ந்து இன்னிக்கு வரை மாறவே இல்லை இல்லையா? ஒருசில எழுத்தாளர்கள் தவிர அவங்க என்னிக்குமே பணக்காரர்களா இருந்ததில்லை. இந்த நிலை மாறணும். உண்மையைச் சொல்லணும்னா அரசாங்கம் நல்ல எழுத்தாளர்களைத் தத்து எடுத்துக்கணும். எப்படி விளையாட்டு வீரர்களைத் தத்து எடுத்துக்க றாங்களோ அந்தமாதிரி எழுத்தாளர்களையும் தத்து எடுத்துக்கணும். இந்த மாதிரி பல விஷயங்கள் யோசிச்சுக்கிட்டே இருக்கறதுனால பேக்கிடேர்ம்டேல்சோட ஆசைன்னு பார்த்தீங் கன்னா சினிமாவுக்குள்ள போறது தான். ஏன்னா சினிமாதான் அவங்களுக்குத் தேவையான அதிர்ஷ்டத்தைக்கொடுக்கும், ஒரு நிலையான வாழ்க்கையைக்கொடுக்கும். வேற வேலைகளை செய்துக்கிட்டே கிடைக்கற நேரத்துல எழுதணுங்கற அவங்கநிலைமையைஎங்களாலகொஞ்சம் மாத்த முடியும். முக்கியமா என்னன்னா அவங்களுக்கு எழுதுவதற்கு அமைதியான ஒரு இடத்தை கொடுக்கவேண்டும். ஒரு



மலேசிய மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை வாசித்தபின் எடுத்த புகைப்படம். அருகில் அந்நாட்டின் எழுத்தாளர்.

எழுத்தாளரா என்னால புரிஞ்சுக்க முடியுது. குறைஞ்ச இடத்துல நிறைய சத்தங்களோட அவங்க எழுதறது எவ்வளவு கஷ்டம்னு எனக்குப்புரியுது. குடும்பத்தினர்கள் இந்த எழுத்தை எழுத்தாளர்களைப் பாராட்டி ஊக்குவிக்காத நிலைமைதான் இன்னிக்கு இருக்கு. எப்பொழுதும் சமைக்கற சத்தம், குழந்தைகள் சத்தம், அவ்வப்போது காலிங் பெல் அடித்து வரும் தொந்தரவுகள் இதெல்லாம் என்னால் சகிக்க முடியாத தொந்தரவுகள் அதனால அதுக்காகவே ஒரு ரிசார்ட் மாதிரி எழுதணும்னு நினைக்கிறவங்க வந்து எழுதறதுக்கான ஒரு இடம் அதை பேக்கிடெர்ம்ஸ் மூலமா கட்டித்தரணும் அங்க பெரிய பெரிய எழுத்துக்கள், நிறைய அருமையான சிந்தனைகள் உருவாகணும்ங்கறதுதான் எங்களோட ஆசை, பார்ப்போம்.

**தங்களது எதிர்கால திட்டங்கள் குறித்து தெளிவு படுத்த இயலுமா..?**

எதிர்காலத்திட்டம்னா தமிழ்ல ஏதாவது புதுமையைப் புகுத்தணும்னு பொதுவா எல்லாரும் சொல்றதுதான் ஆனால் அது



திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரியில் நடந்த விழாவில்..

கேரளாவில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்ட போது. நடந்த விழாவில்..



அப்படிக்கிடையாது. தமிழ்ல புதுமையை ஏற்படுத்தணும்னா தொழில்நுட்பரீதில ஒரு மாற்றம் வரணும். உதாரணத்துக்கு மதன் கார்க்கி சார். எனக்கு அவரை ரொம்ப ரொம்ப பிடிக்கும் ஏன்னா அவர் தொழிநுட்ப ரீதில தமிழை எப்படி மாத்தலாம், தமிழை எப்படி ஆப்ல கொண்டு வரலாம்னு இப்படி பல விஷயங்களை ரொம்ப நல்லா ஆராய்ச்சி பண்ணிக்கிட்டிருக்காரு. நான் அவரை எனக்கு ஒரு முன்மாதிரியா வெச்சுருக்கேன். இப்போ தமிழில் பாண்டில் வேலை பார்க்கணும்னா வெறும் ஒரு முப்பது பாண்ட் தான் இருக்கு. அதனால இந்த மாதிரி சில விஷயங்களை நாம முறியடிக்கணும் ஏன்னா தமிழ் அப்படிப்பட்ட ஒரு மொழி. அத்தனை கோடிக்கணக்கான மக்கள் வாழ்ந்து, பேசிக்கிட்டிருக்கற ஒரு மொழி அது. அப்படி இருக்கும்போது உங்களுக்கு தொழில்நுட்ப ரீதியிலே உங்களுக்கு உதவிகள்கிடைக்கணும்னா அதுக்குநிறைய பேர் தமிழைப்படிக்க ஆரம்பிக்கணும். நிறைய பரிசுகளை நம் தமிழ் வாங்கணும். புக்கர் அவார்டை தமிழ்நாட்டிலிருந்து வாங்கணும்கறது பேகிடெர்மசோட ஒரு பைத்தியக்காரத்தனமான ஆசை. அதை நாங்க அடைய முடியுமான்னு கூட எங்களுக்குத்தெரியலை. ஆனால் எனக்கு புக்கர் படிச்சதுலேர்ந்து ஏன் தமிழனால் ஒரு புக்கர் அவார்ட் கூட வாங்க முடியலைங்கற கேள்வி இருந்தது. ஒருவேளை பேகிடெர்ம் டேல்ஸ் அதுக்கு பதில் சொல்லும். அதை நோக்கித்தான் நாங்க பயணிக்கிறோம். நோபல் பரிசு எடுத்தீங்கனா இவ்வளவு பெரிய நாட்டுல ஒரே ஒரு நோபல் வாங்கி இருக்கோம். அதுவும் எங்கேயோ ஒரு ஓரத்துல. ஏன்? தமிழ்நாட்டுல அறிவாளிகள் இல்லையா? தமிழ்நாட்டுல ஏன் வாங்க முடியலை? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்றதுக்காகவே பேகிடெர்ம் டேல்சை ஆரம்பிச்சோம். அதாவது ஒரு எழுத்தாளரா நான் மட்டும் எழுதிக்குவேன், நான் மட்டும் சந்தோஷமா இருப்பேன் அப்படிங்கறது கிடையாது. என் கூட இருக்கறவங்க எல்லாரும் சேர்ந்து பயணிக்கணும். எல்லாராலயுமே எல்லாத்தையும் அடைய முடியுமான்னா? அதை உறுதியா சொல்ல முடியாது ஆனால் எங்க தரப்புலேர்ந்து ஒருத்தராவது சாதிச்சாக்கூட நாங்க ரொம்ப சந்தோஷப்படுவோம். இதுதான் எங்களோட எதிர்காலத்திட்டம்.

**தங்களின் தமிழார்வத்திற்கு காரண மானவர் எனில் யாரைக் குறுப்பிடு வீர்கள்..? ஏன்..?**

நான் தமிழை நேசிக்க காரணமே எனது தாயார் தான். அவர் தான் நான் செய்யும் சமூக, இலக்கிய பணிகளுக்கு முழுதும் துணைநிற்கிறார்.

**தங்களது நிறுவனம் வாயிலாக இப்போது செய்து கொண்டிருக்கும் இலக்கியம் சார்ந்த வேறு பணிகள்..?**



யூனிட்டி மகளிர் கல்லூரி, மன்ஜோரி விழாவில் ..

மற்ற பணிகள் எனில்..

கல்லூரி மாணவர்களுக்கு க்ரியேட்டிவ் எழுத்து பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறோம். முக்கியமாக டார்ஜிலிங், பூடான், இந்தோனேஷியா, மலேஷியா, நம்நாட்டின் பல பகுதிகளில். பல நாடுகளில் இலக்கிய கூட்டங்களில் இது குறித்து பேசியும் உள்ளேன். தற்போது நமது நிறுவனம் பள்ளி, கல்லூரிகளுக்கு தேவையான இலக்கியம் சம்பந்தமான நிகழ்ச்சிகளையும் செய்து தருகிறது.

**தங்களின் மொழிபெயர்ப்பு பணி குறித்து..?**

மொழி பெயர்ப்பு எனில்,

எழுத்தாளர் பவா செல்லத்துரை அவர்களின் பங்குக்கறியும் பின்னிரவுகளும் எழுத்தாளர் கார்த்திகை பாண்டியன் அவர்களின் மரநிற பட்டாம்பூச்சி , இவை இரண்டும் தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டது. முராகமி அவர் களின் ஸ்புட்னிக் ஸ்வீட் ஹார்ட் விரைவில் தமிழில் வெளி வரவிருக்கிறது. நீலம் தோய்ந்த புதினம் எனும் பெயரில் ஒருகதை ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**பேக்கிடெர்ம் டேல்ஸ் இதுவரை கடந்துவந்த பாதையில் சாதித்திருப்பது..? இனி சாதிக்க நினைப்பது..?**

இதுவரை 150க்கு மேற்பட்ட கதைத் தொகுப்பு, 10 கவிதைத் தொகுப்புகள், சிறுவர் கதைகள், மற்றும் சிறார்கள் எழுதிய கதைத்தொகுப்புகள், வெளியாகி உள்ளன. தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம் மலையாளம் என அனைத்து மொழிகளிலும் வந்துள்ளது.

நமது நோக்கம்...

மதம், இனம், மொழி பேதமற்ற இலக்கிய பணிகள் Pachydermtales

மலப்புரம் அரசு கலைக்கல்லூரி, கேரளா.





விழாவொன்றில் கிடைத்த அங்கீகாரம்.

இது ஒரு பெரிய குடும்பம். எங்களுக்கும், எழுத்தாளர்களுக்குமான உறவு புத்தகம் வெளிவந்தவுடன் முடிவடைவதில்லை. எப்போதும் தொடர்ந்து கொண்டிருப்பதையே விரும்புகிறோம்.

**இதுவரை பெற்ற விருதுகள் குறித்து..?**

தாய்உள்ளம் வழங்கிய இளம் தொழிலதிபர் விருது. சிறந்த ஆராய்ச்சி விருது ஆசிய நிறுவனத்தால் தாய்லாந்தில் வழங்கப்பட்டிருக்கிறது. ராஜ்கோட்டில் சக்தி கல்வி நிறுவனம் வழங்கிய சமூகப்பணிகளுக்கான விருது. இதை தவிர்த்து, உலக மனித உரிமை தளத்தில் இலக்கியத்திற்கான தூதராக அங்கீகாரம் வகிக்கிறேன்.

**இலக்கிய வளர்ச்சிக்கு பல்வேறு நாடுகளின் இலக்கிய அமைப்புகளுடன் இணைந்து பணிபுரியும் நிலை குறித்து..?**

அவசியம் தேவையான ஒன்று. நம்முடையபாரம்பரியமிக்கபெருமைகளை வெளிப்படுத்தும்களம்அதுவே. நம்முடைய மொழி சிறப்பு வாய்ந்தது. அதனை ஆய்வு கட்டுரைகளாக நான் பல வெளிநாடுகளில் சமர்ப்பித்திருக்கிறேன்.

17 சர்வதேச மாநாடுகளில் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். 23 ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். நேபாளம், பூடான், தாய்லாந்த், இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டு உள்ளதோடு, தாய்லாந்தைச் சேர்ந்த ஆசிய நிறுவனம் வாயிலாக சிறந்த ஆராய்ச்சியாளருக்கான விருதினையும்பெற்றிருக்கிறார். ஆங்கிலத்தில் மூன்று நூல்களையும் எழுதியிருப்பதோடு, தமிழ், ஆங்கிலம், இந்தி, பெங்காலி, கன்னடம், தெலுங்கு, மலையாளம், குஜராத்தி மொழிகளில் இதுவரை 150 நூல்களுக்கும் மேலாய் புத்தகங்களை இவரது பேக்கிடெர்ம் டேல்ஸ் நிறுவனம் வெளியிட்டு இருக்கிறது.

- அனுராஜ்



# வரலாறு

எது வரலாறு?

எதைச் சொல்லவேண்டும்
எதைச் சொல்லக் கூடாதெனத்
தீர்மானிப்பதா வரலாறு?
எது எப்படியோ
அதை அப்படியே
மொழிவதுதானே வரலாறு?

கட்டபொம்மு நாயக்கரை
எட்டப்ப நாயக்கர்தான்
காட்டிக் கொடுத்தாரெனக்
கதைப்பது மட்டுமா வரலாறு?!
இருவரும் யாரென்று
தெளிவோடு மொழிவதுதானே
வரலாறு!

கஜினி முகமதுவும்
கோரி முகமதுவும்
எப்படி வென்றார்களென
படிப்பது மட்டுமா வரலாறு?
ராஜ ராஜச் சோழனும்
ராஜேந்திரச் சோழனும்
எங்ஙனம் வென்றார்களென
எல்லோரும் படிப்பது(ம்)தானே
வரலாறு?!

ஆரியம் திராவிடமென
அள்ளியள்ளி விடுவோர்
அளப்பது மட்டுமா வரலாறு?
எழுச்சியோ வீழ்ச்சியோ
உண்மையில் நடந்ததை
உரைப்பது(ம்)தானே வரலாறு?

எதையும்
திரித்துத் திணிப்பதல்ல வரலாறு!
இருந்ததை
இருந்தபடிச் சொல்வதே வரலாறு!
சரி தவறல்ல வரலாறு!
உள்ளதை உரைப்பதே வரலாறு!



கொஞ்சம் தள்ளி நில்லுங்கள்
மறை(ந்)த்த வரலாறு!
வந்து கொண்டு இருக்கிறது..

கீழடி நாகரிகமாய்...

**- செ. இராசா**

# காணி நிலம் வேண்டும்

காணி நிலம் வேண்டும் - எமக்கெனக்
காணி நிலம் வேண்டும்
கூடி வாழ்ந்திடவே- அழகாய்
வீடும் அமைய வேண்டும் - நல்லதோர்
வீடும் அமைய வேண்டும்.

வீட்டு முற்றத்திலே- பலப்பல
பழ மரங்கள் வேண்டும்
வேண்டும் பொழுதினிலே - நற்கனிகள்
சுவைக்கும் படி வேண்டும்- நாமும்
சுவைக்கும்படி வேண்டும்.

சின்னக் குழந்தைகள் ஓடி விளையாட
வாசலொன்று வேண்டும்
ஓடிக் களைத்து அமர்ந்து இளைப்பாற
ஊஞ்சலொன்று வேண்டும் - மாமர
ஊஞ்சலொன்று வேண்டும்.

கொல்லைப் புறத்தினிலே நட்டுவைத்த - ஒரு
கொய்யா மரம் வேண்டும்
சின்னக் குழந்தைகள் பறித்து உண்டிட
காய்த்துக் குலுங்க வேண்டும் - கொய்யா
காய்த்துக் குலுங்க வேண்டும்.

மண்ணில் ஊறிடும் நல்ல நீர்பெற
கொட்டுக் கிணறு வேண்டும்
இறைவன் தந்த இயற்கை நீரைநாம்
அருந்தும் வரம் வேண்டும்- தினமும்
அருந்தும் வரம் வேண்டும்.

வேலி அருகினிலே - சிறுபயிர்கள்
விதைத்து விட வேண்டும் - தினம்
தேவைக்கு ஏற்ற காய்கறிகள் நாம்
பிடுங்கி சமைக்க வேண்டும் - சுவையாய்
பிடுங்கி சமைக்க வேண்டும்.

இரசாயன உணவு இல்லாது போகும்
காலமொன்று வேண்டும்.
எல்லோரும் நோயின்றி வாழ்ந்திட - இங்கோ
இயற்கைநிலை வேண்டும் - நல்லதோர்
இயற்கை நிலை வேண்டும்.

**மணிக்கூ கவி**
**நசீரா எஸ். ஆபிதீன்**



## ‘டீ’யும் ‘டீ’மாஸ்டரும்...!!!

ஆத்துறாப் போல
அதுதோனும்; ‘டீ’யைஓங்கிச்
சாத்துறாப் போலவே
சத்தமெழும்; - மாத்திமாத்தி
மேலிருந்து கீழாக
மேஜிக் அவன்பண்ண
காலில்லாக் காத்தாடும்
கண்டு!

‘டீ’யக் கயிறாத்
திரிக்குறான்; காத்துலயே
மேயவிட்டு லாவகமா
மீட்குறான்; - ஆயகலை
கத்தவன்லாம் சொக்குறான்;
கால்கடுக்க நிக்கிறான்;
ஒத்தவரி ‘டீ’க்கவிதைக்
கு!

அரைவட்டம் போடும்
அவன்கை; குவளை
நுரைமுட்டை போடும்
நொடியில்; - வரைவில்லாச்
சட்டம் அவன்சட்டம்;
சர்க்கார் அவன்மட்டும்;
லிட்டர் குறையாது
லே!

சொன்ன படிகேக்கும்;
சொன்ன படிஆடும்;
சொன்னபடி ‘டீ’அவனைச்
சுத்திவரும்; - கண்ணா!
கமிஷன் கொடுத்தானா?
காண்!புவிஈர்ப் புக்கு
டிமிக்கி கொடுத்தானே
டேய்!

‘டீ’யருவி கொட்டுதுபார்;
தீயுருகிச் சொட்டுதுபார்;
வாயருவி யார்க்கும்
வழியுதுபார்; - மாயவலை
பின்னிப் பெடலெடுக்கும்;
நொங்கி நுரையெடுக்கும்;
திண்ணமுடன் ஆத்துமிவன்
‘தில்’!

நீரை முறுக்குகிறான்;
நீட்டிச் சுருக்குகிறான்;
சாரைப்பாம் பாக்கிச்
சலுப்புகிறான்; - நீரை
விழுதாக்கி அந்தரத்தில்
வீசுமிவன் முன்னால்
பொழுதாகிப் போகிறதே
பொய்த்து!

அடித்தும் துவைத்தும்
அழகாய்ப் பிழிந்தும்
வெடிக்கும் நுரைப்பூ
விளைத்தும் - குடிப்போர்
செம!செம! என்றெல்லாம்
செப்பும் படிக்குக்
கமகம ‘டீ’வரும்நம்
கைக்கு!

தோராய மாகத்தான்
தொங்கவிட்டான் தோரணமாய்;
சாராய மாக்கும்அது
சத்தியமாய்; - ஆராய்ந்தால்
ஆல்கஹால் இன்றிஅட்‘டீ’
ஆடாது; சாடாது;
சீல்வைத்துச் சோதனைக்க
னுப்பு!

காந்தத்தை ‘டீ’யில்
கலந்தானா? போய்மீளும்
கோந்தைத்தான் ‘டீ’யில்
குழைத்தானா? - ஏந்தல்தான்
தந்திரமாய் நூல்கட்டித்
தாங்கிப் பிடித்தானா?
மந்திர மா?மாய
மா?

ஆவி பறப்பதால்
ஆவிகளின் வேலையோ?
காவிநிறத் தாலதன்பின்
காவிகளோ? - சாவிகொடுத்து
ஆட்டுவிக்கும் இந்த
அடுமடையன் BHD
கேட்டுவாங்கி வந்ததெந்த
‘ஸ்கூல்’!?

விதிதான் வளைகிறதோ
வில்லாய்? விதிசெய்
சதிதான் உடைகிறதோ
சில்லாய்? - இதுவிளங்கா
விஞ்ஞானம் நொண்டியிட,
மெய்ஞ்ஞானம் மண்டியிட,
அஞ்ஞானத் திற்கே
தறிவு!?

‘டீ’யா இதன்பேர்?
திருத்திச்சொல்; ஆடிடுதே
‘Toy’யாய் அவன்சொல்லைத்
தட்டாமல்; - நாய்வாலோ
நீண்டு வளைந்து
நிமிரா திருப்பதனால்?
காண்டில் குடித்ததோ
கள்!?

வால்நீண்ட வெண்ணீரோ?
வாய்பெருத்த வட்டாவின்
தால்நீண்ட தென்னவோ?
தண்டுவடம் - மேல்காட்டி
உள்ளே ஒளியும்’டீ’
உண்ண மலியும்’டீ’
தள்ள முடியாத
தப்பு!

காத்தில் குளிப்பாட்டிக்
காத்தில் தலைதுவட்டி
ஊத்திநுரை நாய்டுஹால்
உடுத்திவிட்டு - ஏத்திளழில்
மேவி மிடுக்காய்
மினுக்க மெனக்கிடுறான்
ஆவி பவுடர்
அடித்து!

பார்திரவ நூடுல்ஸை,
பைப்வடிவ கோல்ட்காசை,
நீர்சுரந்து நச்சரிக்கும்
நின்நாக்கை; - சோர்வா?
விளாசுநீ ‘டீ’யை;
விவரம்சொல் வேன்’டீ’
கிளாஸிலே ஊற்றிவைத்த
’கேர்ள்’!

தூக்கியாற்று கின்ற’சாயா’
சொல்லைத்தட் டாதசேயா?
வாக்கியமா? சூடான
வாத்தியமா? - ஆக்கிவிடும்
பைத்தியமா; நாடிப்
பருகவைக்கும் நைச்சியமா;
வைத்தியமா? ‘டீ’எவ்
வகை!

அகரம் அமுதன்



# சம்மணம் என்றால் என்னவென்று தெரியுமா?

சங்கடங்களை போக்க சம்மண மிடுங்கள்...

நாம் பொதுவாக எப்பொழுதும் காலை தொங்கவைத்து அதிகமாக அமர்ந் திருக்கிறோம்...

இரண்டு சக்கர வாகனத்தில் பய ணிக்கும் பொழுது, பேருந்தில், இரயில் வண்டிகளில், சினிமா தியேட்டரில், பள்ளி களில், அலுவலகங்களில், வீடுகளில்,

சோபாக்களில், கட்டில், நாற்காலி இப்படி நன்றாக யோசித்துப் பார்த்தால் நாம் அதிகநேரமாக காலைத் தொங்க வைத்துக்கொண்டே இருக்கிறோம்.

இப்படிக் காலைத் தொங்கவைத்து அமர்வதால் நமக்குப் பல உடல் உபாதை கள் உருவாகிறது...

இதற்குக்காரணம்என்னவென்றால் காலைத் தொங்கவைத்து அமரும்பொழுது, நமது உடலில் இரத்த ஓட்டம் இடுப்பிற்குக் கீழ்ப்பகுதியில் மட்டுமே அதிகமாக செல்கிறது...

நாம் காலை மடக்கி சம்மணம் போட்டு அமரும்பொழுது இடுப்புக்கு மேலே இரத்த ஓட்டம் அதிகமாகவும் வருவதற்கு வாய்ப்பு உள்ளது.

நமது உடலில் இடுப்புக்கு கீழே உள்ள கால்களுக்கு நடக்கும்பொழுது மட்டும் இரத்த ஓட்டம் சென்றால் போதும்.

மிக முக்கியமான உறுப்புகளாகிய சிறுநீரகம், கணையம், நுரையீரல், மூளை, கண், காது ஆகியவை இடுப்புக்கு மேல்ப்பகுதியில்தான் இருக்கிறது.

எனவே ஒருவர் காலை தொங்கப் போடாமல் சம்மணங்கால் போட்டு அமர்ந் திருந்தால் அவருக்கு சக்தியும், ஆரோக்கியமும் அதிகமாக கிடைக்கிறது.

எனவே, சாப்பிடும் பொழுதாவது கீழே உட்கார்ந்து காலை மடக்கி அமர்ந்துதான் சாப்பிட வேண்டும்.

ஏனென்றால், இடுப்புக்கு கீழே இரத்த ஓட்டம் செல்லாமல் முழு சக்தியும் வயிற்றுப் பகுதிக்குச் செல்லும்பொழுது நமக்கு ஜீரணம் நன்றாக நடைபெறுகிறது.

சாப்பிடும்பொழுது காலைத் தொங்க வைத்து நாற்காலியில் அமர்வதனால் இரத்த ஓட்டம் வயிற்றுப் பகுதிக்குச் செல்லாமல் காலுக்கே அதிகமாக செல்கிறது.

இந்திய வகை கழிவறை செல்லும் போது மட்டும்தான் காலை மடக்கி அமர்கிறோம் யுரோப்பியன் கழிவறையில்





அமரும் பொழுது குடலுக்கு அதிக அளவு அழுத்தம் கொடுத்தால் மட்டுமே கழிவு வெளியேறும்,

அதனால் தான் இப்பொழுது சிறு குழந்தைகள் கூட யுரோப்பியன் வகையினை பயன்படுத்துவதால் அவர்களால் தரையில் சுக ஆசனத்தில் அமர்வதற்கு முடியாமல் தவிக்கிறார்கள்.

ஒரு விஷயத்தைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களால் சம்மணங்கால் போட்டுக்கூட தரையில் உட்கார முடியவில்லை என்றால் இந்த உடம்பை எந்த அளவிற்கு கெடுத்து வைத்திருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

எனவே முடிந்த வரை காலை தொங்கவைத்து அமர்வதை தவிருங்கள்...

எனவே யுரோப்பியன் வகை கழிவறைகளை தவிருங்கள்...

கட்டிலிலோ, ஷோபாவிலோ அமரும் பொழுது சம்மணம் இட்டே அமருங்கள்...

சாப்பிடும் பொழுது தரையில் ஏதாவது ஒரு விரிப்பை விரித்து அதன்மேல் சம்மணங்கால்போட்டுஅமர்ந்துசாப்பிட்டால் சாப்பாடு நன்றாக ஜீரணிக்கும்...

சிலவீடுகளில்அதற்கு வாய்ப்பில்லை என்று இருந்தால் டைனிங் டேபிளில் அமர்ந்து காலை மடக்கி வைத்து அமர்ந்து சாப்பிட்டுக் கொள்ளுங்கள்...

சாப்பிடும் முறை...!

1. நின்று கொண்டு சாப்பிடும் பழக்கத்தை மாற்றி. குடும்பத்துடன் அமர்ந்து ஒன்றாய் சாப்பிடுங்க...

2. எந்த வகை சாப்பாடாக இருந்தாலும் நன்றாக மென்று, கூழாக்கி சாப்பிடுங்கள்.

3. பேசிக் கொண்டு, தொலைக்காட்சி, புத்தகம் பார்த்து கொண்டே சாப்பிட கூடாது...

4. சாப்பிடும் பொழுது இடையில் தேவையில்லாமல் தண்ணீர் குடிக்காதிங்க. கடைசியில் தண்ணீர் குடிக்க மறக்காதீங்க. போதிய அளவில் தண்ணீர் பருகுங்கள்.

5. அவசர அவசரமாக சாப்பிட வேண்டாம்.

6. பிடிக்காத உணவுகளை கஷ்டபட்டு சாப்பிட வேண்டாம்.

7. பிடித்த உணவுகளை அளவுக்கு அதிகமாகவும் சாப்பிட வேண்டாம்.

8. ஆரோக்கிய உணவுகளை அதிகம் சாப்பிட பழகவும்.

9. இரவு உணவில், முள்ளங்கி மற்றும் கீரை உணவுகளை சேர்க்க வேண்டாம்.

10. சாப்பாட்டுக்கு அரை மணிநேரம் முன்பு பழங்கள் சாப்பிடுங்கள். பின்பு பழங்கள் சாப்பிட வேண்டாம்...

11. சாப்பிடும் முன்பு சிறிது நடந்துவிட்டு பின்பு சாப்பிடவும். இரவு சாப்பிட்ட பின், நடப்பது நலம்.

12. சாப்பிட வேண்டிய நேரம். காலை - 7 to 9 மணிக்குள் மதியம் - 1 to 3 மணிக்குள் இரவு - 7 to 9 மணிக்குள் சாப்பிட்டு 2 மணி நேரம் கழித்து தான் தூங்க வேண்டும்.

13. சாப்பிடும் முன்பும் பின்பும் கடவுளுக்கு நன்றி சொல்ல மறக்காதீர்கள்.

அமருங்கள் சம்மணமிட்டு.




# நிசாந்தம்

## நூல் மதிப்புரை : வஃபீரா வஃபி

மொழியாளுமை என்பது ஒரு படைப்பை நிலைநிறுத்தி படைப்பாளியையும் அடையாளப்படுத்த உதவுகிறது. ஒரு படைப் பாளி மொழியைக் கையாளும் விதம், அவரை தனித்துவமாக மிளிர வைக்குமென்பதில் எந்த ஐயமும் இல்லை. அத்தோடு, இலக்கியங்களில் கவிதைகள் என்பன இன்றியமையாத ஒன்று. அவை தீந்தமிழில் பிரசவிக்கப்படுகையில், அவற்றின் அழகுக்கு ஈடு இணை இருக்கவே முடியாது. அந்த வகையில் மக்கொனையூராள் எனும் புனைபெயரில் எழுதிவரும் கவிஞர் ஃபர்ஹானா அப்துல்லாஹ்வின் 'நிசாந்தம்' எனப்படும் இக்கவிதைத் தொகுப்பானது சிறப்புப் பெறுகிறது.

தவிரவும் எந்த ஒரு படைப்பாக இருப்பினும், பொருந்தும் விதமாக மேற் கொள்ளப்படும் உவமான உவமேயங் களும் வார்த்தை அலங்காரங்களும் அழகைக் கூட்ட அணி சேர்க்கும். சமூகப் பிரச்சினைகளாகட்டும்; விழிப்புணர்வு தரும் ஆக்கங்களாகட்டும்; நறுக்குத் தெறித்தாற் போல் கையாளப்படும் வீரியமிக்க சொற்கள், நிச்சயமாக மக்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தி பாரிய சமூக மாற்றங்களுக்கு வழிகோலும்.

இக்கவிதைத் தொகுப்பில் கவிஞர் கையாண்டிருக்கும் மொழிவளம், மேன்மையும் செழுமையும் மிக்கதாய் கோலோச்சிக் கொண்டிருக்க, கவிநயமிக்க வரிகளில் மக்கள் இதயம் தொலைப்பது திண்ணம்.

இவ்வழகிய கவி ஆரத்திலிருந்து சில முத்துகளை உங்கள் பார்வைக்காகப் பெயர்த்தெடுத்து, வரிசைப்படுத்துகிறேன். ரசித்து மெய்மறக்கலாம் வாருங்கள்!

'பொய்மை கோஷம் தலைமேல் ஏற்று
என் தாய்தேசம் எரித்திடலாமோ?
தலைமை எல்லாம் தலை
கவிழ்த்திருந்தால் உண்மை
இங்கே உறங்கிடலாமோ'
'நால்வகை இனமும் நலமாகும்
நானிலத்தில் இதுவே வரமாகும்.
ஒருவருக்கொருவர் உறவாகும்
ஒற்றுமை எங்கள் உணர்வாகும்'

தேசாபிமானத்தின் வெளிப்பாடு இவ்வரிகளில் மிளிர்கிறது.

'இஸ்லாம் போற்றும் பெண்மை' எனும் கவிதையில் ஒற்றை வரி

'பெண்ணியம் போற்றி
கண்ணியம் போர்த்தி
புண்ணியம் சேர்க்கும் நெறியாகும்'

எனச் சொல்லி கற்றையாய் மனங்களை அள்ளிக் கொள்ளை கொள்கிறதே!

இயற்கையின் அழகுகளை கவிதையென மெய்மறந்தவர் கடைசியில்

'குழந்தையின் அழைப்பினில்
இவை அத்தனையும் மறந்தேன்.
குழந்தையே கவிதையென நான்
உணர்ந்தேன்' இவ்வரிகள் '

குழலினிது யாழினிது என்பார் தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்' எனும் குறளினை மீட்டிப் பார்க்க வைத்திடுதே நெஞ்சம்!

நிகற்பட ஆட்டத்தில் மோகம் கொண்ட இளம் வயதினருக்கான விழிப் புணர்வைத் தரும் கவிதையொன்றில் மனம் பறிகொடுத்தேன். அது இப்படிச் சொல்கிறது...

‘சிட்டுக்குருவியாய்
சிறகடிக்க வேண்டியவனடா
சிலந்தி வலைக்குள்
சிறையிருக்கின்றாயடா
நீ மனிதம் காக்க மலர வேண்டியவன்
நீ கரிக்கும் பாதையில்
மடிந்திடல் தகுமோ.........
இது கத்தி மேல் பயணம் ஓரங்கட்டு
இனி புத்தியைக் கொஞ்சம்
பட்டை தீட்டு’ சிறப்பு!

‘தீமைகள் நிறைந்தது தான் பூமி
நன்மைகளை நீ விதைத்துக் ாண்பி...
இளைஞனே நீ புறப்படு
இதயத்தில் நேர்மை புகுத்திடு
இறகுகள் நீ விரித்திடு
இலட்சியம் நோக்கிப் படையெடு’

இளைஞருக்கான எழுச்சி மிக்க வரிகளிவை!

‘வெஞ்சினத்தை பொசுக்கி விடு
வெற்றிப் பயணத்திற்கது போதும்
நஞ்சுவார்த்தை தவிர்த்துவிடு
நலம் வாழ அதுபோதும்’

என நலம்வாழ நல்வழியும் சொல்கிறார்

‘புத்தகங்களைக் காதல் கொள்’ கவிதை யில் அத்தனை வரிகளும் பொக்கிஷமாய் பாதுகாக்க வேண்டியவை.

‘நினைவுகளில் எல்லாம்
கார்கால மழைதூறும்
கனவிலும் கவிதைகள்
ஊர்கோலம் போகவரும்
புத்தகங்களை காதல் கொள்!
தனிமையின் தவிப்பில்
துணையாக நிலைக்கும்
இருள் சூழ்ந்த இரவில்
விளக்காக ஜொலிக்கும்
புத்தகங்களை காதல் கொள்’

புத்தகங்கள் வாசிப்பதை தவமாக, சுகானு பவமாக சிலாகித்துணர வைக்கும் வைர வரிகள்!

‘வாழ்க்கைப்படிகள்’ சொல்லும் பாடம் ‘சிந்தனைச் சிறகுகள் எல்லையின்றி விரியட்டும் என் சமுதாயக் கனவுகள் ஒவ்வொன்றாய் மலரட்டும்’ என்கிறது. பொதுநலமாய் சிந்திக்கும் இவர் கனவுகள் மெய்ப்படட்டும்.

“எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை / செய்நன்றி கொன்ற மகர்க்கு”

என்ற வள்ளுவர் வாக்கிற்கமைய, நன்றி யறிதலாய் ‘உதவிட்ட அந்தக் கரங்களுக்கு உயர்ந்திட்ட என் கரங்களைப் பிரார்த்தனை களால் நிரப்புகின்றேன்’ மனமுருகி வேண்டும் பிரார்த்தனைகளுக்கு வலு அதிகம் தானே?

போரினால் ஏற்கனவே பலகோடி இழப்புகள் கண்ட பூமியிது. ‘போர் எனும் பேரில் பாரினில் நாளும் பீறிடும் குருதியைத் துடைப்போம்’ என மக்களின் ஏகோபித்த குரலாய் இவர் வார்த்தைகள் பிரதிபலித்து, அடிமனதின் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றன.

இப்படி பலவுண்டு எடுத்துக்காட்ட. வியக்க வைக்கும் சொல்லாடல்கள் இத் தொகுப்பை உயிர்ப்புடன் நகர்த்திச் செல்ல, இந்தகவிதைத்தொகுப்பானது தமிழ் இலக்கிய உலகில் பன்னெடுங்காலம் பிரகாசிக்கும் என்று சொல்லலாம். அக்கினிச் சிறகுகள் வெளியீடாக வந்திருக்கும் இத்தொகுப்பின் ஆசிரியர் ஃபர்ஹானா அப்துல்லாஹ்வுக்கு நல்வாழ்த்துகள்! தொடர்ந்தும் இதுபோன்ற காத்திரமான படைப்புகளை தமிழ் இலக்கியத்துக்கு நல்க வேண்டுகிறேன்.

மனங்களை ஈர்க்கும் 30 கவிதைகளை உள்ளடக்கி வெளிவந்திருக்கும் இந்நூல் எல்லோரின் மனங்களையும் நிசாந்தப் படுத்தும்.

நூல் தேவைகளுக்கு தொடர்பு கொள்ள...

+94 0777254203

■

# விடியாத பகல்

லால்பேட்டை A.H.யாசிர்அரபாத் ஹசனி
அபுதாபி,

குளித்துவிட்டு முகக் கண்ணாடியில் தாடியைச் சீவிக் கொண்டு தொப்பியைத் தலையில் அணிந்து கொண்டு சந்தோஷமாய் வெளியேறினான் ஹபீப்.

நண்பர்களோடு நேரங்களை செலவளித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பத் தனது இருசக்கரத்தில் அமர்ந்தான். அவனது வாட்சப் குறுச் செய்திக்கான சமிக்கை தந்தது. வண்டியை ஓரம் நிறுத்தி.. வாட்சப்பை திறந்து பார்த்தான்.

அணையிலிருந்து வரும் தண்ணீரைப் போன்று.. பல குறுச் செய்திகள்... வந்து விழுந்தன. அதில் அவன் கண்ணுக்கு ஒரு குறுச் செய்தி முக்கியமாகப் பட்டதால் திறந்து படித்தான்... பின்பு மின்னஞ்சல் பக்கம் தனது பார்வை மேயவிட்டான் மலர்ந்த முகம், இருண்ட வானத்தின் நிறத்தை உடுத்திக் கொண்டது.

வீட்டுக்கு வந்தான். அப்படியே கட்டிலில் படுத்தான். கவலையை ஆடையாக அவனது முகம் அணிந்திருந்தது. சுவரில் தொங்கிய நாட்காட்டி பக்கம் சென்று நாட்காட்டியில் 22 ஆம் தேதிக்கான காகிதத்தை கிழித்து கையில் வைத்துக் கொண்டான்.

“ஏன் என்னாச்சி? ன்னு அவனது தந்தை கேட்டார்”..

“24 ஆம் தேதி காலை 7 மணிக்கெல்லாம் டூட்டியில் இருக்கனுமாம்... இல்லையென்றால் கேன்சல் பேப்பர் அனுப்பி விடுவோம்” என்று அவனது நிறுவனத்தின் மேலாளர் மின்னஞ்சல் அனுப்பியதைத் தெரிவித்தான்.

ஹபீப் துபையில் பத்து வருடமாக ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறான். 30 நாள் விடுமுறையில் வந்தவன்... தம்பி திருமணத்திற்காக விடுமுறையை நீட்டிக்க, தான் பணி செய்யும் நிறுவனத்திற்கு மின்னஞ்சல் செய்திருந்தான். அதை ஏற்காமல் அவனது நிறுவனம் அனுப்பிய மறுமொழி மின்னஞ்சல் தான் அது.

“அல்லாஹ் இருக்கான்.. இந்த வேலை உனக்கு கிடைச்சது பெரும் பாக்கியம்”. “நீ டிக்கட் போட்டு போறே.. வேலையைப் பார் என்று” தன்னை மீறி கண்ணில் வழியும் கண்ணீரை மகனுக்குத் தெரியாமல் துடைத்துக் கொண்டார் ...

அவனது மகள் அவன் மடியில் அமர்ந்து கொண்டாள். அவளுக்குப் போட்டியாக அவனது வீட்டில் வளரும் பூனையும் அவனது மடியில் வந்து அமர்ந்து கொண்டது. அதன் முடிகளைக் கோதி விட்டான்.. அதற்கு வசதியாக இருந்ததால்! அவனது மடியில் தாராளமாக உறங்க இடம் கேட்டது..

அவனது மகள் எழுந்து அம்மாவை நோக்கி நடந்தாள்.

குண்டுமணி சப்தம் கூட, இடி சத்தம் போல் கேட்குமளவிற்கு வீடு முழுவதும் அமைதி பரவி இருந்தது.

துபை செல்வதற்கான தயாரிப்பில் இறங்கினான்.

டிராவல்ஸில் 24 ஆம் தேதி சென்னையிலிருந்து இரவு புறப்பட்டு, துபையில் காலை 5 மணிக்கு சென்றடையும் விமானத்தில், பயணச்சீட்டு எடுத்துக் கொண்டான். அந்த விமானத்தில் சென்றால்தான் அவன் மேலாளர் கூறியபடி அதிகாலை ஏழு மணிக்குச் செல்லமுடியும்..

சிறிது தாமதம் குறுக்கே வந்தாலும்,

ஏழு மணிக்குச் செல்ல முடியாது என்பது தெரியும். என்ன செய்ய? சில மணிநேரம் தாய் நாட்டில் இருப்போமே என்ற ஆர்வம் அவனுக்குள் மேலோங்கிப் போனது. மனைவி, மகள் மற்றும் தாய் நாட்டை விட்டுப் பிரிதல் என்பது எவ்வளவு வலி மிகுந்தது? என்பது வெளிநாட்டில் பணி செய்பவருக்கு மட்டும் தெரியும்.

23 ஆம் தேதி இரவும் வந்தது.. அவனது மனதை ஏதோ கவலைகள் சிறைபிடித்துக் கொண்டது. எதிர்காலக் கனவு அவற்றின் பக்கம் கவனம் செலுத்து வதைவிட்டும் அவன் முகத்தை திருப்பியது.

தேவையான பொருட்களை அட்டைப் பெட்டிக்குள் வைத்து கட்டி வைத்திருந்தாள் அவனது மனைவி. தன் தந்தை தன்னை விட்டு வெகு தூரம் செல்லப் போவதை அறியாத இரண்டு வயது மகள் விளையாட்டில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தாள். பூனை வீட்டின் ஒரு பகுதியில் தூங்கிக் கொண்டிருந்தது.

வீட்டில் உள்ளவர்களிடம் முஸாபஹா செய்து கொண்டு... வீட்டைவிட்டு வெளி யேறினான். அவனது மகள் அவன் மறந்து விட்ட தொப்பியை நீட்டினாள். தந்தை தன்னை விட்டு வெகுதூரம் போவது தெரியாமல் .

மகளை இருக்கைகளால் உயர்த்தி முத்தமிட்டு தலையில் தொப்பியை அணிந்து வெளியேறினான்.

23 ஆம் தேதி இரவு... விமான நிலையத்தில் கூட்டம் மிகுந்து காணப் பட்டது. மக்கள் நிற்கும் வரிசையில் ஒரு இடத்தை பிடித்துக்கொண்டான். விமான நிலைய காவலாளியிடம்... பயணச்சீட்டு மற்றும் கடவுச்சீட்டைக் காண்பித்து விமான நிலையத்தின் உள்ளே சென்றான்.

இவனுக்கு முன்னாலும், பின்னாலும் மக்கள் அணிவகுத்து நிற்கின்றனர்.

எடை சரியாக இருந்தது போன்று விபரக் குறிப்புகளை ஒரு சிலர் வீட்டிற்குத் தகவல் கொடுத்துக்கொண்டு இருந்தனர்.

இவனுக்குப் பின்னால் நிற்பவர் ''பாய் உங்களைக் கூப்பிடுகிறார்'' என்றார். ''யார்?'' என்று கேட்க ..

''பாய் இதர் ஆவோ'' என்றார் இந்தி மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட விமான நிலைய காவலாளி.

அவரை நோக்கிச் சென்றான். அவனுக்கு முன்னாலும், பின்னாலும் யாரும் நிற்கவில்லை.சற்றுபயம்பற்றிக்கொண்டது. இரு கைகளையும் உயர்த்தி நிற்கக் கூறினார் அந்த காவலாளி. அனைவருக்கும் முன்னால் சோதனை செய்யப்பட்டான்.. இவனின் உடைமைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பல நூறு நபர்களைக் கொண்ட விமான நிலையத்தில் இவனை மட்டும் சோதிப்பதால், அனைவரின் பார்வைகளும் இவன் பாக்கம் திரும்பின.

சோதனை முடிந்து வரிசைக்கு மறுபடியும் திரும்பினான்.. இப்போது இறுதி ஆளாக நின்றான்.

Immigration counter லில் கடவுச் சீட்டோடு, பயணச்சீட்டை நீட்டினான்..

''ஏய் எங்கே போரே'' என்றார் Immigration சோதனை செய்பவர். ''சார் கொஞ்சம் மரியாதையாக பேசுங்க என்றான்''.

''தாடிவச்சிஇருக்க?எந்தஅமைப்பு''? என்று கேட்டார். ''நான் எதிலும் இல்லை. கொஞ்சம் மரியாதையுடன் நடத்துங்கள்'' என்றான். ''உனக்கு என்ன மரியாதை? ஏய் நீ சரிவர மாட்ட'' என்றவர்.. தனக்கு மேல் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு அழைத்தார்.

''எந்த அமைப்பும் சார்ந்தவனில்லை'' என்றான். அவர் காதில் கேட்க வில்லை.

இரண்டு அதிகாரிகள் விரைப்பாகக்



# அந்த நாள் ஞாபகம்!

காதறுந்த மஞ்சள் பை
இதுதான் அவன் புத்தகப்பை
தொளதொள கால்சட்டையில்
இறுக்கமான கறுப்புக்கயிறு
இதுதான் அவன் இடுப்பு பெல்ட்!

கூரை வேய்ந்த பள்ளியில்
வெளியே நிற்கும் வேப்பமரம்
மின் விசிறி இல்லாமல்
சிலுசிலுவென்ற காற்று!

அவனது மதிய உணவு
பெரும்பாலும் பழைய சாதம்
தொட்டுக்கொள்ள ஊறுகாய்
அதுவும் இல்லையென்றால்
உரித்த சிறு வெங்காயம் !

ஒரு ஐந்து பைசா
இதுதான் அவன் பாக்கட் மணி
அதில் பொரி உருண்டை
அவன் வாங்கும்போது
சுற்றி நிற்கும் நண்பர்கள்!

அவன் காக்காக் கடி கடித்து
கொடுத்த பொறி உருண்டை
சுவைத்து பார்த்துவிட்டு
புன்னகை புரியும் முகங்கள்!

பள்ளியின் ஓரத்தில்
நிற்கும் ஆலமரத்தில்
தொங்கும் தோசைக்கல்லில்
அடிக்கும் மணிச்சத்தம்!



அவன் மணியோசை
கேட்டு தேனீக்கள் போல்
'ஹையா' கூச்சலிட்டு
கலைந்து செல்லும்
மாணவ நண்பர்களோடு
கைகோர்த்து ஆடிப்பாடி
வீட்டுக்குப் பறந்து செல்வான்!

கவிஞர்
**பொன்விலங்கு பூ.சுப்ரமணியன்**

காணப்பட்டனர். விபரம் ஏதும் கேட்க விரும்பாதவர்களாக இருந்தனர். கோபம் அவர்களின் இயல்பு போல் இருந்தது.

"ஏய் என்ன பிரச்சினை? இங்கே வா" என்றார் ஒரு அதிகாரி.. "நீ என்ன அமைப்பு? பார்க்கத் தீவிரவாதி போல் இருக்க உள்ளே வா". என்றார் சப்தத்தை உயர்த்தி.

ஹபீப் அலைபேசியைப் பிடுங்கிக் கொண்டு ஒரு அறையில் அமர வைத்து... அவனிடம் எதுவும் பேசவில்லை. அவன் பேசுவதும் அவர்களுக்கு கேட்கவில்லை. கசப்பு மருந்து சாப்பிட முகம்போன்று அவர்கள் முகம் காணப்பட்டன. அவர்களின் பார்வையில் எள்ளல் மேலோங்கி இருந்தது.

தூக்கம் வராமல் இருக்க அடிக்கடி தேநீர் குடித்துக் கொண்டார் அந்த அதிகாரி. இதற்கிடையில் சிகரெட்டும் புகைந்து கொண்டிருந்தார்.

சில அதிகாரிகள் அவனது வாட்சப்... முகநூல் மற்றும் மின்னஞ்சல் போன்றவற்றை ஆய்வு செய்வதில் தங்கள் கவனங்களைக் கூர்மையாக்கினர்.

பின்னர், தனி அரையில் அமர வைக்கப்பட்டான். இன்னும் கண் காணிப்பு கேமராக்களுடன் கண்காணிக்கப் பட்டான். தன்னை சுற்றி ஏதோ நடக்கிறது? இவர்களின் சூழ்ச்சி களுக்கு நாம் தான் இரை என்பதை உறுதிப் படுத்திக் கொண்டான்.

"நீ யார்? உன் நண்பர்கள் என்ன வேலை செய்ராங்க?" போன்ற கேள்விகள் அவனின் மனக்கவலைக்குத் தீனி போட்டன.

குளிரூட்டிகளால் குளிரூட்டப்பட்ட அறையிலிருந்த போதும், வயதுக்கு வந்த பெண்போன்று நெற்றியில் வியர்வைத் துளிகள் எட்டிப்பார்த்தன.

"துபையில் வேலை செய்ரேன்...எந்த அமைப்பிலும் இல்லை. என் நண்பர்கள் வியாபாரம் செய்ராங்க. சிலர் வெளிநாட்டில் வேலை செய்ராங்க. எனக்குத் தந்தை,தம்பி, மனைவி மற்றும் மகள் உள்ளனர்" என்று கூறி முடிக்கும் முன்பு, "பிறகு ஏன் தாடி வச்சி இருக்கே?" என்று அதிகாரிகளின் முறையற்ற கேள்விகள் அவனுக்குள் பல அதிர்வுகளை ஏற்படுத்தின.

தன்னை திடநிலையில் கொண்டு

வந்து.. "அது நபியின் வழிமுறை" என்றான்.

"உன்பேரில் எத்தனை FiR இருக்கு?" என்று கேட்டார். மற்றொரு அதிகாரி..

"என் பெயரில் எதுவும் இல்லை... நான் நாளை காலை டூட்டியில் ஏறனும் இந்த ஃபிளைட்டை தவற விட்டால்! என் வாழ்க்கை வீணாகி விடும்" என்றான்.

"..உன் ஃபிளைட் போய் 2 மணி நேரம் ஆகுது" என்றார் சிகரெட்டின் சாம்பலைத் தட்டியவாறு..

"என் வாழ்க்கை போச்சு சார்..." என்று தண்ணீரைத் தவறவிட்ட மீனைப் போன்று துடித்தான். கதறி அழுதான்... அவனது கதறல்.. அவர்களின் காதுகளில் சிட்டுகளின் ரீங்காரம் போல் கேட்டது. அவன் அழுகை அவர்களுக்குள் எந்தவொரு சலனத்தையும் கொண்டுவரவில்லை. "இவனைப் பற்றி முழுசா விசாரிச்சாச்சிட்டேன்... சார... இவன் மேலே... எந்த Fir ரும் பதிவாகவில்லை..." என்று காண்ஸ்டபில் காதோடு, காது வைத்துச் சொன்னார்..

"அப்படியா?" என்றார்.. அவர் இரண்டு உதடுகளுக்கு மத்தியில் பிடிப் பில்லாமல் சிகரட் தொங்கி புகையைக் கக்கிக்கொண்டிருந்தது."

"ஆமாம் சார் ரொம்ப நல்லவனா இருக்கான். இவனை விட்டுவிடுவோம்". "சரி முழு அட்ரஸும், கையெழுத்தும் வாங்கிட்டு அனுப்புயா என்றார்" காஃபி குடித்த அடையாளம் அவர் உதட்டில் மீதம் இருந்தது.

ஒகே..."நீபோகலாம்"...என்றவுடன்... "தொப்பி, தாடி வச்சது குத்தாமா சார்... என் வாழ்க்கையை இப்படி வீணாக்கிடீங்களே".. ன்னு வெளியே வந்தான்..

"இந்தா உன் மொபைல் எடுத்துக்கோ.. இதுக்கு பிறகு அதிகாரிகள் கிட்ட வேகமா பேசாதே.. போ" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினார் அதிகாரி.

கையில் வாங்கிய அலைப்பேசியை பார்த்தான். பல தவறவிட்ட அழைப்புகள் வந்திருந்த தகவல்கள் இருந்தன. தன் பொருட்களை எடுத்து வெளியேறும் போது.. வேலையிலிருந்து நீக்கிய நிறுவ னத்தின் மின்னஞ்சல் முன்னால் நின்றது.. ■

# ஒண்ட முடியாத இடம்

தேவாலய
திராட்சை ரசத்தில்
தோய்கிற அப்பமாகிறேன்

காதல் சுவைக்கிறது
நம்மை
கருணையோடு

இதழ்கள் வெம்மையால்
இறுக்கம் இளக்கிவிடும்
உருக்காமலும் கறுக்காமலுமான
இதம் நிறைந்த உஷ்ணமது

காதல் உபாசத்தின்
தொடக்கமந்திரம் முத்தத்திலிருந்தே
தொடங்குகிறது

தேக கிரகத்தின்
யோகம் யாகம் போகம்
மூன்றுமானது காமம்

பாலை மணல் கலந்த
கடல்மணலை
பிரித்தெடுக்கும் பெரும்பணி முத்தம்

காற்று உப்பு உணவு நீர்
உயிர்களின் உரிமை காதல்
உரிமை முழக்கம்
முத்தசத்தம்

வலது இடது தலை கால்
இழிவு உயர்வு மான அவமானம்
கள்ளம் களவொழுக்கம்
இன்னும் இன்னும் ....

யாவற்றையும்
கடந்திருக்கிற
காதல்
உடனிருப்போம்

உளத்தூய்மை அற்றோர்
ஒண்ட முடியாத
இடம் இது

**சிங்கார சுகுமாறன்**

# தேசத்தைக் காத்தல் செய்!

- பாவலர் வையவன்

கண்திறந்து பார்கொஞ்சம் உன்தே சத்தை
காணுகின்ற இடமெல்லாம் குப்பை; செத்தை!
கண்கட்டிச் செய்கின்றார் பற்பல வித்தை
கன்னமிட்டுத் தின்கின்றார் மக்கள் சொத்தை
பண்பட்ட வாழ்வென்றார் பண்பா டென்றார்
பாரெல்லாம் போற்றுகின்ற ஞானம் என்றார்
கண்பட்டுப் போனதுவோ யாவற் றுக்கும்
கலங்கிடுதே நம்வாழ்வு எட்டுத் திக்கும்!

காடழிப்பு கடலழிப்பு காற்ற ழிப்பு
கண்ணில்பட்ட வளங்களுக்குக் கழுத்த றுப்பு
ஏடழிப்பு எழுத்தழிப்பு எண்ணம் கூட
எத்தனையோ வழிகளிலே இங்க ழிப்பு
வீடழிப்பு விருந்தழிப்பு வீங்கி நின்ற
விழுமியத்துப் பண்பாடு பலவ ழிப்பு
நாடழிப்பு குறித்திங்கே நம்மோர்க் குள்ள
நல்லபல கவலைகளும் சேர்த்த ழிப்பு!

தான்வாழ எதுகெடினும் கவலை இல்லை
தன்னலமே வாழ்வதனின் இலக்கு; எல்லை!
வான்புகழ்ந்த தமிழறங்கள் வாழ வில்லை
வளமாக அதுவாழ இடமும் இல்லை
தேன்சுமந்த ஈக்களென பொருளா தாரத்
தேன்கூட்டைக் கட்டுகிறாய் சுவைதா னில்லை
வான்சுமந்த மேகத்தில் மழையும் இல்லை;
வழியில்லை; வளமில்லை; வாழ்வும் இல்லை!

பத்துவிரல் படைத்ததுமேன்? உழைப்ப தற்கு;
பள்ளமேடு சரிசெய்து வாழ்வ தற்கு!
ஒத்தைவிரல் செய்கின்ற பெருந்த வற்றால்
உதவாத ஆட்சிகளில் சிக்கு கின்றாய்
எத்தனைநாள் இத்தவற்றை நீயும் செய்வாய்?
என்றேனும் இதன்விடிவை நினைத்த துண்டா!
புத்தனென்பாய் காந்தியென்பாய் புனிதம் என்பாய்
புரிந்துகொண்டுவாழ்ந்திடத்தான் மறுத்து விட்டாய்!

ஆஹாவென் றெழுந்ததுவோர் யுகப்பு ரட்சி
ஆனாலும் இம்மண்ணில் கடும்வ றட்சி
ஓஹோவென் றேதரகர் வாழு கின்றார்
ஓட்டாண்டியாய் மக்கள் வாடு கின்றார்
வாகாகப் பலதிட்டம் வகுத்துக் கொண்டு
வளர்ந்துவிட்ட உலகமயம் நேரில் கண்டாய்
ஆகாகா இது நமக்குக் கேடு கேடு
அடித்துஇதை வீழ்த்துகின்ற வழியைத் தேடு!

தனியொருவன் உணவின்றி வருந்தக் கண்டால்
தரணியிதைத் தவிடுபொடி ஆக்கு என்றான்
இனியொருநீ விதிசெய்ய வேண்டும்; இங்கு
இருப்பவர்க்கு எல்லாமும் வேண்டும்; யாவும்
தனியுடைமை ஆவதற்குத் தடைகள் போடு
தடுப்பவனைத் தயங்காமல் தலையில் போடு
கனிநிகர்த்த பாரதியில் கவனம் வைநீ
கனவெல்லாம் நனவாகும் தேசம் செய்நீ!

# பொறுமை

நம்பிக்கையை ஏற்படுத்துகிறது
பொறுமை
காதலின் காலத்தை
கவிதையாக்குகிறது
பொறுமை
என்பது அழியாத விதை
அதிலிருந்து நிச்சயம் நிறைய மகசூல்.
பொறுமை
ஒரு மந்திர நீர்
முத்துக்கள் கோடி முக்குளிக்க..

இயேசுவின் பொறுமை
சிலுவையில் ...
ஆனால் கிறிஸ்தவம்
இன்று உலகெங்கிலும்...

சீதாவின் பொறுமை
நெருப்பில் சோதிக்கப்பட்டது...
ஆனால் கற்புக்கரசி என்றால்
அவளன்றி யார்?

புத்தரின் பொறுமை
யசோதைக்கு சாபமாக...
ஆனாலது
எத்தனையோ பேருக்கு
ஞான வெளிச்சமாய்....

பொறுமையைக் கற்றுக்கொள்ள,
நிறைய
பொறுமை தேவை
நான் எப்போதும் தயாராக
இருக்கிறேன்.

**- ராஜூ ஆரோக்கியசாமி**

# எதிர் பாராத திருப்பம்

சார், சார் என்ற குரல் கேட்ட ராகவன், வாசலில் பார்க்க, ஒரு கல்லூரி மாணவன் ஒருவன் நின்று கொண்டு இருந் தான்.

என்ன விஷயம் என ராகவன் கேட்க உங்களைப் பார்க்க வந்தேன் என்று சொன்னதும், சொல் என்றார் ராகவன். உன்னை மாதிரி ஆட்களுக்கு இதே வேலையாகப்போய் விட்டது என்று சலித்தார் ராகவன்.

வந்த கல்லூரி மாணவன் சார் நீங்கள் நில்லுங்கள் உங்களை நமஸ்காரம் செய்கிறேன். எனக்கு அரசு வேலை கிடைத்து விட்டது. எனக்கு கல்லூரியில் படிக்கும் காலத்தில் நீங்கள் உங்கள் ஒய்வூதியத்தில் இருந்து எனக்கு பண உதவி மற்றும் புத்தகங்கள் வாங்கி கொடுத்து உதவி செய்தீர்கள். உங்களை மாதிரி நானும் உதவி செய்ய நினைக்கிறேன். நீங்கள் தான் என் ரோல் மாடல் என்று சொல்லி விட்டு கிளம்பினான்.

ராகவன் அப்போது தான் அவனைப் பார்த்து ரொம்ப சந்தோஷம் நல்ல விஷயம் இப்போது உன்னை பார்த்து எனக்கு பெருமையாக இருக்கிறது என்று சொல்லி வந்த இளைஞனை அனுப்பி வைத்தார் ராகவன். அந்த இளைஞன் போன பின்னர் அந்த இளைஞன் பெயர் கண்ணன் ரொம்ப வறுமை, கல்லூரி செல்ல நல்ல உடை கிடையாது. ராகவன் உடை, பீஸ் கட்ட பணம் மற்றும் புத்தகங்கள் வாங்க புத்தக கிளப் மூலம் வாங்கி தந்தார். அந்த இளைஞன் போல் நிறைய இளைஞர்களுக்கு உதவி செய்தார் ராகவன் ஆனால் இது வரை யாரும் அவரை வந்து பார்த்ததில்லை, அதில் வித்தியாசமான முறையில் இருந்தவன் கண்ணன்.

**- பாரதிராஜன் (எ) ரங்கராஜன்**

# எழில் கொஞ்சும் தமிழ் நெஞ்சம்

தமிழ் நெஞ்சம்
அமிழ் தென்றும்
எழில் கொஞ்சும்
இதழ் தன்னில்
கமழ் மணமே
கவி நெஞ்சம்
புகழ் பரவிட
புவி யெங்கும்
அகழ் ஆய்வென
அருங் களஞ்சியம்
புகழ் ஓங்கியே
புவி யாண்டிட
நிகழ் காலமும்
நீள் நெடுநாளும்
முகிழ் மொட்டே
விரிந்து சிறந்திட

இனிய வாழ்த்துகள்
இதயம் தொட்ட
இதழ்சார இணையாற்றிய
அனைத்து
உள்ளங்களுக்கும்

வாசன்சாவி
சென்னை



# இயற்கையில் மயங்கினேன்

வானத்தின் கூரையிலே
நீல வர்ண தோற்றம்!
கண்சிமிட்டி ரசிக்கிறதே
தாரகைகள் கூட்டம்!

செடிப் பூத்த மலருக்கு
குழலேற நாட்டம்!
நதி போடும் ஜதி கேட்டு
நாணல் தலையாட்டும்!

தவழ்ந்து வரும் முகிலினங்கள்
மலைமீது மோத!
திகிலடைந்து முகிலுடைந்து
அருவியாக மாற!

காடுமலை ஊடுருவி
ஓடிவரும் ஊற்றே!
ஆடும் இலை நாட்டியத்தை
தோற்றுவிக்கும் காற்றே!

கால் இடறி பால்நிலவு
கடலில் விழும் காட்சி!
கனி தூங்கும் மரத்திலெல்லாம்
அணிப்பிள்ளை ஆட்சி!

மரக்கிளையில் கூடுகட்டி
தேன் வளர்க்கும் பூச்சி!
கிளிப்பிள்ளை குஞ்சிடத்தில்
கொஞ்சுகின்ற பேச்சு!

அணில் கடித்த பழங்களுக்கு
சுவை கூடிப் போச்சு!
அதிசயத்தில் ஆழ்ந்தமனம்
அடைந்தது பெருமூச்சு!

நோய் தீர்க்கும் மூலிகை
ஏராளம் உண்டு!
பல அடுக்கு மாளிகைகள்
மலைமீது கண்டு!

இயற்கையதன் அற்புதத்தில்
பிரமித்து போனேன்!
புவியழகில் மதிமயங்கி
கவி புனையலானேன்!

**- கவிஞர் லீ.லியாகத்அலி**

## எதிர் நோக்கியே...!

இரவின் மௌனத்தைக்
கலைத்து விட்டு
விடியலைப் பாடும்
பூபாள ராகங்கள்!

அண்டங்கள் தாண்டியும்
இலக்கை நோக்கியே
பயணித்துச் செல்லும்
வலசை பறவைகள்!

மலைப் பாதையின்
இருமருங்கிலும்
வசந்தத்தைத் தூவும்
சாலை மரங்கள்!

தூரத்துக் குடிசை வீட்டில்
பத்திரமாய்க் கூடுகட்டி
வாழும் சிட்டுக்குருவிகள்!

உதிர்ந்த நிலையிலும்
கிளை முழுதும்
பச்சையத்தைத் தேடிப்
பூத்திருக்கும் பூக்கள்!

அத்தனை அழகையும்
மொத்தமாய்த் தந்து
தினமும்...
நகரும் இயற்கை!

பனி விழும் பொழுதாய்
மனம் ரீங்காரமிடுகிறது

**நெல்லை.க.சோமசுந்தரி**





## அறிவியல் அழகி....

அடி ஜெர்மன் ஆப்பிள் சின்றல்லா
விழி ஜெலட்டின் குச்சி செங்கோலா
இடை வளைஞ்ச கோபுர பைசாவா
இதழ் சாஞ்சு ருசிக்கிறேன் பீசாவா

மெல்போர்ன் மார்பு ஆடு களம்
ஆட மேஷ ராசி கேட்டா வரும்
செல்போன் சிம்மாய் சேரும் வரம்
என் செல்கள் கேட்குது ஆதாமிடம்

காஷ்மீர் ரோஜா கனி உதடு
அந்த ஜேஸ்மின் பல்லால் இடும் வகிடு
என்னுள் பாசிச முத்தம் படைகளிடு
என்னை பச்சை இரத்தம் பாய்ச்சவிடு

ஆல்பா சிகர மலை முகடு
தசை ஆடை மூடிய பொன் தகடு
சிலிக்கான் சிலைமேனி சிதை களிடு
ஜனிக்க பெலிக்கான் விரல்களால் மீட்டுக்கொடு

நலம் பயக்கும்
**மன்னை மணிமாறன்**



பெலிக்கான் - நீண்ட அலகுள்ள பறவை

பல்சுவை
# தமிழ்நெஞ்சம்
www.tamilnenjam.com ஜனவரி 2022

அவளின் விம்பம்
பிடிக்கக் கைவைத்ததும் கலங்கினாள்
தண்ணீரில் நிலவு

அவள் இறங்கினாள்
குளம் அழகாய் மாறியது
உள்ளே வெண்ணிலவு

குளத்து மீன்கள் ஓட்டம்
வெட்கத்தில் அசைகிறது
வெ(பெ)ண்ணிலவு

அழகிய குளியல்
கைவைத்துக் கலக்கி விட்டேன்
நடுங்கினாள் வெ(பெ)ண்ணிலவு

நிறைகுளத்தில் நீராடி
தயங்கியபடி ஆடுகிறது
வெண்ணிலவு

**- தமிழ்நெஞ்சம் அமின்**

